249

ஸ்ரீ

மகாவிந்தநா

தருமர் வைகுந்த ந

வழங்குகிற

# தரும நாட



25 AUG 19

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1930.

இதன் விலை அணா 10.

O-,892M,T
N30
85896

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

மகாவிந்தநாடகமென்றும்

தருமர் வைகுந்த நாடகமென்றும்

வழங்குகிற

# தரும நாடகம்



சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1930.

இதன் விலை அணா 10.



ஸ்ரீராமஜெயம்.

# சாற்றுக்கவிகள்.

கோயமுத்தூரிலிருக்கும்

பெருந்துறை ஈசுவர அய்யர் குமாரர்

ம-௱-௱-ஸ்ரீ

## கிருஷ்ணய்யர் அவர்கள் இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சந்தனுவின்மரபில்வருபாண்டவர்வைகுண்டமதிற்
        சாருங்காதை
செந்தமிழினாடகமாய்ப்படிமிசையில்விளங்க
        வழூஉச்செறிவைநீக்கிச்
சொந்தமுறுகல்யாணசுப்ரமணியையனெனுஞ்
        சுகுணன்கோவை
வந்தகருணீகர்தருகுமரனெழுதாவெழுத்தில்
        வழங்கினானே.

சாமக்குளம் வித்வான்

ம-௱-௱-ஸ்ரீ, காசிராமச்சந்திர அய்யர் அவர்கள்

ஜேஷ்டகுமாரர் ம-௱-௱-ஸ்ரீ

## சுப்பிரமணிய அய்யர் அவர்கள் இயற்றியது.

கலிமுதலிற்பாண்டவர்கள்துறக்கமடைந்திடுமரிய
        கதையைப்பார்மேல்
ஒலிகுலவுநாடகமாய்விளங்கவழூஉப்பொலிவகற்றி

மலிதமிழ்தேர்கலியாணசுப்ரமணியையனென
வழங்குமேலோன்
நலிவறுநல்லெல்லையளருள்குமரன்பதித்திந்நா
ணலம்பெற்றனே.

கோயமுத்தூர் சுக்கிரவாரப்பேட்டை

ரா-கு-பிள்ளையார் செட்டியார் குமாரர்

அய்யாவுசெட்டியார் அவர்கள் இயற்றியது.

நலமிகுத்தபாண்டவர்கள்வைகுண்டம்புகுங்கதையா
நாடகத்தை
புலன்மிகுத்தபிழைநீக்கிச்செந்தமிழாலுலகத்தார்
புகலத்தந்தான்
நலன்மிகுத்தசெல்வனுயர்கோயமுத்தூரெல்லையன்
ஈன்றதாளை
வலன்மிகுத்தகலியாணசுப்பிரமணியையனென்னு
மாண்புளோனே.

ஷையூர், குருவிசெட்டியார் குமாரர் மஹாவித்வான்

கணபதிசெட்டியார் அவர்கள் இயற்றியது.

என்னசொல்வோமிரும்புவிதன்னிலே
முன்னந்தன்மர்முராரியினற்பதம்
மன்னுமாறைதமிழ்வனநாடகம்
சொன்னவன்கலியாணசுப்பேந்த்ரனே.

மஹா_வித்வஜன கோலாகல சிரோமணி

ம-ா-ா-ஸ்ரீ இடிகரைபஜனை

இரங்கசாமிநாயகர் இயற்றியது.

கலியானவிக்காலந்தனிலேந்தாமமேவதமதிற்காணுந்தர்மர்
கலியானதறநீக்கிப்பரமபதஞ்சென்றதொருகதையைப்பார்மேல்
கலி[illegible]லாமொட்டெடுப்பநாடகமாய்க்கருதித்தந்தான்
[illegible]ஐயனெனுங்கோவைநகர்தலைவலோனே.



ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

வைகுந்த நாடகம் என்றும்

மகாவிந்தநாடகம் என்று வழங்குகிற.

# தரும நாடகம்.

## கணபதி தோத்திரம்.

திருவுலவுமத்திபுரத்தரசுசெங்கோல்
    திக்குவிஜயஞ்செலுத்துந்தருமராஜன்
பரமபதமுதவுகதிதிருவைகுந்தப்
    பதியுலவுசரிதையைநாடகமாய்ப்பாட
புரமதனையெரித்தவனைத்தழுவுந்தேவி
    புத்திரனேசரிந்ததொந்திப்பொருளேயெந்தன்
கரமதனிலுதவிநிதம்நிற்கவேணும்
    கருணைமிகுவிகடதடக்கடவுளானே. 1

## முருகர் தோத்திரம்.

அனைவர்புகழதிவீரப்பெருமைநீதி
    அத்திபுரத்தரசுபுரிதருமராஜன்
மனகனதைவைகுந்தப்பதிதான்சென்ற
    மகாவிந்தசரிதையைநாடகமாய்ப்பாட
வினையகலமிடியகலவிதனந்தீர
    மிக்கதுணைநீநமக்குநிற்கவேணும்
கனகசரவணமுருகாகுகனேவள்ளி
    கன்னிமகிழ்சுப்பிரமணியக்கடவுளானே. 2

## சரஸ்வதி தோத்திரம்.

அத்திபுரம்நீதிநெறிதவறிவிடாமல்
ஆண்டபின்புமாயவன்றன்னருளினாலே
பத்தியுடன்பஞ்சவர்கள்செயங்கொண்டாடும்
பாரதத்தின்சரிதையைநாடகமாய்ப்பாட
வித்தையமர்தக்குடத்தைவனத்தினாட்டி
வேணுமென்றபோதள்ளிவிருப்பமாக
சத்தியநாவிற்குதவியிருப்பாய்வேதன்
தன்மனைவிசெஞ்சதங்கைத்தாளினாளே. 3

## அவையடக்கம்.

ஆதரவாய்ப்பஞ்சவர்கள்நகரம்நீங்கி
அன்றுபுவியளந்தபதந்தன்னையேற்றி
மாதொருத்திதுடர்ந்திடவைகுந்தஞ்சேர்ந்த
மகாவிந்தசரிதையைநாடகமாய்ப்பாட
ஏதும்வகையறியாதசிறியேனுங்கள்
இணையடியேதுணையெனவின்றெழுதுஞ்செஞ்சொல்
வாதுகவித்தமிழ்சொரியும்புலவீர்பெற்ற
மைந்தர்புகழ்மழலையெனவளங்கொள்வீரே. 4

## நூற்செய்தகாலம்.

ஏககலியுகசகாப்தத்துகையுநாலாயிரத்துத்
தொளாயிரமுமிருபத்தெட்டே
ஆகவியவருஷ மதில்விளங்குந்திங்கள்
ஆவணிதேதியுமிருபத்தாறுநாளில்
வாகுசெறிபூமிதனில்வளம்பெற்றோங்கும்
மகாவிந்தசரித்திரநாடகத்தின்செஞ்சொல்
பாகுமொழியமிர்தகவிவரதாசன்
பைந்தமிழிற்புவியதனிற்பாடினானே.

## தோடயம்.

வாசனைசெய் காசினியில் வாகுபெறயோகநிறை
வந்துலவுதருமர்மகாவிந்தநாடகத்தை ஆ-ஆ-ஆ

வீசுபுகழாசைமன மீறுதமிழ்கூறுதற்கு
விகடதடகம்பகும்ப வேழமுகன்றுணையே ஆ-ஆ-ஆ

மதியுலகுவைகுந்த பதியுலவுபாண்டியர்கள்
வந்துலவுதருமர்மகா விந்தநாடகத்தை ஆ-ஆ-ஆ

அதிகபுவிதனில்யானும் பதியதமிழ்கூறுதற்கு
ஆறுமுகனெமதுமன தாறுமுகன்றுணையே ஆ-ஆ-ஆ

திறமைமிகுபாண்டவர்கள் அருமையரிபத்திதனிற்
சிந்தைசெயும்தருமர்மகா விந்தநாடகத்தை ஆ-ஆ-ஆ

தருமநெறிபொருமைதமிழ் சாடைதனைப்பாடவரம்
தருபதமுங்கும்பமுனி யிருபதமுந்துணையே ஆ-ஆ-ஆ

சாற்றுகதிபாண்டவருக் கேற்றகதியொருதிருமால்
தந்தகதிதருகுமகா விந்தநாடகத்தை ஆ-ஆ-ஆ

சேர்த்தகதிதரணிதனில் வாய்த்தசெந்தமிழ்துதிக்க
திருத்தமொடுபாவலர்கள் பொறுத்தருளுவீரே ஆ-ஆ-ஆ

## மங்களம்

சொல்லும்புவிவாசனுக்கு துரோணரிடசீஷனுக்கு
சல்லாபநேசனுக்கு மங்களம் நிதி
தருதர்மராசனுக்கு மங்களம்

வேண்டுவார்நேயனுக்கு பாண்டவர்சகாயனுக்கு
தூண்டுசொல்வாசனுக்கு மங்களம்-எங்கும்
துதிதர்மராசனுக்கு மங்களம்

தருசேதிராச...க்கு விருதாதிநேசனுக்கு
...னுக்கு மங்களம் தர்மம்
...னுக்கு மங்களம்

...டியனுக்கு வளரரவக்கொடியனுக்கு
...கு மங்களம் திரு
...க்கு மங்களம்

## அகவல்

சீர்சிறந்துலவுந் திருப்பதந்துணையாய்த்
தார்சிறந்துதவி தருமத்திபுறத்தில்
தருந்துணை தம்பியர் தர்மராசனுமாய்
இருந்ததிசெங்கோ லிலங்குநாளையிலே
தங்கமாய்த்துரியோ தனனுடன்கூடி
சொக்கட்டாடித் தோர்வைகண்டதனல்
மனத்துயராக வருஷமீராறும்
வனத்திலிருந்து மாயனைத்தூது
போவெனப்பங்கு பொன்னகர்பாதி
தாவெனக்கேழ்க்கத் தான்றராதரிந்து
வேடமேமாறி விராடமாபுறத்தில்
ராசனைக்கண்டு நலம்பெறவிருந்து
திசைபுகழ்வீரர் சென்றுதான்பிடித்த
பசுநிறைமீட்டு பற்றியேவிரைவில்
அதிதுஷ்டவீரன் அத்திநுபுரத்தில்
பதினெட்டுநாளைப் பாரதமுடித்து
தருதுணைகீர்த்தி தாங்கியேயத்தி
புரத்தினிற்செங்கோல் பொருந்தியேமேன்மை
சட்டமாய்மகிழ்ந்து தர்மராசனுக்கும்
பட்டங்கட்டிப் பாரளந்தவனும்
துர்ச்சனமனுகாத் துவாரகாபுரியில்
பச்சைமாலாலின் பள்ளிகொண்டிருக்க
வரிசிலேவேடன் மானதைத்துரத்தி
அடியவன்றுயிலும் ஆலத்தைநோக்கி
புவியினையளந்த பொற்பதம்பொன்மான்
செவியெனநினைந்து சிலேதனைவளைத்து
விட்டிடுங்கணைதான் மெல்லியபாதத்தில்
தட்டடித்துருவிச் சாறுவிட்டொழுக
கண்டொருவேடன் கால்கரகடுங்கி
மண்டியேயலர மாயவனமர்த்தி
என்முனேவந்த இருப்புலக்கையினுல்
வாகுடனுரைத்து வைகுந்தபதிக்கு
போகவென்றெண்ணிப் பொருந்துபாவ

வீமனை வில்லியன் விஜயனை மட்டும்
மேன்மையாயனுப்ப வேடனுக்குரைத்த
சொல்லதைவேடன் சுருக்கினிலுரைக்க
வல்லவன் றருமன் வாக்கினுத்தரவாய்
விதந்தருவீமன் விஜயனுங்கண்ணன்
பதந்தனைப்போற்றிப் பணிந்துநிற்பளவில்
காலமேநாளை கலியனும்வருவான்
நீலமேநீங்கள் நிற்பதுமறிது
பாங்கின்வைகுந்த பதிக்குநாம்போவோம்
நீங்களும்வருவீர் நிற்கவெண்ணுமல்
மெய்யெனவீமன் விஜயனின்பலத்தை
கையினுல்வாங்கிக் கடந்துவைகுண்ட
பதிசெல்லத்துவார பதியினிற்கள்ளர்
நிதிகொள்ளையிடுகவ னீதியும்பார்த்து
வந்துகண்டண்ணல் மலரடிபோற்றி
விந்தையாய்நடந்த விதமதையுரைக்க
நின்றுரைவைகுந்த நீதியைத்தருமர்
கண்டுளமயக்கிக் கண்கள்நீர்சொரிய
சுந்தரவல்லித் துரோபதைபுலம்ப
குந்தமாதேவியுங் கூடியேபுலம்ப
அம்புவிபுகழும் அண்ணனைத்தாயை
தம்பிமார்தேற்றித் தானிருந்தளவில்
துய்யவன்கொலுவில் தோர்வழக்கான
அய்யமர்வழக்கை ஐந்துநாளிருந்து
புலியினைக்கண்ட புல்லர்போல்வந்த
கலியனைக்கண்டு கால்படபடத்து
பரிசித்திற்கிசைந்த பட்டமுங்கட்டி
வாழ்பதிநீக்கி மாயவன்கமலத்
தாழ்பதிநீக்கி மாயவன்கமலத்
தான்பதிதேடி தருமன்வில்விஜயன்
நதிபதிவீமன் சகாதேவநகுலன்
காட்டினிற்கண்ட காரணமெத்த
தாஷ்டிகர்தம்பிமார் தங்களையிழந்து
சக்கரத்துணையாய்த் தருமரும்நடக்க
சொற்கிசைமறலி கணங்கெனமதித்து

ஆறதுதாண்டி யங்கொருகங்கை
நீரதுமாடி நின்றிடுமாலே
தனதொருதேகந் தங்கமாகினதால்
மனதுடன்மகிழ்ந்து மாயவன்றயவு
பட்சமாய்கடந்து பருவழிதாண்டி
அட்சணமறலி அரமனைசேர்ந்து
குழியினிற்கிடந்த கொடியநூற்றுவரை
வெளியினிற்றாக்கி விட்டபின்மறலி
அனுப்பவும்நான்முகத் தையனைப்போற்றி
மனப்புகழ்கைலை மலையனைவணங்கி
மட்டடங்காப்புகழ் வைகுண்டநகரில்
பட்டணம்வலமாய் பவனியும்வருக
மாவயில்சபையில் வந்துசொல்லுரைக்க
காவலன்றருமன் கருத்தினிலிருத்தி
தையனும்பிறந்த தம்பிமாருடன்
வைகுந்தநகரில் வாழ்ந்தமெய்க்கதையை
பூட்டியசிலயன் பொம்மையென்றயவு
பூட்டியபெருமை புழுதிமாநகரான்
பலந்தருவில்லியார் பாதமேபணிந்து
நலம்பெறுமெய்யன் நம்பலந்தழைத்து
விளைபுவிதழைமகா விந்தைநாடகத்தை
கிளைதமிழ்வாலி கேசனும்புன்சொல்
பாடினேனினிய பைந்தமிழ்க்குற்றம்
தேடியேபுலவர் திருத்தியாண்டிடவே

விருத்தம்

நிலைமணிமுடிகளாட நிதிதுதிகரங்களாட
பலமணிமாலையாட பரும்பெருச்சாளியேறி
சிலபலகனியுந்தேனும் தித்திக்கும்பொரியுந்தேடி
கலகலென்றிடுசதங்கை கணபதிதோன்றினரே.

வசனம்

அகோதெப்படியென்றால் அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகராகிய ஆனைமுக விநாயகர் வருகிறவிதம் எப்படியென்றால்,

கணபதிவந்தாரே தொந்திக் கணபதிவந்தாரே

அநுபல்லவி

ஆரியவிதிதரும் வீரியன்வேதத்தில்
சூரியதொழில்முறைக் காரியசிவசுத கண

சரணங்கள்

காரணனடியவர் பூரணன்பெருச்சாளி
வாரணன்செழும்பச்சை நாரணன்மருகன் கண

நேசிக்கவடவியர் பூசிக்கப்புகழெங்கும்
வீசிக்கவடியவர் ஆசிக்கநமக்கொரு கண

தந்தியன்சரிந்திடு தொந்தியன்தரணியில்
முந்தியங்கிருக்கமூச் சந்தியில்சிவசுத கண

ஐயர்வருகிற விருத்தம்

புரிச்செறிமுந்நூலாடப் பூசியகதம்பம்வீச
நரைச்செறிகுடுமியாட நல்லபூக்குடலைக்கையன்
திருச்சுனை தீர்த்தமாடிச் செய்யகுஞ்சரத்தான்றன்னை
அருச்சனைசெய்யப்பார்ப்பா ரையருந்தோன்றினரே

ஐயர்வருகிற தரு சங்கராபரணம்

பல்லவி

ஐயரும்வந்தாரே பூசைசெய்ய ஐயரும்வந்தாரே

அநுபல்லவி

அய்யரும்வந்தாரே நெய்யிலுகந்தாரே
பொய்யையமறந்தாரே மெய்யிற்சிறந்தாரே அய்

சரணங்கள்

செந்தழும்வாசிக்கச் சந்தணம்பூசிக்க
முந்தானை வீசிக்கத் தந்தியைபூசிக்க அய்

தாங்கினசோற்றையும் மாங்கனிசாற்றையும்
தேங்கனிகீற்றையும் பாங்கினிற்சேர்த்தொரு அய்

பொய்யினையாட்டியே மெய்யினை நாட்டியே
பையினைக்காட்டியே பையனைக்கூட்டியே அய்

கட்டியக்காரன் வருகிறவிருத்தம்

மதித்தசெம்பொன்மணிமகுடக்கீர்த்திவேந்தன்
மாதிருதராட்டிரன்றன்மதலைவீரன்றன்
சதுத்தளத்தைப்பொடிப்படுத்திச்சீமையெங்கும்
தனதொருவெண்குடையுதவுதருமராசன்
துதித்தமொழிகெதித்துறைசொல்கனதைசெம்பொன்
துலங்குவச்சிரமணிப்புயந்தான்றுடின்வாக்கில்
எதிர்த்தவருக்கொல்லாதசமர்த்தன்செஞ்சொல்
இயம்புமொழிகட்டியக்காரனும்வந்தானே.

கட்டியக்காரன்-வருகிற-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-அ-ம்.

பல்லவி

கட்டியக்காரனும்வந்தான் தருமர்முன்னே
கட்டியக்காரனும்வந்தான்

அநுபல்லவி

அன்னைசொல்லைத்தவிராத மன்னவன்றருமராஜன்
தென்னவன்கொலுவைநாடி உன்னிதமாகவேயோடி கட்

சரணங்கள்

நாட்டிப்புகழ்பெரிய மேட்டியுலுத்தர்களை
வாட்டிக்கனகசெம்பொன் கேட்டித்தருமர்முன்னே கட்

நேசன்களபமணி வாசன்அத்திப்புரத்தில்
நேசன்துரைதரும ராசன்கொலுவின்முன்னே கட்

விருத்தம்

நயம்பெருகும்வளமுடையதிருமால்பாதம்
நமதுதுணையெனமனதில்நம்புந்தீரன்
சதிர்பெருகவிருபுறமுங்கவரிவீசத்
தவில்முழங்கக்களபமுலைத்தாசியாட
மதிபெருகநெறிநீதிதவரிடாத
வலிமைபெருசித்தன்மணிமகுடவேந்தன்
துதிபெருகுதம்பிமார் தலைவர்சூழத்
துணிதருமர்சபையதனிற்றேன்றினரே

## தருமர் வருகிற-தரு-பைரவி-ஆதி

பல்லவி

இங்கிதமாங்கொடிபரக்க இசையக்குடைகளசையவே
சங்கீதமாங்தொனிமுழங்கத் தருமராசன்தோன்றினர்-இங்
வீரராஜதீரர்சூழ வேந்தர்கோடிசேர
தாரைபூரிபேரிமுழங்க தருமராஜன்தோன்றினர்-இங்
அம்புவில்உம்பர்புகழ ஆனைசேனைசூழவே
தம்பிமார்கள்முன்பதாக தருமராசன்தோன்றினர்-இங்
அத்திப்புரத்தரசர்கோமான் அசையுமணிகளசையவே
சத்தியந்தவராததர்ம ராசன்வந்துதோன்றினர்-இங்

## துரோபதை வருகிற விருத்தம்

ஆதியிலேகனியெனப்பேர்படைத்தமங்கை
ஐவருக்குமொருதேவியழியாதகன்னி
பாதிமதிநுதலழகியனந்தங்கோடி
பாங்கியர்கள்புடைசூழ்ந்துபாதமேந்துங்
கோதைசெம்பொற்குடமுலைமின்னனையாள்தங்கக்
கோலத்தாளிலங்குமுத்துமாலைவச்ர
சோதிமின்னமல்லிகைப்பூக்குழலிலாடத்
துரோபதையாள்கொலுவிருக்கத்தோன்றினளே.

## துரோபதி-தரு-புன்னுகவராளி-அடதாளம்

பல்லவி

மாதுவந்தாளே துரோபதை மாதுவந்தாளே

அநுபல்லவி

தாதுபணிந்திட வாய்த்தபிடியிடை
பூந்துயிலாடவும் போந்தசிலம்புகள்
சேர்ந்தொளிமிஞ்சவே காந்திபொருந்திய
பஞ்சவர்நாயகி யெஞ்சொலின்துரோபதை மாது

சரணங்கள்

வட்டநுதலினிற் பொட்டுந்துலங்கிட
வஞ்சமறியாத பஞ்சவர்நாயகி
தொட்டபசுந்தங்கச் சுட்டியுங்காதோலை
தொங்கலும்மையிட்ட கண்களுஞ்சித்திர மாது

மூக்குத்தளுக்கெட்டி நாக்கதைப்பார்க்கவும்
முத்துவடந்தங்கக் கொத்துசரப்பணி
தாக்குங்கனதனந் தூக்கிப்பொருக்காமல்
தச்சுயிணுக்கிய கச்சைபுனேசித்ர மாது

பஞ்சவர்கூட்டத்திற் சஞ்சரிநாயகி
பாரில்அனேவருக்கும் பூரணநாயகி
துஞ்சவனத்தினில் ரஞ்சிதமாம்பழம்
துக்கத்தினல்மனம் வெட்கத்தைக்காட்டிய மாது

தருமர் கட்டியக்காரனுக்குச்சொல் வசனம்

அகோ வாரும்பிள்ளாய் கட்டியக்காரா நாம் மல்லகசெட்டிகள் விளையாடல்பார்த்து அநேகநாளாய்விட்டது இப்போது நம்முடை யமல்லகசெட்டிகளை யழைப்பியும் பிள்ளாய்.

கட்டியக்காரன் சொல் வசனம்

அப்படியே மகாபாக்கியம் மகாராசனே

மல்லர்கள் வருகிற விருத்தம்

மட்டில்லாதர்மபுத்ரராஜராஜன்
மனமகிழ்ந்து அதிகசந்தோஷமாகி
கட்டியொருசகடவிளையாட்டுப்பார்க்க
கனகசபைதனில்மகிழும்மல்லராசன்
செட்டிகளையழையுமெனப்புகன்றவார்த்தை
சிலங்கையொலிச்சப்தமெனச்செவியிற்கேட்டு
அட்டியில்லாத்தருமரிடகொலுவின்முன்னே
ஆடினர்மல்லர்கள்வந்தாடினரே.

மல்லர்வருகிற-தரு-நாதநாமக்கிரியை-அ-ம்

பல்லவி

செட்டிகள்வந்தாரேமல்லக செட்டிகள்வந்தாரே

அநுபல்லவி

செட்டிகள்வந்து வதட்டியேமுன்தொடை
தட்டியேபோர்செயக் கெட்டியமல்லக செ

கூச்சுடன்களபமெய்ப் பூச்சுடன்வருமெனும்
பேச்சுடன்விரைந்தொரு பாச்சலிற்புலிபோல செ

கல்லுடன்தடியம்பு வில்லுடன்வெடுக்கெனும்
சொல்லுடன்மிறைசாவிப் பல்லுடனிரண்டுபேர் செ

தாகத்துடனேமெத்த யோகத்துடனேமன
வேகத்துடனேதலைப் பாகைசுருட்டிகட்டி செ

தருமர் வசனம்

அகோ வாரும் பிள்ளாய் கட்டியக்காரா மல்லகசெட்டிகள் ஆட்டபாட்டம் பார்த்து வெகு சந்தோஷமாச்சுது இவர்களுக்கு வெகுமதிகொடுத்தனுப்பிவிட்டு நமது நாடகசாலைப் பெண்களை அழைப்பியும் பிள்ளாய் கட்டியக்காரா.

கட்டியன் வசனம்

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

கணிகை வருகிற-தரு-பந்துவராளி-ரூபகம்

பல்லவி

கூவுங்குயிலிசைத்தாசிவந்தாள் ராஜன்கொலுதனில்
கூவுங்குயிலிசைத்தாசிவந்தாள்

அநுபல்லவி

கூவுங்குயிலிசைப் பாவைபனிமொழி
கோதைதருஞ்சித்ர மாதுசிரோமணி கூவு

சரணங்கள்

பூவைவெகுமயல் தேவையதுகொண்டு
பூசுங்களபதர்ம ராசன்கொலுவின்முன்னே கூவு

பங்கமயமாமுகன் மங்கையதிரதி
பாவையின்மீதினில் தேவைதினந்தினம்
செங்கைவளையிரு கொங்கைகுலுங்கிட
தேசந்துதிதர்ம ராசன்கொலுவினில் கூவு

விந்தைமதன்சண்டை தந்துகள்சோதித்த
வேகத்தினால்கொண்ட மோகத்தினள்திரு கூவு

வுந்தியொருபிறபிற முந்தியேநீக்கியே
செந்திருமாதொளி தந்தகொலுமுன்னே கூவு

நற்றமிழ்வாசனை வெற்றிநடம்புரி
நன்னனையாள்செழும் பொன்னனையாள்தொடும் கூவு

கொத்துசரப்பளி முத்தையசைந்து
குலிக்கிச்சதங்கை சிலுக்கென்றொலித்திட கூவு

தருமர் வசனம்

அகோவாரும் பிள்ளாய் கட்டியக்காரா நமது நாடகசாலைப் பெண்களுக்கு வெகுமதிசெய்து அனுப்பிவிட்டு நமது தேசத்துக் குடியானவர்களை அழைப்பியும் பிள்ளாய்.

கட்டியன் வசனம்

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

குடிகள் வருகிற-தரு-பியாகு-ரூபகம்

இலங்கும்பஞ்சவர்நாளுங்கூடி
இருக்குங்கொலுவைநாடி
குனிந்துபணிந்து துணிந்துவணைந்து
குடிகள்வந்துதோன்றினர்
பஞ்சவரிருக்குங்கொலுவையின்று
பார்த்துநாம்வருவோமென்று
கொஞ்சுமொழிகள்பேசிவாசல்
குடிகள்வந்துதோன்றினர்
வலிமைபொருந்துந்தருமராசன்
மனதுமகிழக்கனகஞ்சூடி
கொலுவிலிருக்கும்வாசல்காண
குடிகள்வந்துதோன்றினர்.

குடிகள்-வசனம்

அகோ சரணஞ் சரணம் மகாராசனே எங்களை யழைப்பித்த காரியம் இன்னதென்று திருவுளம்பற்றவேணுமையா மகாராசனே.

அகோவாருங்கள் குடியானவர்களே நமது தேசத்துக் குடிக ளெல்லாம் சுகமாயிருக்கிறார்களா.

குடிகள் வசனம்

அகோவாரும் மஹாராஜா தங்களிட கிருபாகடாட்சத்தினாலே எல்லாக்குடிகள் சுகமாயிருக்கிறார்களையா சுவாமி மஹாராசனே.

விருத்தம்

பன்னுதமிழ்த்துவாரகாநற்புரியில்மேவும்
பச்சைமால்மனதினிலேபட்சமாகி
மன்னவர்களைவரையும்இங்கேகூட்டி
வருகவெனநவநீதவாயன்கூற
அன்னவைதான்விரைந்தோடிச்சோலைசூழ்ந்த
அத்திபுரமாநகரத்திசையைநோக்கி
சொன்னமொழிதலைமிசையிற்றானேகொண்டு
தூதனும்பஞ்சவர்முன்புதோன்றினானே.

தூதன்சொல் வசனம்

அகோ ராசாதிராஜ ராஜமார்த்தாண்ட தருமபுத்திரமகாராச னே பராக்கு துவாரகாபுரிதாசன் அடியார்கள் நேசன் பச்சைவண் ணப் பரம்பொருளாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் தங்கள் ஐவர் களையும் துவாரகாபுரிக்கு வரும்படியாய் திருவுளம்பற்றினார்களையா சுவாமி.

விருத்தம்

துஞ்சிரவுபகலெனக்குத்துணையாய்நின்ற
தூயதிருமாலனுப்புந்தூதன்சொல்லை
நெஞ்சதனிலிருத்திமனதாசைபூண்டு
நிதியழகுதருந்துவாரகாபுரியைநோக்கி
அஞ்சலெனநிறைந்தசெங்கோலாளுகின்ற
அத்திபுரமாநகரிதனையுந்தேடி
பஞ்சவர்கள்விரைந்தோடிவந்துகண்ணன்
பதம்வணங்கிநின்றுமொழிபகருவாரே.

## பாண்டவர் கண்ணனைத்துதிசெய்கிற சோபனம்

### தரு-புன்னாகவராளி-ஆதிதாளம்

பாரளந்தபதங்கள்போற்றி பச்சைவண்ணமுகமும்போற்றி
வாரமுழுந்துமுலையருக்கு மணியின்கொழுனன்போற்றிபோற்றி

தெச்சனையிவ்விரட்டுதற்கு துரியோதனன்சபையில்
துற்சாதனன்பிடித்துரிக்க துயில்வளர்த்தாய்போற்றிபோற்றி

கைதலஞ்சலித்திடாமற் கண்ணன்பாசக்கணைதனக்கு
பொய்த்தலையைக்காட்டிவிட்ட புண்ணியனேபோற்றி

வருந்திநாங்கள்மடிந்திடாமல் வனத்திலந்தநாளையே
பொருந்துமஞ்சுகலந்துவைத்த புண்ணியமூர்த்திபோற்றிபோற்றி

தீட்டுங்கணச்சிலையுடைய தேற்றரசன்றேர்வெளியிற்
காட்டுதற்குகதிர்மறைத்த காரணனேபோற்றிபோற்றி

அடுத்தபங்குதுரியோதனன் ஆண்டபெருஞ்சீமைபாதி
தொடுத்தபங்குகேட்பதற்கு தூதுசென்றாய்போற்றிபோற்றி

மாண்டொழிந்துபோயிடாமல் வாஞ்சையுடன்பூஞ்சுனையில்
தூண்டிகளின்மேலிருந்த தும்பியேபோற்றிபோற்றி

எப்பிறப்புபிறந்திட்டாலும் எவ்விடத்திலிருந்திட்டாலும்
அப்பிறப்புக்குதவிநீயே ஆதிமூலம்போற்றிபோற்றி

### பாண்டவர் வசனம்

சரணங்கள் சுவாமி கோபாலக்கிருஷ்ண சரணம்.

### கண்ணன் வசனம்

சிரஞ்சீவியாயிருங்கள் எழுந்திருங்கள் பாண்டவர்களே.

### விருத்தம்

மங்கையொருமார்பதனிற்றரித்தசோதி
மைத்துனனேசீதைமணவாளவெள்ளை
சங்குமொருசக்கரமுமழகார்தேரிற்
சாரதியேமலரயனுந்தாங்குந்தாளா

பங்கயப்பூங்கரமுடையாய்கரியமேனி
படர்ந்திலகுமேகவண்ணத்துளசிமாலே
எங்களேயும்வரவழைத்ததிருவுளந்தா
னின்னதென்றுதெளிந்திடவேயியம்புவீரே.

கண்ணன்-விருத்தம்

மின்னுமாமணிமகுடத்தர்மராஜ
வேந்தனேபஞ்சவர்க்குள் மேன்மையானே
மன்னவா அத்திபுரத் தரசர்கள்கோவே
வரவழைத்தசேதிமொழி வகையைக்கேளாய்
கன்னியர்கள்மேலான காலமாகும்
கலியுகத்தில்நடந்திடு காரணங்களெல்லாம்
இன்னினிநீயுணர்ந்திடவே நிகழும்வாறும்
யாதினேயுமனதறிய விளம்புவேனே.

கண்ணன் சொல்கிற வசனம்

அகோ வாரும்பிள்ளாய் தருமராசனே இனிமேல் கலியுகம் சமீபமாகிவிட்டபடியினலே இனிமேல் உலகத்தில் நடக்கப்போகிற விநோதங்களெல்லாம் சொல்லுகிறேன் கேளும் பிள்ளாய் தருமராசனே.

தரு-எதுகுலகாம்போதி-இ-ம்

| | |
|---|---|
| கன்னல்மொழிதரும்வாழ்வழகாயெந்தன் | தர்மராசா - இனி |
| காலங்கலியுககாலம்வருகுதப்பா | தர்மராசா |
| இன்னிலமேற்செங்கோல்மன்னர்நெறியது | தர்மராசா - நீதி |
| எப்படியோநாஞ்செப்பரியேனப்பா | தர்மராசா |
| தர்மங்கசந்திடும்பாவமினித்திடும் | தர்மராசா - இனி |
| தாழ்ந்தகுலங்களுயர்ந்திடுமேகவி | தர்மராசா |
| சென்மப்பகையாகும் அண்ணனுடன்தம்பி | தர்மராசா-பொல்லா |
| நீதுடனேதெய்வநீதியுமாறுமே | தர்மராசா |

உற்றூர்பசித்திடவைத்துச்சோறுண்பார்கள் தர்மராசா - தாய்
ஒன்றுசொல்லப்பிள்ளையொன்பதுசொல்லுமே தர்மராசா

பத்தாவுக்கோர்முழம்மேலிருப்பார்பெண்டீர் தர்மராசா - நல்ல
பைங்கிளியார்கற்பும்மயங்கிவிடுமப்போ தர்மராசா

வைக்கும்வரம்பையழிக்கநினைப்பார்காண் தர்மராசா - இந்த
மண்ணிலிருந்தொருபெண்ணோஞ்சொல்லுவார் தர்மராசா

விற்கும்விலையைக்குறைக்கநினைப்பார்காண் தர்மராசா-உண்ட
வீட்டுக்குரண்டகங்காட்டுங்கலியுகம் தர்மராசா

சொன்னமொழிக்கொருபின்னம்நினைப்பார்கள் தர்மராசா-பூவில்
துய்யமழையதுபெய்யுவதாருக்கோ தர்மராசா

அன்னமிடுவாருந்தன்னையறிவாரும் தர்மராசா-முன்னே
ஆயிரத்தில்ஒருஞாயமிருக்குங்காண் தர்மராசா

பார்த்தொருஞாயங்கள்தீர்த்திடவும்மினி தர்மராசா-பார்க்குள்
பாங்குடன்கைகூலிவாங்குங்கலிகாலம் தர்மராசா

நேற்றைக்குசொன்னசொல்இன்றைக்கிராதுகாண் தர்மராசா-இனி
நிலைத்தினிற்காலம்வலுத்தவனுக்கடா தர்மராசா

தூயதலைச்சுமைதாயார்க்குவைப்பார்காண் தர்மராசா - மனம்
துடித்திடஏழையையடித்திடுவார்கள்காண் தர்மராசா

ஞாயங்களில்லாது அநியாயம்மிற்குங்காண் தர்மராசா-ஒருவர்
நம்பினகாரியம்தென்பாயிருக்குது தாமராசா

ஏசுங்கொடுமையாய்பேச்சுமிருக்குங்காண் தர்மராசா - சாதி
எல்லாஞ்சரிதையைச்சொல்லப்படாதுகாண் தர்மராசா

ஆசாரங்கோளென்றபேச்சுமேலாகுங்காண் தர்மராசா - மூக
யாலேநிஜத்திற்குக்காலங்களல்லகாண் தர்மராசா

தாதைக்குத்தன்பிள்ளைபேதகம்பண்ணுங்காண் தர்மராசா - கெதி
தாட்சண்யமாயிடும்காட்சிதுலங்குங்காண் தர்மராசா

வேதியர்சொல்மறைநீதிகளென்னமோ தர்மராசா - கெதி
வேகத்தில்வைகுண்டம்நாம்போகவேணுங்காண் தர்மராசா

நாட்டுப்பெரும்பணத்தேட்டம்புறட்டுகள் தர்மராசா - மனம்
நேயமடங்கலும்செய்யும்வகைதீது தர்மராசா

கூட்டும்புவிப்பித்தலாட்டங்களாகுங்காண் தர்மராசா-இப்போ
சொன்னதினுலென்னபின்னே த்தெரியுங்காண் தர்மராசா

சூதுபுனேந்திடும்பாதகருக்கப்பா தர்மராசா-ஏறி
சூலங்கைகொண்டுகாலனும்வந்தப்பா தர்மராசா

வாதைபடுத்தியேதோதகஞ்செய்வது தர்மராசா-உயிர்
வாங்கும்பொழுதங்கப்பாங்குந்தெரியுங்காண் தர்மராசா

சேர்ந்தவொருபாசத்தால்வாய்ந்துஇழுத்தையோ தர்மராசா-எமன்
செய்யும்வகைசொன்னுற்பொய்யென்றிகழுவார் தர்மராசா

வாய்ந்தபுவிசெங்கோலேய்ந்தபதியில் தர்மராசா-ஆசை
வைக்கப்படாதினிநிற்கப்படாதிங்கே தர்மராசா

தோராதவைகுண்டம்போறபொழுதப்பா தர்மராசா-ஒரு
தூதனுப்பினபோதினிலேயப்பா தர்மராசா

தாராளவெங்கலிவீறுகொடிதப்பா தர்மராசா-சொன்ன
சாக்கிறதைப்படிசீக்கிரம்வந்திடாய் தர்மராசா

இன்னுங்கலிகூத்துச்சொன்னுலுனக்கப்பா தர்மராசா-நான்
என்னசெய்குவேனுந்தன்நெஞ்சுபதைக்குதே தர்மராசா

பொன்னும்புதையலுமென்னசெய்யுமப்பா தர்மராசா-மிக
புத்திரர்பூவாசையெத்தனேநாளைக்கோ தர்மராசா

நத்திமனதங்கேவைத்திடலாகாது தர்மராசா-நல்ல
நாளேயில்நான்சொன்னவேளைநீவந்திடும் தர்மராசா

விருத்தம்

நயமுலவுபுவியதனிலினிமேல்யாமும்
நடக்குமொழிமாரியதைதிடத்தைக்கேட்டு
பயமுலவுகலியுகத்திலிருக்கநாமும்
பற்றுதுகொடியபாவம்பார்க்கொணுது
சிலமுலவுவைகுண்டப்பதிக்குத்தானே
செலவேண்டுமென்னமனஞ்சிறந்துமன்பாய்
தயவுடையகண்ணனிடம்விடையேபெற்று
தமதுபதிபஞ்சவர்கள்தான்வந்தாரே,

வசனம்

இந்தப்பிரகாரம் கிருஷ்ணமூர்த்தி சொல்லியவைகளைக் கேட்டு விடைபெற்றுக்கொண்டு பாண்டவர்கள் தங்களூருக்கு வந்தார்.

விருத்தம்

தருவாசதருமனையும்அனுப்பிவித்து
தன துவரைநகர்கண்ணனிருந்துகாலே
துருவாசர்சபிப்பதனுலிருப்புலக்கை
தூளாலேமுளைத்தருளக்கோரைதன்னுல்
திருவாசமக்களெண்ணுயிரம்பேர்தானும்
செத்தழிந்துபோனதிறற்சிந்தைவாடி
மருவீசம்வடமேற்குமூலைதன்னில்
வந்தாலமரத்தினிற்கண்வளர்கின்றுரே.

வசனம்

அகோதெப்படியென்றுல் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் பஞ்சவர்களை யனுப்பிவிட்டபிறகு துருவாசர் சாபத்தினுல் கடற்கறையில் முளைந்த கோரைகளால் யாதவகுலம் நசிந்துபோக அந்த வியாகுலத்தினுல் சுவாமியானவர் ஊருக்குப் புறம்புள்ள கானகத்திலே ஓர் ஆலமரத்தி நிழலில் நின்றுக்கொண்டிருக்கும்போது நடக்கிற விதம் என்னவென்றுல்.

வேடன் வருகிற விருத்தம்

தன்மானந்தனக்கழகாய்வேட்டைவீரன்
தருகிழங்குதேன் தினைமாச்சாடையாளன்
நன்மானநாரணனும்விழிதான் துஞ்சும்
நாட்டகத்தில்விரைந்துவனக்காட்டைநோக்கி
அம்மானமுனிசபித்தவிருப்புலக்கை
யறுந்துணுக்கையம்முனைத்தன்னிற்கூட்டி
பொன்மானுஞ்சென்றவழிதன்னைநோக்கி
புனவேடன்காற்கதியாய்ப்புறப்பட்டானே.

## வசனம்

அகோதெப்படியென்றால் வேட்டையாடுவதில் வல்லவனானவே டராஜனொருவன் துவாரகாபுரியில் தூர்வாசமுனிவருக் கெதிராக சாம்பனுக்கு வேஷம்போட்டுக் கொண்டுபோய் நிறுத்தி இந்தப் பெண் கர்ப்பவதியாயிருக்கிறபடியினாலே இவள்பெருவது ஆண்பிள் ளையோபெண்பிள்ளையோவென்று யாதவப்பிள்ளைகள்கேட்கத் தூர் வாசர்கோபித்து இவள் பெறுவது ஆணும்பெண்ணுமல்ல ஒரிருப்பு லக்கையைப்பெருவாள் அதினாலேதங்கள் வங்கிசம்நாசமடையுமென் று சாபங்கொடுத்துப்போக இவ்வுலக்கையைப் பொடியாக ராவிச்ச முத்திரத்தேகொட்டிப்போட அந்தப்பொடிகள்கோரைகளாய் முளை த்திருக்க அவைகளைப் பிடுங்கி யொருவருக்கொருவர் அடித்துக் கொண்டுயாதவாள் மடிந்துபோனார்கள் அந்த இருப்புலக்கையிலே மிஞ்சிநின்றதுணுக்கையைத் தன்னுடைய அம்புமுனையிலேசேர்த்து வில்லைவளைத்து ஒருமானைத்துறத்திக்கொண்டுவருகிற இந்தவேடன் ஆலமரத்திலே கண்வளருகிற ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்குச் சமீபத்திலே வந்து செய்கிறவிதம் என்னவென்றால்.

## வேடன்வருகிற தரு நாட்டை ரூபகம்

மருட்டியோட்டிச்செடியில்நுழைந்து
மானைப்பற்றியெய்துமே
விரட்டியோட்டித்தடத்தினிற்புல
வேடன்தோன்றினான்
கல்லெறிந்துகொல்லைச்செடியை
கலைத்துமிஞ்சியபலத்தினாலே
வில்லைப்பிடித்துபல்லைக்கடித்து
வேடனும்வந்துதோன்றினான்
தொடுமுன்னேகளைப்படுமுன்னேவிழுந்
தோடுதேதுடையாடுதே
விடுவனோவுன்னைக்கெடுவிலென்று
வேடனும்வந்துதோன்றினான்
சிறிதல்லாவெகுபெரிதடாவென்று
தேடிவட்டமிட்டோடியே

விரைவிலேவெகுதூரிசிலேபல
வேடன்வந்துதோன்றினன்
கையடாதம்பிகையாவென்றுங்
கரியடாவந்தப்பெரியமான்
மெய்யெலாம்வெறும்நெய்யடாவென்று
வேடனும்வந்துதோன்றினன்
ஆரடாதம்பிபாரடாபற்றி
அடியடாதிரும்பபிடியடாவதை
மீரடாபற்றிசூழடாவென்று
வேடனும்வந்துதோன்றினன்·

விருத்தம்

தவவிரண்டமான்தனையேதேடிக்கண்ணன்
தனித்திருந்தவடவாலின்மரத்தைநோக்கி
புவியளந்தபவமிவென்றறிந்திடாமல்
பொன்மானும்கூடிவந்தபுள்ளிமானின்
செவியிதுவென்றெண்ணியந்தத்திண்ணவேடன்
சிலேவளைத்துக்காதளவுசேரவாங்கி
சவரியமாய்த்தொட்டகணைதிருமால்பாதம்
தட்டுருவக்கொண்டுபரதவிக்கின்ருனே.

வசனம்

இந்தப்பிரகாரம் வேடன்கணையாலே திருவடிதுளைபட்ட ஸ்ரீகிருஷ்ணபகவானை வேடன்கண்டு புலம்புகிறவிதமெப்படியென்ருல்.

வேடன் புலம்புகிற தரு ஆகிரி ரூபகம்

தொட்டுங்கணைகட்டழகனடிப் பிடிங்கிஞன் காலில்
தோற்றும்உதிரத்தின்பாச்சல்தனைக்கண்டு

விட்டகடுங்கணைப்பட்டதுதானென்ன பாவமே இனி
மேலென்னசெய்யுமோமாலவன்றன்னிட கோபமே

மானங்கேபற்றியேநானிங்கேவந்தேன் விதியோ இந்த
வையகம்புகழ்ந்திடும்ஐயன்பதமும்மிக் கெதியோ

ஏனிந்தவேளையிற்கானகந்தனி | விருப்பானே-நல்ல
மானென்றுமனதிற்கண்டுதொட்டேன்கணை | நானே

விந்தைக்கணைபடவிந்தப்பதம்மெத்த | நோகுமே-இந்த
வில்லைச்சுமந்திடுங்கீர்த்தியினிநமக் | காகுமே

கடவுளேயிப்பெருங்கொடுமைத்தனித்திடும் | கோபமே-நான்
காட்டிற்புரப்பட்டுவேட்டைக்குவரவிந்தப் | பாவமே

நீரறிவீர்பிறரறிவாரிந்தக் | கோலமே-பிழை
நீக்கிஅடியேனைக்கார்க்கவேணும்ஆதி | மூலமே

விருத்தம்

அம்பெடுத்துமுனைபார்த்துஇருப்புலக்கை
அறும்பொடியென்றறிந்துமனதறிவைப்பாரில்
பொன்பறவுவைகுண்டம்போவதற்குப்
பொருந்தியநற்சமயமிதுபுகுந்ததென்றே
வன்பறியாப்பஞ்சவர்கள்தன்னைக்கூட்டி
வருகவெனத்தனதுதிருவுளத்திலெண்ணி
தன்பதத்திற்கணைதொடுத்தவேடனுக்குத்
தன்மையுளமொழிகள்சிலசாற்றுவாரே.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வேடன் புலம்புகிற போது! ஸ்ரீ கிருஷ்ணபகவானானவர் தனது காலிலே பட்டுருவிய அம்பைப் பிடுங்கிப்பார்த்து அது தூருவாசர் சாபத்தால்வந்த சம் பந்தமென்றறிந்து இனி நாம் வைகுண்டம் போகவேணுமென்று நிச்சயஞ்செய்து அந்த வேடனைப் பார்த்து சில வார்த்தை சொல் லுகிறதெப்படியெனில்.

தரு உசேனி-இ-ம்

தாபமுனிவன்சாபமிப்படியே | அதனைநாமும்
தடுப்பதுந்தப்பிநடப்பதெப்படியோ

கோபக்கலியின் பாவமுனக்கில்லை உந்தன் மீதில்
குற்றமில்லைக்கணைபெற்றவேடனே

துருவாசமுனிகொடுத்தகோபமோ இந்தமரத்தில்
துஞ்சும்போதுபிடித்தசாபமோ

வருவிதியிது தருமவிதியிலே உந்தன் மீதில்
வஞ்சகமில்லைநீயஞ்சல்வேடனே

துய்யமாமுனிசெய்யுஞ்சாபமே வில்வளைத்துத்
தொடுத்தகணைவந்தடுத்தசோபமே

நீயும்வில்லும்கையுமென்செய்யும் உந்தன்பாலில்
நிசமிருக்குதிசைவில்வேடனே

கால்விசைகொடுத்துநடந்துதேடியே தர்மராசனை
கண்டுபிடித்தவன்புகழைப்பாடியே

மாபலந்தருவீமன்விசயனை இரண்டுபேரு
மாய்வரச்சொல்கவனவேடனே

வாய்மைபொருந்துந்தூய்மையாளனே எனதுசொல்லை
மறந்துசும்மாயிருந்திடாமலே

ஆண்மைபொருந்தும்வீமன்விஜயனை இருவர்தம்மையும்
அரக்கணத்தில்வரச்சொல்வேடனே

விருத்தம்

பட்டகணையுஞ்சிலையும் விடையும்வாங்கி
பரிந்தோடித்தருமர்பதம்பணிந்துவேடன்
மெட்டிலகுமத்திபுரத் தரசர்கோவே
வேந்தனேதாள்பணிந்து விளம்புஞ்செஞ்சொல்
கட்டழகுதருவிசயன் வீமனென்ற
காவலரைமட்டுமனங் கருதித்தானே
மட்டடங்காக்கரியதிரு நெடுமாலேனை
மனவலிவாயித்ததியில்வரச்சொன்னரே,

சரணஞ் சரணமையா சுவாமி தர்மபுத்திரராசனே துவாரகா புரியிலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண மூர்த்தி யானவர் அடுத்த காட்டிலே வடவாலமரத்திலே சயனித்துக்கொண் டிருக்கிறூர் என்னுடன் அவர் திருவுள்ளம்பற்றியதாவது வீமசேன மகாராசாவையும் அருச்சுனராசனேயும் இந்தட்சணமே அனுப்பிவிக் கும்படியாய் கட்டளேயிட்டருளினுரையா சுவாமி.

தருமர் வசனம்

அகோவாரும் பிள்ளாய் கட்டியக்காரா இவனுக்கு வெகுமதி செய்து அனுப்பியும் பிள்ளாய் கட்டியக்காரா.

விருத்தம்

துய்யகணேத்தனுவேடன்வந்துசொன்ன
சொல்லுரையையூடுருவச்சோதித்தன்றே
செய்யும்வழிதவிராததருமராஜன்
சிந்தைமெத்தத்தயங்கிமனந்திகைத்துவாடி
பொய்யறியோம்சூதறியோம்ஏதோஎன்ன
புதுமையோயிருவரையும்பொருந்திப்பார்த்து
மெய்யுரையாயரிதிருமால்வரவுஞ்சொன்ன
வீமனுக்கும்விசையனுக்கும்விளம்புவாரே.

வசனம்

இந்தப்பிரகாரம் வேடராஜன்வந்து சொன்ன வார்த்தையைக் கேட்டு தருமராஜாவானவர் வீமனேயும் அருச்சுனராஜனேயும் அழை த்துச் சொல்லுகிறவிதம் என்னவென்றுல்.

தரு-பூபாளம்-இ-ம்

பல்லவி

வீமாயினிநாமே யென்ன
விள்ளலாங் கொள்ளலாம்

### அநுபல்லவி

இராமாயிரநாமன் அரி
நந்தனே கோவிந்தனே

### சரணங்கள்

இன்பமாய்ரெண்டு தம்பிமார்தன்னை
என்னமோ வரச்சொன்னதே
அன்புபூம்பதம் நம்பிேனுந்துணை
அவரேயல்லா தெவரே
இருபேர்தனை வரவேசொன்ன
தேதோமனச் சூதோ
திருவேஅன்னத் தருவேசொன்ன
சிந்தைதான்என்ன விந்தையோ
நீங்கள்தப்பி போங்கள்
அவர்நெறிதான்மனக் குறிதான்
தாங்கும்பலம் வாங்கும்வகை
தாண்டா தொடவேண்டாம்
கண்டுவாய்மொழி கொண்டுவாவேகம்
கடுகிநடந் திடுவீர்
புகழ்மாமலர்தூவிப் பதம்
போற்றினேனென்று சாற்றியே

### விருத்தம்

போவெனவேயனுப்பிவைத்ததருமராசன்
பொற்பதத்தைப்பணிந்துவிடைபோதப்பெற்றே
ஆவலினல்விரைந்தோடிவடமேல்மூலே
ஆலமரம்விசையனுடன்வீமன்நோக்கி
மூவடிமண்சரமேற்றும்விசுவரூபம்
முன்னெடுத்துவிளையாடும்முராரியுந்தாள்
தேவையுடன்றாதனுப்பிவரவேசொன்ன
செங்கண்மால்கமலபதம்தெரிசித்தாரே.

## விருத்தம்

தெரிசனைக்கண்டிடும்பதத்திற்றுனேரத்தம்
சேர்வதுகண்டிருவருமேதிகைத்துப்பார்த்து
வரிசைபெறுபதத்தினிலேகாயமாக்கி
வைத்தவன்றான்யாரிந்தவனத்தினுள்ளே
தெரியவலேவானவர்தானவர்ஆகட்டும்
சிவன்தவிரமற்றவன்றானெவனுகட்டும்
கரியதிருநெடுமால்நீயிவன்றானென்றுங்
காட்டினலவன்சிரம்வீழ்த்தோட்டுவோமே.

## வசனம்

அகோசரணம் சரணம் சுவாமி கிருஷ்ணபகவானே தங்களிட திருவடியில் இப்பேர்க்கொத்த உதிரம்பெருகும்படியாய் அம்புகொண்டு துளைத்துக் காயப்படுத்தியவர் யாவரோ அவர்கள் தேவரானுலும் மூவரானுலும் சரியே அவாள் சிரசை இப்போதே யெங்கள் கணையால் தரித்து விழுக்காட்டுவோம் அந்தமனிதர் யாவரோ திருவாய்மலர்ந்தருளவேணுமையா சுவாமி.

## கண்ணன்சொல் விருத்தம்

மந்திரஞ்சேர் துர்வாசர்தானுஞ்சொன்ன
வாக்கினலிருப்புலக்கைவந்தவாறும்
பைந்தமிழ்சேர் துவாரைநகர்தன்னில்பெற்ற
பாலரெங்கோரையினற்பட்டவாறும்
இந்தவடவாலினிற்கண் துயின்றவாறும்
என்பதத்திற்கருணையுருவீழ்ந்தவாரும்
விந்தைதரவந்தவழிதவறிடாமல்
விளம்புவேனுங்களிடம்விளம்புவேனே.

## கண்ணன்சொல்-தரு-காம்போதி-ஆதிதாளம்

### பல்லவி

நேசநெறிமன்னவன் துரு — வாசமுனி-சிவ
பூசைதனினினைவன் — யதியாசைதனில்கணவன்

அநுபல்லவி

தெள்ளுசிவந்தேடி கங்கைக்கரை யுள்ளவிடந்தேடி
இருகைவில் துள்ளிவிளையாடி பதினுயிரம்பிள்ளைகளுங்கூடி

சரணங்கள்

பொன்னும்பணிதூக்கிஅடியவர் முன்னும்பெரிதாக்கி
ஒருவனையெண்ணினுருவாக்கிமுனிபதம் தன்னை துகநோக்கி

மறைபெறுமுனியே இவளுக்கு பிறப்பதுங்களியே
என்றுகுறிப்புரைஇவளுக்கு பிறப்பதுஇருப்புலக்கை

என்றுமுனியுரைக்கஉலக்கையும் கண்டுகுமாரரிருக்க
அன்றுவரும்விதிக்கு நடக்க வைகுண்டதிருப்பதிக்கு

நாளையெழுந்திருந்து துரோபதை
யாளுடன்வந்திடுங்கோ

வசனம்

அகோவாரும் பிள்ளாய் வீமா விஜயா நீங்களிருவரும் துரோபதையுமாய் அதிசீக்கிரம் வந்துசேரும் பிள்ளாய்.

வீமன் வசனம்

அப்படியே மகாபாக்கியமையா சுவாமி.

கண்ணன் வசனம்

நீங்களிரண்டுபேரும் உங்களுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொஞ்சம் தூக்கிவிடுங்களப்பா.

வீமன் வசனம்

தேவரீரைத் தொடவேண்டாமென்று எங்கள் அண்ணுசொல்லியிருக்கருர் சுவாமி.

விருத்தம்

தளர்ந்தசிந்தைஅயன்திருமாலுரைத்தசொல்லை
தடுத்தமொழிக்கெதிர்த்தமொழிதானேசொல்வார்
குளிர்ந்தபதத்தடியினிடலாத்தோடங்க
கூறுமொழிகுளரவிம்மிச்சோகமாகி

அழன்றுமனக்கபடமதாய்நின்றுலிந்த
ஆபத்திலெனக்குதவியார்தானிங்கே
சுழன்றெனக்குமுயிர்போகுதடடாவீமா
தூக்கிவிடுவில்விசையா தூக்குவாயே.

தரு-இ-ம்-உசேனி-அடதாளம்

பல்லவி

அண்ணல்சொல்லைத்தட்டி நாமுந்தொடலாமா-இந்த
ஆண்டவனைத்தீண்டாமல் விடலாமா

அநுபல்லவி

கண்ணன் துயர்தீர்க்க நம்மாலாவதுண்டோ-இந்தக்
காட்டினில்தனியேவிட்டுப் போவதுண்டோ

சரணங்கள்

சொல்லுறுதிதப்பினல் பாவம்வரும்-நம்மை
தொடப்படாதென்றுசொன்னல் கோபம்வரும்
வெல்லுகரந்துடைக ளாடுமோடா-இவரை
விட்டுவிட்டுப்போகமனங் கூடுமோடா
வேலைக்கிவரைப்போலே இணைஇல்லையே-இங்கே
விட்டுப்போனல்வேறே துணையில்லையே
நாலைக்குநலமிலாப் பேச்சிவரும்-தொடடா
நல்லோர்நகைக்கஒரு பேச்சுவரும்
மிக்கபசிக்கில்லாத விருந்துமென்ன-ஒரு
வேலைக்குதவியில்லா திருந்துமென்ன
கைக்குதவியில்லாத தேசமென்ன-இந்த
காரியத்திற்கில்லாத நேசமென்ன
பாங்குள்ள அண்ணல்சொல்லைக் கேட்போமா-கண்ணன்
பரதவிப்பதைக்கண்ணுற் பார்ப்போமா
தூங்கித்துயரடைவ திப்படித்தான்-நான்
தூக்காமல்விட்டுப் போவதெப்படித்தாம்

நினைத்ததுணை நமக்கு நிற்பதுண்டா இன்னும்
நின்றுந்தமைம்பதத்தில் வைப்பதுண்டா

மனதினிலினித்திரம் வைப்பதுண்டோ-இவர்
மயக்கத்தைப்பார்த்துநாம் நிற்பதுண்டோ

யோகத்திருவிளக்கை இவ்வடியாய்-விட்டு
உள்ளுக்குப்போவதினி இவ்வடிவே

பாரொத்தஅண்ணல்சொல்லைத் தானேநம்பி-நாமள்
பார்க்கப்படாததம்பி தூக்குதம்பி

விருத்தம்

தேங்கிவிருவீரர்கையை நீட்டும்போது
தேம்பாதமனமுடையான் றேம்பித்தேம்பி
பூங்காரவிருவிழியில் அருவிபாய
புகழ்வீமன்விசயனையும் தழுவியாறி
பாங்காகப்புவியாசை நினைத்துநீங்கள்
பாவத்தலைதன்னிலகப் பட்டிடாமல்
வாங்களென்றுசொல்லியவர் பலமுங்கூட
வாங்கியேவைகுண்டவாசல்கண்டார்.

வசனம்

இந்தப்பிரகாரம் வீமனும் அர்ச்சுனனும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைக் கையாலே தீண்டித் தழுவுஞ் சமயத்தில் அவர்களிட்ட பலத்தையும் இழுத்துக்கொண்டு கண்ணன் வைகுந்தபதிக்குப் போய்விட்டார்.

தருவு-கப்பற்சிந்து.

பல்லவி

மாயவன் தான் கூடுவிட்டு-திரு
வைகுண்டவாழ்பதிக்கே

அநுபல்லவி

போயவன் தானிருந்ததன்பின் செழும்
பூந்தருமர் தம்பிகளும்.

சரணங்கள்

தான்விஜயன்வீமனுமாய் நின்று
தயங்கிமனம்மயங்கி

ஆவிமிகவேபதறி கூடு
அன்றடங்கக்கண்டதற்பின்

செய்சடங்குசாத்திரமும் கெதி
தேட்டமானகாட்டமுடன்

மெய்யறிவகையறிய நன்றாய்
செய்தபின்புபட்டணத்தில்

கள்ளர்வந்துகொள்ளையிட அவர்
கண்டுமனம்நின்றுருகி

தெள்ளியல்சேர்வீமனவன் தம்பி
தண்டெடுக்கவுண்டோபலம்

தீர்க்கமுள்ளவில்விசையன் ஓடி
சிலைவளைக்கப்பலமுண்டோ

பார்க்கமுடிப்போவதில்லை கள்ளர்
பரிச்சலுங்கற்றெரிச்சல்களும்

பார்த்துமனந்தான்பதறி கள்ளர்
பாளயத்தைமீட்காமல்

வேத்துமுடல்நடுங்கிநிற்க அவர்
மெய்பதறிகைபதறி

தாங்குந்திருவடிகளுடன் அவர்
தன்பலமும்போனதினல்

அங்கமதுபடபடத்து அவர்
அத்திபுரம்வந்தாரே

வந்தவுடன்வயவீமன் சமர்
வல்லமையான்வில்விசையன்

வேந்தர் துரைதருமர் செம்பொன்
விந்தைப்பதம் வந்துகண்டார்

விருத்தம்

மௌன துருவாசரிஷிசபித்ததாலே
மக்கள்பட்டுமடிந்ததினல் வனத்தில்வேட்டை
கவனசிலைவேடனிடகணையால்மாயன்
கமலபதந்துளைபட்டுக்களைத்துவீழ்ந்தே
புவனமத்திபுரத்தாசைவைக்கவேண்டாம்
புறப்படுங்கள்வைகுண்டபுரத்திற்சென்றே
தவனமொழிமுனரைந்திடப்பட்டணமுங்கொள்ளை
தான்கொண்டோமுங்கள்மலர்த்தாள்கொண்டோமே.

வசனம்

அகோசரணஞ்சரணம் தரும புத்திர மகாராசனே தூருவாசரிடசாபத்தினலே துவாரகையிலுள்ள யாதவர்களெல்லாம் படுசூரணமாயிரந்துபோனர் பிறகு கண்ணபிரானும் காட்டிலே ஆலமரத்திலே படுத்திருக்கும்போது காட்டுவேடன் கணைக்காலிலேபட்டு வைகுண்டம்போய்விட்டார் துவாரகாபுரியிலே வேடர்புகுந்து கொள்ளையடித்தார்கள் எங்களிட வலுமை முழுவதும் கிருஷ்ண மூர்த்தியோடே போய்விட்டபடியினலே நாங்கள் திருடரை வெல்லமாட்டாமல் திரும்பி தங்கள் சமுகம்வந்து சேர்ந்தோமையாசுவாமி.

விருத்தம்

கரியதிருமேனியனே நீயேதஞ்சம்
காணென்றபேர்க்குதவி தானேதானய்
உரியதுணையாயிருந்து சுகந்தருமெம்மானே
ஒளிவிளக்கேகச்சைமுகத் துருவேமுன்னாள்
அரியதிருவனத்திலே நமையுங்காத்த
ஆரியனே அச்சுதனே யமரர்கோவே
கரியதிருமால்பதத்தைத் தேடியப்போ
காண்பதெனத்தருமர்மிகக் கலங்குவாரே.

### தருமர்புலம்பல்-தரு-புன்னாகவராளி-அசாவேரி

| | | |
|---|---|---|
| கண்டனையோவில்விசையா தம்பியடா | தம்பி | செலுங் |
| காவலனேபோர்வீமா தம்பியடா | தம்பி | |
| விண்டனையோநல்லமொழி தம்பியடா | தம்பி | பச்சை |
| மேனியனைக்காண்பதெப்போ தம்பியடா | தம்பி | |
| விட்டுவிட்டுப்போனதெப்போ தம்பியடா | தம்பி | நன்மை |
| வேணுகரக்கோபாலன் தம்பியடா | தம்பி | |
| காரடர்ந்தமேனியனே தம்பியடா | தம்பி | பூங் |
| காலில்ரத்தங்கண்டீரோ தம்பியடா | தம்பி | |
| கள்ளமரச்சொல்லுமடா தம்பியடா | தம்பி | நீங்கள் |
| கண்டுசுகங்கொண்டீரோ தம்பியடா | தம்பி | |
| வள்ளல்சமர்த்தெள்ளிமைக்கு தம்பியடா | தம்பி | துணை |
| வந்தபதமெங்கேயடா தம்பியடா | தம்பி | |
| பட்டணத்தைகொள்ளையிட தம்பியடா | தம்பி | நீங்கள் |
| பார்த்துவந்தநேர்த்தியென்ன தம்பியடா | தம்பி | |
| கட்டழகன்சிர்பதத்தை தம்பியடா | தம்பி | கொன்று |
| காயம்படப்போயினதே | தம்பி | |
| மேட்டிஜமர்கோட்டையிலே தம்பியடா | தம்பி | முன் |
| விட்டகணைபட்டதென்று தம்பியடா | தம்பி | |
| காட்டில்விரல்நீட்டியதும் தம்பியடா | தம்பி | அந்த |
| கருத்தெங்கேபோயினதோ தம்பியடா | தம்பி | |
| வாதொருநாள்தூதுசென்று தம்பியடா | தம்பி | சொன்ன |
| வாதெங்கேபோயினதோ தம்பியடா | தம்பி | |
| போதகுரியோதரனை தம்பியடா | தம்பி | வென்ற |
| புத்தியெங்கேபோயினதோ தம்பியடா | தம்பி | |
| வேதாந்தவேதியனே தம்பியடா | தம்பி | அங்கே |
| விட்டுமறந்திடீரோ தம்பியடா | தம்பி | |
| நாதாந்தத்தின்பொரு தம்பியடா | தம்பி | தேடி |
| நாம்பதத்தைக்காண்பதெப்போ தம்பியடா | தம்பி | |
| பத்திதரும்அத்திபுரத்தூரையடா | தம்பி | இந்த |
| பட்டணத்தைவிட்டுமடா தம்பியடா | தம்பி | |

கொற்றவன் தனித்திருப்பான் தம்பியடா தம்பி வை
குண்டபதினும்போகவேணுமடா தம்பி

விருத்தம்

வெம்பிமனம் உள்ளுடைந்துகலங்கிவாடி
விம்மிவிம்மியழுமரைமிகவும்பார்த்து
தம்பியர் தன்வலிமைபெறுமனதிற்கேற்ற
தருமராஜனுங்கொலுவீற்றிருந்தகாலே
கும்பிதனிலடித்தழுதுராமர்நைந்து
கோவிந்தா அச்சுதனேகோகோவென்று
தும்பிமலர்க்குழலணங்குமாளுள்சித்திர
துரோபதையுமனங்கலங்கித்துடிக்கின்றாளே.

துரோபதைபுலம்பல்-தரு-இ-ம்-நீலாம்புரி-அ-ம்

பல்லவி

உந்தன்பதங்கெதியெந்தெந்தநாளைக்கும் ராமராமா
இந்தவேளையில்நீசென்றவிந்தையறியேனே ராமராமா

அநுபல்லவி

ஆதியிலேசொன்னநீதியரிகரி ராமராமா-போகும்
போதினிலேயென்னசூதோவறியேனே ராமராமா

சரணங்கள்

சென்றபதமதைக்கண்டுபிடிப்பேனே ராமராமா ஆவி
நின்றுபதைக்குதே அன்றுளன்னசெய்வேன் ராமராமா
சாவதுமிப்படிபோவதறியேனே ராமராமா எங்கள்
தலைவர்க்குநீயொருதெய்வமிருந்தாயே ராமராமா
செய்வகைவஞ்சகம்இவ்வகையாகுமோ ராமராமா எந்தத்
தேசத்திருந்தாலும்நேசம்வைத்தாளுவாய் ராமராமா
எங்கேயிருந்தாலும்பங்கிலிருதுணை ராமராமா உன்
தங்கையும்நின்றுமயங்குவதேதிஅரி ராமராமா
சூழ்ந்தகவிவந்துநேர்ந்துமிக்கையிலே ராமராமா எந்தன்
வாய்ந்தநகர்விட்டும்போந்தனையோ அரி ராமராமா

கற்பினிற்பஞ்சவர்க்கொப்பனையாமெனை ராமராமா
சர்ப்பனையாய்விட்டுத்தப்பினையோ ராமராமா

முன்செயலாவதும்பின்செயலாவதும் ராமராமா-இனி
உன்செயலேகெதியென்செயலாவதோ ராமராமா

மட்டிட்டுநின்றிங்கேதொட்டிட்டபேருக்கு ராமராமா-நீயும்
விட்டிட்டுப்போகாமல்கிட்டத்துணையிரும் ராமராமா

விருத்தம்

ஆண்டபதிகாவனந்தம்சூழநாடு
அத்திபுரத்தரசுபுரிதருமராசன்
வேண்டிநிதம்மினைத்தவரம்தருகும்பச்சை
மேனியனேகலியுகமும்மிகுந்தநாளில்
பாண்டவர்க்கோருதவியினியார்தானிங்கே
பாராமல்வேறுமொழிபகர்ந்திடாமல்
மாண்டனையோயெனக்கதறிப்பதறிக்குந்த
மாதேவிவிம்மிமிகப்புலம்வாளே.

குந்திதேவிபுலம்பல்-தரு-நீலாம்புரி-இ-ம்-ஆ-ம்

எல்லார்க்குநல்லவனாய் இருந்
தின்னவினைக்கின்னதென்றே

சொல்லழகும்பல்லழகும் மணித்
தோளழகுங்காண்பதெப்போ

கச்சணிந்தபூண்முலையாள் மனங்
காதல்கொண்டேசீதேவி

லக்குமியாள்குடியிருக்கும் திரு
நெஞ்சழகைக்காண்பதெப்போ

கணையாழிகையழகும் செம்பொன்
கட்டழகும்பொட்டழகும்

பணியக்கதிகொடுக்கும் செம்பொன்
பாதமலர்காண்பதெப்போ

பொய்க்கவலைதனையகற்றி அத்தி
புரத்தைநனிதான்புரக்கும்
எருக்குழலியார்க்குதவி இப்போ
திருந்தருள்வாய்கேசவனே

விருத்தம்

குடிவளரத்தருமனிடகிலேசந்தீரக்
குந்தமாதேவியழுங்குராலுமோய
வடிவுதுரோபதைமானுஞ்சிந்தையாறி
வருந்தாமல்தருமர்கொலுவிருந்தகாலை
மடிபிடியுங்கடுநடையுந்தானேவிற்ற
மனைதனிலேபணமிருந்தவாருய்ச்சண்டை
அடிபிடியுந்தள்ளுகின்றாராகரெண்டு
ஐயருமேதருமர்கொலுவதில்வந்தாரே.

வசனம்

அகோதெப்படியென்றால் தருமராசாவானவர் துரியோதனன் முதலான நூறுபேர்களையும் இரணக்களத்திலே படுசூரணமாகும்படி தமது தம்பிமார்களைக்கொண்டு பிரபலமானயுத்தங்களை நடத்திமுடித்துப் பட்டாபிஷேகம் செய்துக்கொண்டு அஸ்தினபுரியிலே சிம்மாசனத்திலே யிருந்து தன்னுயிர்போல் மன்னுயிர்களைப் பார்த்து ஆறிலொரு கடமைவாங்கிக்கொண்டு நீதிதவராமல் செங்கோல் செலுத்திக்கொண்டு வருகிற காலத்திலே திரிதராட்டிரன் குந்தமாதேவி காந்தாரி விதுரமகாராசன் இவர்கள் நாலுபேரும் காட்டுக்குப்போய் தவஞ் செய்துக்கொண்டிருந்தார்கள் தருமராசன் முதலானபேர்களும் அப்போதப்போதுகாட்டுக்குப்போய் அன்னைதந்தைகளைவணங்கி ஆசிபெற்றுக்கொண்டு அவர்களது தவத்திற்கு இடையூறு வராவண்ணம் பாதுகாத்து வருகிற காலத்திலே ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் துவாரகாபுரியிலே வேடன்கொடுத்த அம்புபட்டு தேகத்தைவிட்டு வைகுண்ட பதத்திற்கு எழுந்தருளிய சங்கதிகளைத் தருமராசாவான

வர் காட்டிலேயிருக்கும் குந்தமாதேவியாருக்குந் தெரியப்படுத்திய வுடனே குந்தமாதேவியானவர் பதறிக்கதறிக் கைகாலுதறிப் புலம்பிக்கொண்டிருந்தார் தருமபுத்திரமகாராசன் அஸ்தினாபுரத்திற்கு வந்தவுடனே காட்டிலே அக்கினிபிடித்து திருதராஷ்டிரன் முதலான மூன்றுபேர் அக்கினிக்கிரையானார்கள் விதுரமகாராசன் வேற்றிடஞ் சென்று உயிர்த்துறந்தார்.

விருத்தம்

வீடுவிற்றவேதியனும்மதனைக்கொண்ட
வேதியனுமாயிரண்டுமறையோர்தானு
மூடிவிட்டதிரவியமவ்வீட்டிற்கண்டு
முன்னவனுமதைத்தீண்டாமுனிவுகொண்டு
பாடுபட்டும்பெரியோர்கள்சேர்த்தபொன்னை
பாங்குடனேகொள்கவெனப்பின்னோன்சீறி
நாடுமுற்றத்துதிதர்மராசன்முன்பே
நாம்வழக்குத்தீர்ப்போமெனநண்ணினரே.

வசனம்

அகோதெப்படியென்றால் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் வைகுண்டத்திற்குப் போய்விட்டபடியினாலே தருமராஜனும் குந்தமாதேவியும் துரோபதையம்மனும் மற்றவர்களும் மகாவிசனத்தோடு புலம்பினபிறகு ஒருவாறு மனந்தேறியிருக்கும்போது ஒரு வீட்டை விலைக்கு விற்று அதிலே பணப்புதையல் அகப்பட்ட காரணத்தாலே அந்தப்பணம் எனக்கு உனக்குயென்று மடிபிடித்துச் சண்டை போட்டுக்கொண்டு இரண்டு பிராமணர்கள் தருமராசன் கொலுவுக் கெதிராக வருகிறவிதம் எப்படியென்றால்.

ஐயமார் வருகிற-தரு-நாதநாமக்கிரியை-அடதாளம்

பல்லவி

மாமறையோர்வந்தனர் இரண்டுபேர்
மாமறையோர்வந்தனர்

அநுபல்லவி

மாமறையேநுதி நான்மறையோர்தொழும்
பூமுறையோபகை மேல்முறையாய்ரண்டு-மாம

சங்கிதசூட்சியம் மங்களராச்சியம்
சங்கிதவாச்கிய பங்கினில்வியாச்சியம்-மாம

தாஷ்டிகவான்வெகு தேட்டியவான்மூடி
சூட்டியவான்தர்மர் நாட்டியவான்முன்னே-மாம

விருத்தம்

தருக்குலவுகரத்தவனேபொருமைவேந்தே
தருமனேயெமதுமொழிசாற்றக்கேளீர்
வருக்கமுடனிவர்பதியிலிருந்தசெம்பொன்
வாங்குதற்குத்தானிந்தவழக்குமாமோ
பெருக்கவிவரிடத்தினிலேதானேநாது
பெரியோர்களறிந்திடவேபேசிநன்றாய்
இருக்குமனைதனை வாங்கினேனல்லாமல்
இருந்தபணமதனைவாங்கவில்லைகானே.

வசனம்

அகோவாருமையா தருமபுத்திரமகாராசனேநான் இந்தப்பிராமணனிடத்தி லிருந்து இவர்குடியிருக்கிற வீட்டைக் கிரயத்துக்குவாங்கினேனல்லாமல் இவரிட பெரியோர்கள் தேடிப் புதைத்து வைத்த பணத்தையும் நான் வாங்கவில்லை நான் இந்த வீட்டை வெட்டிப்பார்த்தபோது அதிலே பணப்புதையல் கிடைத்தது இந்தபணம் இவருடையது ஆகையினாலே அதை இவரிடத்திலே கொண்டுவந்து கொடுத்தேன் அதை வாங்கிக்கொள்ள மாட்டேனென்று மறுக்கிறாரையா தருமராசனே.

மற்றொரு ஐயர்விருத்தம்

கரும்புதெங்குக்கதலிபலாக்கமுகுசூழ்ந்த
காவளரும்நாடுகளும் தருமர்காணீர்
தரும்பொருளாய்ப்பசுவைவிற்றால்வயிற்றில்கன்று
தனதுபொருளெனக்கதனைத்தாதாவென்று
திரும்பவதைகேட்பவருமுண்டோவிந்த
தேசமதில்யாவருக்கும்தெரியாதுண்டோ
விரும்பிமனையிவர்க்குவிற்றபோதேசெம்பொன்
விற்றதற்குச்சமுசயமுமுண்டோவேந்தகே.

## வசனம்

அகோவாருந் தருமராசனே பசுமாட்டை. விலக்கு விற்றுப் போட்ட ஒருவன் அந்தப்பசுவின்வயிற்றிலிருக்கிற கன்றுகுட்டி என்னுடையதென்று வழக்குபேச ஞாயமுண்டோ என்னுடைய மனையையிவருக்குவிற்றபோதே அதிலிருந்த பணம் இவருடையதே யல்லவா மகாராசனே.

## தருமர் சொல்

## விருத்தம்

வந்துவழக்குரைத்தமறையவனைப்பார்த்து
  மணிமகுடமுடிவேந்தன்வழுத்துஞ்செஞ்சொல்
விந்தையிவரிடத்தினிலேமனையைவாங்கி
  வெகுபணமுமிருந்ததெனவிளம்புவீரே
இந்தவழக்குடையஞாயந்தீர்க்கவேளை
  யில்லையுங்களிடந்தனிலேயிருந்துவிட்டு
ஐந்துதினக்கெடுவினிலேவருவீரென்று
  அய்யமார்தனைத்தருமரனுப்பினரே.

## பொது விருத்தம்

அனுப்புவித்ததுரைதர்மத்தழகுவேந்தன்
  அருந்தவர்சேர்கொலுவிருக்கமந்நாளங்கே
சினம்பெரிதுபாவமெனக்கொடுமையாளன்
  தீவிரமாயத்திபுரத்தெருவிலோடி
தனைப்பெருதாய்தகப்பனுக்குஞ்சுமையையேற்றி
  தன்மனைவிதனைப்புரவிதனிற்கொண்டாடி
துணைப்பெரியகுடைப்பிடித்துசரசம்பேசி
  தோன்றினன்கலிபுருஷன்தோன்றினனே.

## கலியன்வருகிற-தரு-ஆனந்தக்களிப்பு.

| | |
|---|---|
| தாயின்கையிலொருசட்டி | பெற்ற |
| தகப்பன்கையிலொருசட்டியும் | முட்டி |
| வாயிலவரையதட்டி | பார்த்து |
| வலியக்கருவிகொண்டுகலியன்வந்தானே | தந்தன |

மாதாவிறகுக்கட்டோடே பெற்ற
வரிசைத்தகப்பனுக்குஅரிசியின்கூடை
ஆதாரமனவிபட்டாடை கட்டி
அலையக்கொசுவணத்தொடுகலியன்வந்தானே தந்த

ஆத்தாளுக்கொருபழஞ்சேலை பெற்ற
அப்பனுக்கொருகந்தைமுப்பத்துமூலை
வேற்றாளைக்கண்டுமப்பாலே பார்த்து
விலக்கிச்சிரித்துநோக்கிக்கலியன்வந்தானே தந்த

மதிகொண்டதால்மனஞ்சலிக்க மெத்த
வருந்தித்தகப்பன்வேர்வைபொருந்திநீர்துடைக்க
கதிபெண்டுக்கிவன்குடைபிடிக்க சொல்லுக்
கெலியைப்போலத்தெருவில்கலியன்வந்தானே தந்த

காமமேதாயாரையுருக்கி பெற்ற
தாயானதகப்பன்சொல்ஏறுமல்மறுக்கு
தோகையும்இவனுமாய்சிரிக்கி பாவந்
தலையுந்தருமர்நாட்டில்கலியன்வந்தானே தந்த

விருத்தம்

வந்தவன் தயவில்லாதமனத்தினற்கலியன்பாதம்
புந்தியாய்க்கண்டேயத்திபுறத்துருதெருவிற்போனன்
ஐந்துநாட்கெடுவைவைத்து அனுப்பியமறையோர்மாது
குந்தியாவீன்றதருமர்கொலுவின்முன்தோன்றினரே.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக கலிபுருஷன்வந்துநுழைந்தபிறகு முன்னே ஐந்துநாள்கழிந்து வரும்படியாய்ச்சொல்லியிருந்த வழக்குக்கார பிராமணர்கள் வருகிறவிதம் எப்படியென்றால்

ஐயமார்வழக்கு-தரு-இந்துஸ்தான்-ரூ-ம்

பாங்குமனைவிற்றதல்லாற்றேடியேவைத்த
பணமுனக்குவிற்றதுண்டோபணத்தைத்தாடா

தாடாவென்றுகேட்பதற்குஞாயமுண்டோடா — வீடும்
தன்னுடனேசேர்ந்தசெம்பொன் தருவதுண்டோடா

தருவதில்லையென்றுசொன்னால்விடுவதுண்டோடா — நாமள்
தாசிகொண்டாள் அவள்பிள்ளை தருவதுண்டோடா

ஊரிற்பெருங்கடல்சிப்பிவிலைக்குகொண்டால் — அதுக்
குள்ளிருக்குமுத்துநமக்கில்லையென்பாரோ

இல்லையோசரக்குங்கோணியைக்கொண்டால் — அதில்
இருக்குஞ்சரக்குநமக்கென்பதுமுண்டோ

எண்பதுதொண்ணூருக்கொருஎருமையுங்கொண்டால் — அது
ஈன்றகன்று கொண்டவனுக்கில்லையென்பாரோ

கொள்ளும்விலைப்படிக்கொருசீலையுங்கொண்டால் — அதுக்
குள்ளிருக்கும் நூலுமவனுடைமையன்றோ

உடமைகொடுக்கவொருவிலையைத்தீர்த்தால் — அதில்
உள்ளகம்பியில்லையென்றல்விடுவதுண்டோ

விட்டடைநமக்கொருபட்டிக்கொடுத்தால் — அதில்
வீழ்ந்தஎருவன்றியொருபசுவுங்கூடவா

கூடுஞ்சோலைப்பலாப்பழம்விலைக்குகொண்டால் — அதுக்
குள்ளிருக்கும்விதைவிற்கவில்லையென்பாரோ

விருத்தம்

இப்படிஐயமார்கள்இயம்பிடக்கலியன்வந்த
தப்பிதமிதுவேயென்று தருமர் தம்மனதிலெண்ணி
மெய்ப்புகழ்பரிசித்தேநீமேலுமுன் செங்கோலாகும்
அப்புறமிந்தஞாயமறுமெனத்தருவர்சொன்னர்.

விருத்தம்

சொல்லியஞாயம்நன்ருய்த்தோன்றிடத்தானைப்பார்த்த
மெல்லவேமறையோரந்தவிதியிதுநடந்தகாலை
நல்லதோர்சாத்திரத்தின் நயஞ்சகாதேவனுக்கு
வல்லவன் தருமராசன்வாய்திறந்திசைக்கலுற்ருர்.

வசனம்

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் வழக்காடிக்கொண்டு வந்த பிராமணர்களைத் தருமராசன் கண்டு வாருங்கள் சுவாமிகாள் இனிமேல் இவ்வுலகத்தை நமதுபேரப்பிள்ளையாகிய பரிட்சித்துமகாராசன் அரசாட்சி செய்யப்போகிறார் அவரிடத்தில் வந்து உங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ளுமெனச் சொல்லுகிறவிதம் எப்படியென்றால்,

தரு-நொண்டிச்சிந்து

கார்பூத்தமேனியனும் உந்தனிட
கண்டந்தனில்ஒளிக்கின்றவகை

நேர்பார்த்துநாம்பிடித்து சும்மா
நிற்கவெளிதனிற்கச்சிவிடுத்த

சகாதேவனேகேளாய் தம்பியிப்போ
சூழ்ந்தகலியுகமும் வாய்ந்ததடா

பகவான்பெண்டுபிள்ளை நம்மளிட
வீரியமுங்கொண்டகாரியமும்

செங்கோல்துரைத்தனமும் தம்பியிந்தச்
சீமையிலுங்கொண்டபூமியிலும்

அங்கேபுதைத்துவைத்த செம்பொன்
ஆனைகளும்பலசேனைகளும்

கூடவருவதுண்டோ தருமத்தை
கொண்டேஅரிபத்தனண்டையிலே

நாடியிருக்கவேணும் இந்தவித
நாட்டமறியாதொருமோட்டாளர்

தனக்கேற்றகாலமடா இன்னுமுள
தருமங்களேபலகருமங்களே

நினைத்திடும்நல்லவரார் அவர்கள்
நிலைக்கெனவேமழைபலத்திடுமே

பாவவினைசெய்வோர்க்கும் கைகூலி
பற்றியேவழக்கோரம் நத்துவோர்க்கும்

புவிவோரம்செல்வோர்க்கும் ஏழைகளின்
பொன்னையபகரித்துண்ணுவோர்க்கும்

பிழைகேடுசெய்வோர்க்கும் கண்கண்ட
பின்னையிடுசாட்சிக்காயிந்நிலத்தில்

விழைகூலியைக்குறையக் கொண்டுமொழி
விண்டுங்கடுங்குலைகள்கொண்டவர்க்கும்

அதிகப்பவத்தழுந்தி தருமங்கள்
அன்றேதெரியாதவண்டருக்கும்

கதிவீடுகிட்டாதேடா இனிமேல்
கீழ்வரப்பானதுமேல்வரப்பாய்

வருங்காலமிப்படியே இனிமேல்
வந்துவிடும்நாமினிமுந்திடவே

தருங்காலம்வந்ததடா இப்பவெகு
தாகமேவைகுண்டம்போகவேணும்

சீதையுன்செங்கோலும் வரும்பரிச்
சித்துவுக்கேபட்டங்கட்டிவைத்து

பச்சைமால்மேனியுள்ளான் சொன்னதொரு
பாங்கின்படிக்குநாம்போகவேண்டும்

காயாம்புமேனியன்றன் உறைபதம்
காணவேண்டும்புகழ்பூணவேண்டும்

தூயனுஞ்சகாதேவா இனிமேற்
சொல்லுகிறேன்நீங்கள்மிகநல்லதம்பிகாள்

நால்வருந்துரோபதையும் அக்கினி
நாடவேணும்கதிதேடவேணும்

மால்பதங்காண்பதற்கு இங்கேமுன்
வைத்திடுவோம்பரிசித்தனுக்கு

அதிரதத்தளம்நெருங்க குடிகள்
யாவரும்சேர்ந்திடச்செய்தினிமேல்
சதிருடன்தம்பியர்காள் சொன்னதொரு
சாக்கிரதைப்படிசீக்கிரமாய்

தந்தன தனதனு

விருத்தம்

செந்திருசேர்அத்திபுரவளமார்நாட்டின்
தெருவினிலேகலியன்வந்தசெய்திகேட்டு
தந்திரத்தாலரிதிமால்பதமேசேரத்
தர்மருரைமொழிசிறிதுந்தவறிடாமல்
வந்துருக்கிவிராடன்முன்னேபொருளைக்கேட்ட
மல்லர்தப்பியோடவழிமறித்துக்சென்னி
பின்திரும்பியோடெனவேவிரட்டிவிட்ட
பெருமைசகாதேவன்கொலுபெருக்கினனே.

தரு

மத்தளந்தம்பூருத்திபுகாளாங்குழல்பூரிகை இந்த
மண்ணுமேலானவிண்ணுக்குங்கேட்டிடும்பேரிகை

கைத்தளமிப்படிமெத்தப்பலபலபாக்கியம் பட்டங்
கட்டக்கிசைவேளைகிட்டினதேவெகுயோக்கியம்

மங்கையர்கூட்டமும்வெண்கொடியாட்டமும்வலுவே வச்ர
மாணிக்கமும்முத்து ஆணிப்பொன்னும்பெற்றகொலுவே

அங்குள்ளசேனையும்பொன்பொடியாளரும்கூட்டமே வளர்
அத்திபுரத்தினில்உற்றதுரைமக்கள்ஆட்டமே

வாரணவீதியுந்தோரணவீதியும்குறிப்பே தங்க
மாடங்களும்சித்திரகூடங்களும்அலங்கரிப்பே

சீரணிமன்னவர்பேரணிமன்னவர் நெருக்க
தேட்டத்தினல்முனிக்கூட்டமொருபுறநெருக்க

தேசந்துதிதர்மராசன்மனமங்கேசிரிக்க மனத்
தென்புத்ரநாலுதம்பிகளும்அருகிருக்க

விசுபுகழ்உல்லாச அருச்சுனன்பாலன் வாள்
 வீமனுமேபெற்ற காமனுமேமணக்கோலன்

உத்தமனைக்கொண்டு வைத்துக்கொலுவினிலேற்றியே மன
 உண்மைமபதாயின்று தன்மருந்தம்பிகள்போற்றியே

அத்திபுரம்பரிசித்துக்குமேமுடிசூடினார் பெற்ற
 அந்தத்திருமகள்குந்தமாதேவியைத்தேடினார்.

விருத்தம்

அத்திபுரம்வளநாடுதலைவர்சூழ
 ஆனைபெருஞ்சேனைமுதலருமைசேர்ந்த
வெற்றிபரிசித்தனுக்குமகுடஞ்சூட்டி
 விடைகொடுத்தும்புவியாள்வையென்றேசொல்லி
புத்திதருதாயிடத்தில்விடைகொண்டாடி
 போவமென்றுஐவருமாய்புறப்பட்டங்கே
பத்தினிகுந்தமாதேவிஇரண்டுசெம்பொன்
 பதமலரைநினைத்துதருமர்பகருவாரே.

தரு-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி

போகவிடைதாருமம்மா வைகுண்டத்திற்
போகவிடைதாருமம்மா

அநுபல்லவி

போகவிடைதாருமம்மா யாங்கள்நிசமா
வாருகலிவந்ததம்மா போகாதிருக்கலாமா-போக

சரணங்கள்

மதித்தானேஇலட்சுமியைப் பதித்தானேகல்லைப்பெண்ணாய்
மிதித்தானேவெண்மலர்ப் பாதந்தனைதேடுதற்கு-போக

பெரியானேயெவ்வுயிர்க்குஞ் சரியானேமேகவண்ணன்
சூரியானேவைத்திடத்தி லரியோதத்தேடுதற்கு-போக

விருத்தம்

நம்மைபெற்றதாய்பதத்தைவணங்கிப்போற்றி
நாடுமெத்தஅத்திபுரநகரைநீங்கி
பெண்மயிலாள்துரோபதைமாதவளுங்கூட
பிரிவதென்றுசொல்லியதோர்பேச்சைக்கேட்டு
வண்மைபெறும்பாண்டவர்கள்மனையிலுள்ள
மாதர்களுமிருவிழிநீர்வழியத்தானே
தன்மார்பிலடித்லெழுந்துதானேமோதித்
தரையினிலேவிழுந்துபரதவிக்கின்றாரே.

புலம்பல்-தரு-நாகவராளி-ரூபம்-சாப்பு

பல்லவி

திருமால்அரிபெருமாள்பதம் தேடியேசெல்லாடியே
தருமர்சொத்தைமரமாயுயிர்தரிப்போம் எங்கேயிருப்போம்

அநுபல்லவி

பொய்யோயிதுமெய்யோவிட்டுப் போவதோநிசமாவதோ
செய்யும்ஐவர்கையினால்தண்ணீர் தெளிப்பார்எம்மையளிப்பார்

சரணங்கள்

என்றல்லோமனங்கொண்டல்லோநினைத்திருந்தோம்பாழ்சிறந்தோம்
பண்டுமேகனியென்றிடுந்துரோபதியைப்பிரிவதுவோ

பெத்ததாய்க்கொருபுத்திதான்சொலும்பிள்ளைகள்ஒன்றுவிள்ளுவீர்
சித்தமேகனல்பற்றுதேஐய்யோ தெய்வமேநீங்களேவரும்

விட்டுமேமறந்திட்டுமேமனம் வெம்பிவாய்சோறுதின்பமோ
மட்டிலாதுயர்பட்டணம்பாழ் மன்னரேநீதியென்னவோ

மேடைமேல் அன்னப்பேடுபோல்நிற்கும் வீதியாள்துரோபதியாள் தன்னை, பிரியோமிங்கே திரியோமுங்கள் பின்னிலே நாங்கள் சொல்லுவோம்.

விருத்தம்

என்றுமிகக்கொதித்துமனந்துடித்துவாடி
இருவிழியும்புனலருவிசொரியழவிம்மிக்

கொண்டவர்கள்பதைத்துக்கலங்கிப்பின்னே
கூடவருவோமென்றுகூறும்வார்த்தை
கண்டுமிருபதத்தினிலேவணங்கிப்போற்றிக்
கண்கலங்குவோர்மனக்கவலைதீர
இண்டுபுவியாசையெனுமயக்கந்தீர
விளம்புவார்தருமருரைவிளம்புவாரே.

வசனம்

இவ்விதமாகப்புலம்புகிற சகலஜனங்களும் விசன மாறும்படியாகத் தருமராசன் சொல்லுகிறவிதம் என்னவென்றால்.

தரு-காம்போதி-ஆம்

| | | |
|---|---|---|
| நாரணனேபரி | பூரணனே | சொன்ன |
| நாளைத்தேடி | செம்பொன் | தாளைத்தேடி |
| பாவைமாரே | யிப்போ | போவநாங்கள்-தடை |
| பண்ணவேண்டாம் | துய | ரெண்ணவேண்டாம் |
| பஞ்சவர்கள் | நாங்கள் | ஐந்துபேர்கள்-எங்கள் |
| பங்கில்வாழும் | நர | சிங்கராமர் |
| தஞ்சமாகப் | புவி | வஞ்சம்போகவிட்டு |
| தப்பவேணும் | நாங்கள் | இப்போதானே |
| அத்திபுரம் | பதி | சித்தனுக்கே-கெதி |
| ஆடினேமே | முடி | சூடினேமே |
| உத்ததாய்மார் | அன்பு | பெற்றதாய்மார்-நீங்கள் |
| ஒங்குசெங்கோல் | தன்னை | தாங்கவேணும் |
| மண்ணினசை | கொண்ட | பெண்ணினசை-பெற்ற |
| மக்களாசை | நாங்கள் | வைக்கொணுது |
| அன்றுவீமன் | வல்லி | சொன்னவாய்மைமொழி |
| அறிக்கைகேட்டா | லிங்கே | யிருக்கொணுதே |
| பச்சைமாலை | கண்டு | மெச்சிநாங்கள்-இடம் |
| பார்த்துவைப்பேன் | கதி | சேர்த்துவைப்போம். |

வஞ்சம்போலேஅவர் நெஞ்சமாகும் திரு
மாயன்கோபம்பெற்ற தாயின்மாரே

வசனம்

அகோவாருங்கள் நமது அரண்மனேயில்வாழும் பெண்களே தாய்மார்களே நீங்கள் விசனப்பட்டால் சந்தோஷத்தோடு எங்களைவைகுந்தபதவிக்குப் போகும்படியாய் உத்திரவு கொடுக்கவேணும் தாய்மார்களே.

அப்படியே போய்வாருங்கள் குழந்தைகளே

விருத்தம்

தாகமுடன்பாண்டவர்களஞ்சுபேரும்
தாய்மாரைபணிந்துவிடைதானேபெற்று
போகவெனதரிதிருமால்கமலபாதம்
போற்றிடுவோமென்றுமனந்தேறுங்காலே
வாகைபுனேவைவருக்குமழியாக்கன்னி
வனத்திலேதனித்திருந்தமானுள்சித்ர
தோகையாள்மாமிபதம்நினைத்துக்கொண்டு
துரோபதைகண்கலங்கிமனந்துடிக்கின்றுளே.

துரோபதைபுலம்பல்-தரு-இ-ம்-நீலாம்புரி-அ-ம்

மணமிருக்குங்குழலிருந்த மாதேவிமாமியெந்தன்
கணவருக்குந்துணேயிருந்த காரணன்தான்போனபின்னே

இங்கிருந்து ஆவதென்ன என்கணவருடன்கலந்து
பொங்குபுகழ்வைகுண்டத்தில் போகவிடைதாருமம்மா

மானமுள்ளதிருச்சபையில் வனத்துயிலேகாத்தமெய்யன்
போனபின்புநானடியாள் போசனமுஞ்செய்வதுண்டோ

சீமைசுற்றுங்குறத்திபோலே தினேவாங்கிப்போனபோது
என்மயக்கஞ்சிறைகூடத்தில் என்கொழுனன்கதவுபூட்டி

அடைந்தசிறைமீட்டவன்ருன் அங்குதப்பிப்போனபோதே
மடிப்புநானிருக்கவேனந்த வைகுண்டத்தில்போறேனம்மா

சீர்பதத்தைநமக்குதவி செம்பதத்தாற்புவியளந்த
பேர்பதத்தையொருதினமும் பிரிந்திருக்கமாட்டனம்மா
மாயனைநான்காண்பதற்கு வாழ்த்தியுங்கள்மனமகிழ
ஆயனைநான்காண்பதற்கு அனுப்பிவிடைதாருமம்மா

வசனம்

சரணஞ்சரணந்தாய்மார்களே அடியாளை அனுப்பவேணும் தாய்மார்களே.

அப்படியே போய்வாருமம்மா தாயே

விருத்தம்

சற்றுமனஞ்சலியாதமங்கைமார்கள்
மனம்வருந்திவிடைகொடுக்கவாங்கித்தானே
அத்திபுரமாநகரிலழகாய்நின்ற
ஆயிழையாள் துரோபதைமாதவளுங்கூட
சத்தியவாக்கொருநாளுந்தவரிடாத
தார்வேந்தன்புவிபுகழுந்தர்மராசன்
பத்தினிமாரானபலதாய்மார்பாதம்
பணிந்துமிகவணங்குமொழிபகருவாரே

வசனம்

இந்தப்பிரகாரம் தருமபுத்திர மகாராஜன் அத்தினாபுரத்திலே பிரிவாற்றாமற் புலம்புகிற தாய்மார்களிடத்தில் விடைகேட்டபோது அவர்கள் சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.

விருத்தம்

பாவமென்றகலியுகத்தை இனிக்கண்ணாலே
பார்ப்பதுவேபொல்லாத பாவமென்று
சேறவிடைதாருமெனப் பெரியதாய்மார்
சீர்பதத்தைப்பணிந்தேற்றிச் சிந்தைவாடி
பூவுலகின்மண்ணாசை வெறுத்துமாயன்
பொற்பதத்தைகாண்பதற்குப் போவேனென்று

காவலர்கள் துணிந்துரைக்க வவரைப்பார்த்துக்
கட்டழகர்கன்னியர்கள் கதறுவாரே

புலம்பல்-காம்போதி-இராகம்-ரூபகதாளம்

சத்தியதுரோபதை பத்தினியாளுடன் மக்களே-நீங்கள்
சார்ந்தொருவைகுண்டஞ் சேர்ந்திடுங்காலத்தில் மக்களே

புத்திசெரியிந்த அத்திபுரமப்பா மக்களே சொல்லும்
பூவனமில்லாத காவனமாகுமே மக்களே

வாங்கெதிமாயவன் தருங்கதியாலப்பா மக்களே நீங்கள்
வைகுண்டவான்பதி மெய்யினுற்போயினுல் மக்களே

தருங்கதிஅத்திபுரங்கதியானது மக்களே செழுந்
தாமரையில்லாத்தடாகமுமாமய்யா மக்களே

வன்பதினேழக்குரோணியாஞ் சேனையும்மக்களே நீங்கள்
முன்பந்தப்போர்க்களந் தன்னில்மடிந்தீரே மக்களே

நீங்கள் துணையென்று நாங்களிருந்தோமோ மக்களே இப்போ
நீங்கிவிட்டாலெங்கள் பாங்குமென்னுவய்யா மக்களே

துரோபதையாளுடன் நீங்கள்பிரிவது மக்களே எங்கள்
தூலத்தைவிட்டுப் பிரிவதுபோலய்யோ மக்களே

என்ன துணைகொண்டு நாங்களிருப்போ மக்களே இனி
யெப்படிநாங்கள்பிழைப்பதுசொல்லுவீர்மக்களே

உங்களைவிட்டுஒருகணம்நீங்கினுல் மக்களே நாங்கள்
ஊழுமுறக்கமும்காணுவதில்லையே மக்களே

காலந்தனையுயிர் போலேவிடுக்கவும் மக்களே முனி
பங்குஞ்சிவன்செயல் எங்கள்விதியப்பா மக்களே

பொங்குமிருதனந் தாங்கியிருந்தென்ன மக்களே நல்ல
புத்திரபாக்கியம்மெத்தப்பெரிதப்பா மக்களே

தாங்குதுரோபதை நீங்கள்பிரிவது மக்களே இப்போ
தாஷ்டீகமாய்நாங்கள் கேட்டவரமிது மக்களே

தாண்டுங்கதிசுக மூண்டுவிதிதனில் மக்களே பாணே
பள்ளத்திறம்பெற்ற பிள்ளைகளின்ருக்கால் மக்களே

என்றுசுபட்சவைகுண்டபதிக்கிப்போமக்களே நீங்கள்
எய்திடநாங்களுஞ்செய்தோமோ தீவினைமக்களே

வாவென்றழைத்தவன்கோவிந்தநாரணன்மக்களே மன
வர்மத்தினால்கர்னன்தர்மத்தைக்கேட்டவன்மக்களே

கோவங்கள்செய்திடப்பாவம்பொல்லாதையோமக்களே
கொண்டுவைகுண்டத்தைக்கண்டுசெல்வீர்களேமக்களே

### விருத்தம்

தருந்தயவிற்குறியவர்பால்விடையும்வாங்கி
தன்பதியாமத்திபுறந்தன்னை நீங்கி
விருதுபரிசித்துவரச்சேனைசூழ
வெண்குடைகளாடவெண்சாமரைகள்வீச
விருதுபெருமரிதிருவைகுண்டஞ்சேர
புறப்படுங்களென்றுரைத்துப்பெரியவேந்தன்
உறுதியென்றசொல்லதுவேமனத்தினுட்டி
ஒருப்பட்டுத்தருமர்வெளிப்புறப்பட்டாரே.

### தரு-நீலாம்புரி-இ-ம்-தி-ம்

மாயன்பெருமாளை திரு வைகுண்டவாசனை
காயாம்புமேனியனை தேடி கண்டுதெரிசிப்பதற்கு

பஞ்சவர்களைவருமாய் திரு பாங்குபெறுதுரோபதையும்
வஞ்சகலிதுடராமல் சென்று வடக்காந்திசைநோக்கி

பரிந்துநடக்கையிலே அந்த பட்டணம்வாய்விட்டலரும்
திருந்துபசித்துடனே மன்னர் சேனைபடைசூழ்ந்துவர

ஆறிலொருபங்குபெற்று செங்கோ லரசாளுமன்னவனே
கூறுமொழிவார்த்தையொன்று பற்றி குடியரளர்தான்றுடர

மனதிலும்பொய்சொல்லாத குந்த மாதேவிமக்களைத்தான்
கனவினிலுங்காண்டதெப்போ என்று கால்தளங்கள்தான்கதற

தேன்கனிசூழ்பட்டணத்தில்செய்யும் செங்கோல்முறைமைவழி
பாங்கறியேனென்றுசொல்லி நின்று பரிசித்துதான்புலம்ப

தர்மர்திரும்பிப்பாராமல் செலும் தருமநடைகண்டுடனே
கொந்துகொந்தாமன்னவர்கள் கூடி குலாவியழுகலுற்றாள்

பொட்டெனவேயைவர்களும் கூடி போகுமிடங்கண்டுடனே
பட்டணத்தாரனைவோரும் கூடி பரிந்தேயழுகலுற்ருர்

சாந்தகுணத்தளங்கள் உரை சற்றுமொழிபொய்யாதான்
வேந்தேபிரிந்திருக்க தெய்வம் விட்டபடியெழுந்தார்

பதரிமனங்கலங்கி அந்த பட்டணத்தாரத்தனையும்
கதரித்துடர்ந்திடவே கண்டுமன்று தர்மர்நின்றுசொல்வார்

வசனம்

இந்தப் பிரகாரம் பாண்டவர்கள் பட்டணத்தை நீங்கிப்போற போது எல்லாச்சனங்களும் புலம்பிக்கொண்டு பின்துடர்ந்து வருவதை தர்மராசன்பார்த்துச் சொல்லுகிறவிதம் எப்படியென்ருல்.

விருத்தம்

விரசுபற்றிதுடர்ந்துவரும்விரிசேனைக்கும்
மிக்ககுடியானவர்க்கும்வேந்தன்செங்கோல்
அரசுபரிசித்தனுக்குமனத்தைத்தேற்றி
அத்திபுரமாநகருக்கனுப்பியப்பால்
வரிசைதுரோபதிமாதுதுடரப்பின்னே
வைகுண்டத்திருப்பதியின்வாசல்தேடி
துரிசுடனேபஞ்சவர்களைந்துபேரும்
துடர்ந்துவெகுதூரவழிகடந்திட்டாரே

தருவு-திபதை-காம்போதி-அடதாளம்

அஷ்டதிக்குங்கொண்டாட புகழ் கொண்டாட-அந்த
அத்திபுரநாடுவிட்டுபுற நாடுவிட்டு

கட்டழகன்போகும்வழிசென்று போகும்வழி-ஒரு
கங்கைவந்துதோன்றியதே-கங்கை தோன்றியதே

தோன்றும்கங்கைநீராடிகங்கை நீராடி-நல்ல
துரோபதையும்பஞ்சவரும்நல்ல பஞ்சவரும்

ஆண்டியென்றேவேஷமதைஒரு வேஷமதைக்-கண்டு
அப்புரத்தேபோகலுற்ருர்அவர் போகலுற்ருர்

கற்பனையாய்பஞ்சவர்கள்-திரு பஞ்சவர்கள்-பல
காவனமும்போகலுற்ருர்-அங்கே போகலுற்ருர்

காவனங்கள்தான்கடந்து-வனந் தான்கடந்து-வழி
கல்லுருத்தமுல்லுருத்தசெடி முள்ளுருத்த

போனவனம்பஞ்சவர்கள்திரு பஞ்சவர்கள்-நல்ல
பூவனமும்தான்கடந்தார்அவர் தான்கடந்தார்

கடந்தவனம்பஞ்சவர்கள்-அந்த பஞ்சவர்கள்-கல்ல
காட்டுவனம்-போகலுற்ருர்வனம் போகலுற்ருர்

அடர்ந்தவனம்அவ்வனந்தான்-பின்னே அவ்வனந்தான்வெகு
யாளிசிங்கம்சூழ்ந்தவனம்-இது சூழ்ந்தவனம்

சூழ்ந்தவனம்போகையிலே-அவர் போகையிலே-சிவ
சூரியனும்போயடைந்தான்-அவன் போயடைந்தான்

வேந்தருங்கால்வெளிச்சம்நல்ல கால்வெளிச்சம்-தர
வெண்ணிலவுதோன்றியதேநிலா தோன்றியதே

வெண்ணிலவுகால்வீச-பற்றி கால்வீச-அவர்
மேனியெல்லாம்சாருசிந்தசேர்வை சாருசிந்த

அன்றிரவுபஞ்சவர்கள்திரு பஞ்சவர்கள்-தூய
ராகவனம்போகையிலே-அவர் போகையிலே

விருத்தம்

கனத்தவெங்கொடியபாவி கலியனும்தெருவில்வந்த
சினத்தினல்மாயன்பாதம் தேடியேகாண்பதற்கு
வனத்தினில்நடந்துசிந்தை வாடியோர்மரத்தின்கீழே
தனித்தவர்விடிந்துபோகத் தருமரும்விளம்புவாரே.

தருமர்சொல்தரு-இராகம்-சங்கராபரணம்-அ-ம்

கன்றுகளிற்பாருங்கூகைகுலாவுது தம்பிமாரே புலி
கூட்டங்களும்பேய்களாட்டங்களும்பாரும் தம்பிமாரே
வெண்ணிலாவீசுதுதென்றலுந்தாவுது தம்பிமாரே
வேளைதரித்தினிநாளைக்குப்போகலாம் தம்பிமாரே

முத்தமிழ்தேர்பரிசித்துக்குத்தானிப்போ தம்பிமாரே வகை
முன்னுந்தெரியாதுபின்னுந்தெரியாதே தம்பிமாரே

அத்திபுரத்துக்குபெற்றவருக்கப்போ தம்பிமாரே மண
தாயிருந்தாலும்தேருவதெப்படி தம்பிமாரே

இன்பங்குலாவவேயிப்புவியாள்வது தம்பிமாரே உல
கெங்குமில்லைநம்மபங்கிலிருக்குது தம்பிமாரே

கும்புகும்பாகவேபின்புதுடர்ந்திப்போ தம்பிமாரே அவர்
கோவென்றழுதிடும்பாவந்தொலைந்திட தம்பிமாரே

பத்தினிதான்சொன்னபுத்திபலிக்குமோ தம்பிமாரே நமக்
கித்தனைப்பார்த்தாலும்உங்கள்மனதப்பா தம்பிமாரே

உனக்கென்னதெரிவதுசொன்னால்தெரியுமோ தம்பிமாரே நம்ம
பங்கில்அரிதுணைதங்கிக்கதிதரும் தம்பிமாரே

வருபவனாரங்கேபோரவனாரென்று தம்பிமாரே உங்கள்
வக்கணையாகியலக்கமறியேநான் தம்பிமாரே

காரணவைகுண்டம்போரசமையத்தில் தம்பிமாரே உங்கள்
கள்ளமில்லாமனமுள்ளதைச்சொல்லுங்கள் தம்பிமாரே

விருத்தம்

வண்மைதருகடப்பனெனுமரத்தின்கீழே
வளர்ந்திலகுமவ்விரவுதங்குங்காலை
செம்மையிந்தமொழியுரைவகுத்தேசொன்ன
செய்தியைக்கேட்டக்ஷணமேதிடுக்கிட்டோடி
வெண்மயிலாள்துரோபதைதான்கணவரோடும்
பேதளித்துமனம்பதறிப்பெரியோனை
தருமரிடபதந்தனிலேவணங்கிப்போற்றி
தாழ்ந்தசகாதேவனிதுசாற்றுவானே.

தரு-காம்போதி-இ-ம்-ஆ-ம்

வெற்றிமணிமுடிசூடும் தர்ம
வேந்தானசாந்தகனே
முந்தியுந்தானுன்பதமே ஆதி
மூலமுந்தானுன்பதமே

அன்னையுநீ தந்தையுநீ எங்கள்
ஆதியுநீ சோதியுநீ

மன்னுமெங்கள் மனந்தனக்கு தரு
மாம்பழமே சாட்சியுண்டோ

அந்திபகல்ராமனுந்தன் மன
தடியினிலேகுடியிருக்க

கந்திமனம்பிந்துமென்றால் அந்த
கலந்ததுவேசாட்சியுண்டோ

கள்ளமனமுள்ளதென்றால் நஞ்சு
காரணத்தைக்குறித்திடவே

வெள்ளைமனக்கள்ளமில்லா வேறே
வீமனெஞ்சேசாட்சியுண்டோ

பிறந்ததுண்டுபிறிந்ததில்லை நம்மை
பேதகந்தான்சூதறியோம்

அறிந்திருக்குந்தேவரிட சிந்தை
அடியிணையேதுணைநமக்கு

விருத்தம்

இணையடியேதுணையெனவே பணிந்துபோற்றி
யெப்போதுமெங்களுக்கே யெந்தநாளும்
துணையாகுமெனவுரைத்தோர் மனதைநன்றாய்
சோதித்தேமனதிலுள்ள துயரமாறி
மணமருவுதுணைவியுடன் தம்பிமாரும்
வருந்தாமல்வனந்தனிலே யிருந்தகாலை
அணிமதியோய்மறைந்தவுடன் ரதத்திலேறி
ஆதித்தன்உதயகிரி யதில்வந்தானே.

தருவு-வராளி-இ-ம்-அ-ம்

பல்லவி

சூரியனைப்பணிந்தார் பஞ்சவர்கள்
சூரியனைப்பணிந்தார்

அநுபல்லவி

சூரியன் சதாசிவ சூரியன் - அரகர
சூரியனிருள்வெல்லும் சூரியனெனுஞ்சிவ-சூரிய

சரணங்கள்

நாதவன் சாம்ப சதாசிவனீங்சரன்
மாதவன்பயிர்க்கொரு ஆதவனுஞ்சிவ-சூரிய
செய்யவன் ரதந்தட்டுக் கையவன் புவிக்கொரு
மெய்யவன்பகலுக்கு வெய்யவனுஞ்சிவ-சூரிய
திரவியபுவியெங்கும் பரவியேசெல்லும்பச்சை
புரவியனொளிபெற்ற இரவியனுஞ்சிவ-சூரிய

விருத்தம்

சூரியன்றன்னிருகமலத் தாளைப்போற்றி
தொழுதுபஞ்சபாண்டவர்கள் துயர்விட்டோடி
ஆறியைவர்ஒருமுகமாய் மகிழ்ந்துகூடி
அவ்வனத்தைநீக்கித்தேத் தரசனென்றும்
தேருயர்ந்துவரக்கதிரை மறைத்தமூர்த்தி
செங்கண்மால்படர்ந்துமின்னித் திரண்டமேகம்
கரியவன்றன்னிருகமலத் தாளைத்தேடி
கடந்துபின்னுமறுவனத்தில் நடந்திட்டாரே.

தரு-நொண்டிச்சிந்து

நடந்தாரேபஞ்சவர்கள் தர்ம
நாட்டத்தினுல்அறிதேட்டத்தினுல்
கடந்தாரேஅவ்வனத்தை பூதங்
காளிகளும்பெருங்கூளிகளும்
புலிமான்கரடிவனம் சிரிப்
பிள்ளைவனஞ்சவதுள்ளவனம்

பலிமாவனத்திலே அந்த
பார்முனிவன் ஒருமாமுனிவன்
இருந்தாரவர்பதத்தே பணிந்
தேத்தியவர்பதம்போற்றியங்கே
பறிந்தேதவிப்பாறி இரு
பாதங்கள்நொந்திடக்காதங்களாய்
பதினேழுயோசனை தான் தூரம்
பாரவனந்தனிற்போறபோது
மிதிபாரையென்றுமங்கே அதின்
மேலேநடந்திடுங்காலையிலே
தபியாறுகங்கையொன்று முன்னே
தாண்டினதைவர்கள்கண்டுபின்னே
புவியாசைநீங்கவென்று அதில்
பூந்துநீராடியேசாந்தகமாய்
அகன்றேநடக்கலுற்றார் அங்கே
அக்கினியாறென்றுமுக்கியமாய்
அகன்றேமரித்ததினல் கண்டு
அய்யன் அரிதிருமெய்யன் துணை
கனலாறுநீங்கியபின் புவி
கன்மத்தைநீக்கியேதர்மனவன்
மனதாரிஅவ்வனத்தே பின்னே
வந்தவர்கள் துணைவந்தவர்கள்
தம்பிமார் துணைநோக்கி இனிச்
சல்லியமேனிந்தவில்லுகளும்
அம்பும்நெடுவேலும் நமக்
காவதென்னபொல்லாப்பாவமிது
ஆகாதெரியுமென்று சொன்ன
அண்ணல்மொழிப்படிதண்ணியிலே
போகஎறிந்துவிட்டு சென்று
போகும்வழிதனில்நேரும்தடம்

வழியேதமொழிப் போக
வக்கணையில்லாமல்கிற்கையிலே
வெளியானஅண்டபரன் நிதம்
வெற்றிவிநாயகர்தோன்றிடவே
தோன்றும்விநாயகரை கண்டு
சொல்லுகிறேன்வைகுண்டத்தெல்லைவழி
வேண்டியவர்கடந்தார் அங்கே
வீரமுள்ளதாயொருபாரமில்லை
காட்டில்நடக்கையிலே அங்கோர்
கந்தருவன்வந்துநேர்ந்துகொண்டு
விரட்டிவழிமறித்தே வெகு
வீறுடனீங்களும்யாரெனவே
அதட்டிக்கேட்கலுற்றான் கண்டு
அப்போதுதருமரும்செப்பிடுவார்
பதட்டம்எனக்கென்னடா அரிதிரு
பாகந்துணைபெறுகாதலினல்
துதிதேசம்அத்திபுறம் நாங்கள்
தொட்டரசாள்கிறபட்டணந்தான்
மதிதேசன்சந்தனுவின் கிளையெனும்
வங்கிசம்தானடாஎங்கள்குலம்
என்பேர்தருமனடா இவர்கள்
என்னுடன்வருவநாலுதம்பியடா
வம்பேர்கேழ்ப்பதென்ன எனவே
வண்மையுடன்சொன்னதர்மரைத்தான்
மிகப்பார்த்துகந்தருவன் புயங்கள்
வேர்த்திடப்போரினில்நூற்றுவரை
தகப்பார்த்துக்கொண்டவர்கள் பழுதனைத்
தாங்குங்கள்தப்பினற்போங்களுங்கள்
சீர்மைக்கென்றுரைத்தான் கண்டு

நேமத்தால்வுகந்து சொல்லும்
நேராகவைகுண்டம்போரவர்கள்

பழியேற்கமாட்டோமடா விடுவிடு
பாதகனேயென்றபோதினிலே

தெளிவேலூறுகுழலாள் ஐவர்
தேவியாந்துரோபதைகோவெனவே

தூக்கியகந்திருவன் செழுங்
தோகைதனைக்கண்டுபோகையிலே

தாக்கியேவீமனவன் கொல்லுதற்கு
தானேதுணிந்தங்கேபோனவகை

அறிந்தேதுரைதருமன் தம்பி
ஆகாதுகொல்லவும்போகாதென்ருர்

அறிந்தான்போர்வீமன் விழுந்தே
அலறிஞன்கந்தருவனிலைகுலைந்தே

யிந்தமாதுதுரோபதையாள் சிறையை
மீட்டுநடக்கின்றகாட்டினிலே

முக்கியமானபொய்கை ஒன்றுகள்
மோகமில்லாததோர்ராஜரிஷி

அவரைமிகப்பணிந்தார் பணிந்த
அரசன்தனைக்கண்டுராஜரிஷி

இவரைமிகப்பார்த்து பயமெண்ண
வேண்டாமையாயிங்குமன்னவரே

நாடகமடந்தையர்கள் மனம்
நாடியேதீர்த்தங்களாடிக்கொண்டு

போகுந்தடமிதுவே இதில்
புகுந்துநீராடுங்கள்சாந்தமுடன்

என்றேரிஷியுரைக்க மகிழ்வா
யிவ்வகைகேட்டபின்னேவர்களும்

கொண்டாடியேசிறந்த வனங்
காடுயர்தீர்த்தத்திலாடினரே

தந்தனம்தனதனஹ.

## விருத்தம்

மனந்தளர்ந்துராஜரிஷி மொழிதப்பாமல்
மங்கையர்களணிதீர்த்த மாடுங்கங்கை
புனல்தனிலேயைவர்களுந்தீர்த்தமாடி
போகவொருமித்துநிற்கும் போதிலங்கே
நினதுசிறைவிரித்தாடு மயிலைப்போலே
நெற்றிதனிற்றிலதமின்னக்குழல்களாட
கனதனமின்னன்மடந்தை நாகலோகக்
கன்னியர்களைவர்முகங் களைக்கண்டாரே.

## வசனம்

இந்தப்பிரகாரமாக முனிவர் கூறியபடி பாண்டவர்கள் நாகத் தீர்த்தத்திலே முழுகியபோதில் நாககன்னியர்கள் அவர்களுக்குத் தரிசனமானார்கள் அந்தக் கன்னியர்கள் சொல்லுகின்றவிதம் எப்படி யென்றால்.

## தருவு-நாட்டை-இ-ம்-ஆதிதாளம்

மைவிழிமாதர்கள் ஐவரடிதனைப்பணிந்தே வாரும்
வாகுதரும்நாகலோகத்துச்சென்றனர்தணிந்தே

இவ்வழிகானகத்தவ்வழிபோவதேனீங்கள் இனி
யுங்களுக்கேற்றதோர்பெண்டாகுவோம்பாருங்கள்

கன்னல்கமுகுபிலாமுதலாயுள்ளநாடே. இரு
கண்கள்மதிக்குமோதங்கத்தகடெங்கள்வீடே

அன்னமும்பேடுகள்பின்னிவருமெங்கள்வீதி நாங்கள்
யார்க்குச்சரியென்றுபார்க்கப்படாதெங்கள்வீதி

முண்டகக்காவினில்வண்டுறையும்எங்கள்வாவி ஆசை
மோகமிகுந்திடக்கூவுங்குயிலெங்கள்காவில்

கண்டதர்க்கேகதியுண்டுசிலத்தலம்பார்க்க சொல்லு
காவனந்தம்பெற்றபூவனந்தம்வகைசேர்க்க

கன்னிகளுக்கங்கேமன்னர்கிடையாதகொடுமை பட்ட
கட்டித்துரைத்தனமொட்டிவைத்தாவதுவிடுமே

பின்னையும்பாரெங்கள்கன்னியறியாதகோலம் மோகம்
பெருகிவளருதுஉங்கள்முகங்கண்டமூலம்
சிம்மாசனத்திலும்மைப்பணிந்திடவருவோம் நீங்கள்
சித்தம்விரும்பியதெத்தனை கேட்கினுந்தருவோம்
அம்மானைபந்துகளும்மலருஞ்சொரிவாசல் நிதம்
அந்திபகல்நாங்கள்கந்தழுஞ்சவ்வாதுபூசல்
வாங்கள்வெகுசுகந்தாங்களினிவிடமாட்டோம் இனி
வல்லையென்றால்நீங்கள்செல்லும்வழிதனைக்காட்டோம்
தாங்கள்தனைபோலேநாங்களறிந்திலமேதும் கட்டி
சற்றுமுகத்தினில்முத்தமிட்டாலதுபோதும்
பெண்டுகள்தானெங்கள்மண்டலந்தன்னிலேபெருக்கம் வனம்
பேதலிப்பார்தமையாதரிக்காமலும்இருக்கோம்
செஞ்சுகமாகியதென்றலெவர்க்குமேகரணம் தங்கள்
தெள்ளிமையால்நாங்கள்பிள்ளைகளைப்பெறவேணும்
வஞ்சவகைதனைநெஞ்சில்வைத்திடவேண்டாம் வாரீர்
லாகுசருநாகலோகத்துக்கென்றுரைபூண்டாள்
பஞ்சவர்மேலவன்மிஞ்சிதுரைதருமன்தானே செல்லும்
பங்கயப்பூமுகமங்கைகளுக்குரைப்பானே

வசனம்

இந்தப்பிரகாரம் நாககன்னிகள் பஞ்சபாண்டவரைத் தங்களுலகத்துக்கு வரும்படியாய் கூப்பிடும்போது தருமராசன் அவர்களை நோக்கிச் சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.

விருத்தம்

இருபதத்தைப்பாக்கியத்தைத்தமரைத்தாயை
இனியதுரைமகள்பெறுஞ்சேனையின்னம்
உருபதித்தமகுடமணிமேற்செங்கோலும்
உற்றபறிதனில்நிறுத்திஉடையதாகக்
குருபதத்தைவானவர்கள்தானும்போற்றிக்
கொளும்பதத்தையிலகியவைகுண்டவாசல்
தருபதத்தைக்காண்பதற்குத்துணிந்தேவந்த
தர்மரந்தமடந்தையற்குத்தான்சொல்வாரே

உடைத்தகுருசாபமிடகுறையைநன்ருய்
உறைத்திட்டமறையனுமுறைத்திட்டானே.

வசனம்

இந்தப்பிரகாரம் பாண்டவர்கள் நாக கன்னிகளிடத்திலும் இராஜரிஷியிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு போகும்போது மலைப்பாம்பு ஒன்று ஓடிவந்து வீமனைப்பிடித்து விழுங்கிப்போடவும் அதன் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வீமன் வெளியேவரவும் அந்தப் பாம்பு ஓர் பிராமணவடிவாக நின்று தன்னுடைய வரலாறுகளைத் தருமராசனிடம் சொல்லுகிறவிதம் எப்படியென்ருல்,

தருவு-இ-ம்-கமாஸ்-ஆ-ம்

வட்டமிடுசக்கரங்கள் இட்டமந்திரமுமந்த
வாசவன்குருவுக்கொரு சிஷனனே

பொட்டெனவிரைந்துமவர் கட்டளைதப்பாமல்-நானும்
பூவெடுக்கப்போனேனொரு காவதனில்

தேவதருவில்விரைந்து பூவெடுக்கையிலொரு
சேயிழையைக்கண்டுமைய லாகிடவே

மேவிடாவென்குருவும் ஆவலாய்பூசைசெய்யும்
வேளைதப்பிபோச்சுது அந்தநாளையிலே

ஆசான்முன்னாகவந்து வாசமலரைக்கொடுத்தேன்
அப்பியருக்குஅடங்காத தீயைநேறவே

கூசாமலேமுடிக்கும் பூசைதப்பிபோச்சுதென்று
கோபமுடனேகொடுத்தார் சாபமிதுவே

வீம்பானஇவ்வனத்தில் பாம்பானசாபமிது
மீள்கவென்றேபணிந்து கேட்கையிலே

தேம்பானபஞ்சவர்கள் பூம்பாதம்பட்டபோது
தீருமென்றெனக்கவருங் கூறினரே

அப்பொழுதுதந்தசாபம் இப்பொழுதுதீர்ந்ததென்று
ஆயுமறைவேதியனும் போயினனே

கற்புடையபஞ்சவர்கள் அப்பொழுதுஅவ்வனத்தை
கடந்துமறுவனத்தில் நடந்திடவே

பின்பாகதுரோபதையுந்தென்பாய்நடக்கஅஞ்சு
பேரும்அத்திகிரிமலையேறினரே
தெம்பானபஞ்சவர்கள் கும்பாய்நடக்கமனத்
தேபணிந்துமலையரயன்கோபத்தாலே
துடித்தானேவீமன்சினந்தானேயிந்தமலை
தூயமறைஅய்யர்வடிவாகிடவே
பொடித்தாங்குமாமருடதிடத்தான்தருமதுரை
போர்செய்துமறையோனைப்பார்த்திடவே
தாரேபுனையெரியசூரனுடனேதீர்ந்து
சண்டைசெய்துநானவனைவென்றபோதிலே
வீராய்வைகுண்டபதிதாரேனென்றவருக்கு
விட்டவுரைநாரதன்வரக்கண்டுதானே
அடமாகவரச்சொல்லத்திடமாயெனைச்சினந்து
அத்திகிரியாய்ச்சபிக்கலுற்றனனே
தொடமானசாபமிதுவிடுபாணமெப்பவென்று
தோற்றமுடனேபணிந்து சாற்றினேனே
அஞ்சாதேயிவ்வனத்தில் பஞ்சவர்களேவருவார்
அன்றுனக்குத்தீருமென்றுசொன்னதாலே
உன்சாபமுங்கொடுத்தால் தன்சாபந்தீர்ந்ததென்று
ஏகமறைவேதியனும் போயினனே

விருத்தம்

பைந்தமிழ்சேர்பஞ்சவர்கள்வனத்தைநீங்கி
பருவழிமுள்ளிருவியிருபதமேநோக
தந்திரமாய்கடலடைக்கமலையைவாரி
தானிடவேதாங்குகின்றதானைத்தேடி
அந்தவனந்தனைக்கடந்துமிருகங்கூளி
அடர்ந்தவனையோசனையாயதுக்கப்பாலே
விந்தைபெறுவசுவமுகமடைந்தமாது
விசயனைவந்தழைக்கமுகம்வேருக்கண்டார்.

வசனம்

இந்தப்பிரகாரம் பஞ்சவர்கள்வனத்திலே அத்திகிரியாய்க்கிட ந்த பிராமணனை சாபம்நீக்கிவிட்டுப் போகிறபோது ஒருவனத்திலே

குதிரை முகமுடைய ஒருபெண்ணனவள் ஓடிவந்து அருச்சுனனைக் கூப்பிட அவன் திரும்பிப்பார்த்தபோது குதிரைமுகமாறி நல்லமுக மாய் நிற்கிற பெண்ணைக்கண்டு தருமராசன் சொல்லுகிற விதங் காண்க.

தரு-இ-ம்-அடாணா-தி-ம்

திசைபுகழுந்தர்மதுரை நல்ல தர்மதுரை அந்த
சேயிழையைப்பார்த்துரைப்பார் முகம் பார்த்துரைப்பார்

அசுவமுகம்நீங்கியடி பெண்ணே நீங்கியடி-மெத்த
அழகுமுகம்வந்ததென்ன பெண்ணே வந்ததென்ன

பெண்சொல்-தரு

தேனின்மொழிமன்னவனே துரை மன்னவனே-இனி
செப்புகிறேன்மன்னவனே துரை மன்னவனே

கானில்முநியென்கணவன் முன்னே யென்கணவன்-நல்ல
காலியெந்தன்பேருமுன்னே எந்தன் பேருமுன்னே

வாழ்ந்திருக்குநாளையிலே அந்த நாளையிலே-நான்
மறுமுனிமேலாசைகொண்டேன் மனதாசைகொண்டேன்

அந்தரங்கண்டதினல் வர கண்டதினல்-எனக்
கசுவமுகஞ்சாபமிட்டார் அவர் சாபமிட்டார்

மெய்யுதறிநான்பதறி கண்டு நான்பதறி-முனி
வன்பதத்தைபோற்றிசெய்து நான் போற்றிசெய்து

வெய்யவேகொடுஞ்சாபமிது பொல்லா சாபமிது-என்னை
விட்டிடுநாளெப்பவென்றேன் நான் போற்றிசெய்து

அசையாதபஞ்சவர்கள் பெண்ணே பஞ்சவர்கள்-மகிழ்
தவவனத்தில்வாரபோது பெண்ணே வாரபோது

விசயனைத்தான்நீயழைத்தால் பெண்ணே நீயழைத்தால்-இது
விட்டுவிடுமென்றுரைத்தார் விடு மென்றுரைத்தார்

அன்றுரைத்தசொற்படியே மன்னா சொற்படியே-என்
னருஞ்சாபநீங்கியதே மன்னா நீங்கியதே

என்றுரைத்தேபெண்ணடந்தாள் அந்த பெண்ணடந்தாள்-வன
மேகினரேபஞ்சவர்கள் திருப் பஞ்சவர்கள்

மிக்கபெருங்கானகந்தான் பெருங் கானகந்தாண்டி
வீமமலைதான்கடந்தார் அவர் தான்கடந்தார்

மைக்கண்மடமாதுடனே திரு மாதுடனே-கங்கை
பாலாறுவந்துகண்டார் அவர் வந்துகண்டார்

தாக்குகங்கையாடுதற்கு அவர் ஆடுதற்குசொல்லும்
தருமனையும்பேடியையும் தமர் பேடியையும்

தூக்கியிருதோளில்வைத்து பதைத் தோளில்வைத்து-அந்த
துரோபதையையிடுப்பினில்வைத்து நல்லிடுப்பினில்வைத்து

மற்றுமிகதம்பியரை இரு தம்பியரை-இரு
வன்கரத்திலேந்தியவன் கை யேந்தியவன்

மெத்தநெடுஆறுதனை கங்கை ஆறுதனைத்தாண்டி
வீமனவன்தானடந்தான் வீமன் தானடந்தான்

கருணைநதிபெண்ணுருவாய் ஒரு பெண்ணுருவாய்-வரக்
கண்டுதருமர்கேட்டளவில் கண்டு கேட்டளவில்

அருணமுனிபெண்சாதி நானே பெண்சாதி-மெத்த
ஆசைமயல்கொண்டதினால் மயல் கொண்டதினால்

பத்தாவைக்காணமல் நான் காணமல்-ஒரு
பரபுருடன்சேர்க்கைகொண்டேன் நான் சேர்க்கைகொண்டேன்

அத்தோஷமென்கணவன் கண்டு யென்கணவன்கண்டு
அரிதானசாபமிட்டார் அவர் சாபமிட்டார்

வெய்யகொடுஞ்சாபமிது பொல்லா சாபமிது-தீரும்
வேளையெப்போவென்றுரைத்தேன் நான் என்றுரைத்தேன்

தையலரேயுன்சாபம் பெண்ணே யுன்சாபம்-வழி
தருமர்வரதீருமென்றார் வரத் தீருமென்றார்

சென்மமுங்கள்பாக்கியத்தால் உங்கள் பாக்கியத்தால்-சாபந்
தீர்ந்துதென்றுமங்கைசொன்னாள் அந்த மங்கைசொன்னாள்

அண்டர்பணிபாதமதை திரு பாதமதை-தேடி
அப்புரத்தேபோகலுற்றார் அவர் போகலுற்றார்

கட்டழகன்முன்னடக்க அவன் முன்னடக்க-மற்ற
காவலர்கள்பின்புவர ஐவர் பின்புவர

தொட்டுவனம்போகையிலே அவர் போகையிலே-உள்ள
சூதுகளுஞ்சொல்லுவமே பின்னும் சொல்லுவமே

தரு-இ-ம்-நீலாம்புரி-அ-ம்

எங்களையினிப் பெண்களே வாங்கள்
என்பதேமனம் வெம்புதே
உங்கள்போல்வெகு பெண்களில்லையோ
ஊரிலேபெற்ற பேரிலே
தேரும்பூமியிலே தூறுமாகவே
திட்டமாயிருந் திட்டவன்
ஆருதானென்ன வாரிஞன் புவி
ஆசையையினிப் பேசவே
புத்திதான்இது மற்றுமோ சொல்லும்
பெண்களேபுவி எங்கிலும்
மெத்தவேசெம்பொன் தேட்டமே
சாரந்தான்சமு சாரந்தான்
சுகத்தாசையைத்தொகுத் தாலுண்டோகதி
சோறுதான்மிச்சம் வேறில்லை
செகத்தாசையை அகற்றிக்கதிதேடியே
ஐவர் கூடியே
அருமைபெருமைதிரு மால்பதத்
தடியேயெங்கள் முடியே
கருமேகமாமுருவைத் தேடிக்
காணகவேபோறோம் நாங்களே
செடியைப்பற்றித் தடையேயென்ன
திட்டமோவழி கிட்டுமோ
தடைநீக்கியிங்குடனே விடை
தானேகொடும் மானே

விருத்தம்

மடந்தைவிடைராஜரிஷிவிடையுங்கையில்
வாங்கியேபஞ்சவர்போம்வழியிலங்கே
கிடந்ததொருபாம்பதுவிழுங்கவீமனத்தைக்
கிழித்திடச்சாபமுநீங்கிப்பார்ப்பானாகி
அடைந்தமறைவேதியனைத்தருமர்பார்த்து
அருஞ்சாபம்வந்தவிதமவனைக்கேட்க
இடைந்தபெரு துன்புடனே சாபநேர்ந்த
எல்லாமும் முறைமுறையே சொல்ல லுற்றான்.

## விருத்தம்

தொல்லைபெற்றபஞ்சவர்கள் துயரத்தாலே
துன்னிமித்தமூற்றதினல் அரியுஞ்சொன்ன
சொல்லுரதையுருதியென்று மனதிலெண்ணி
துடர்ந்துபஞ்சபாண்டவர்கள் நடந்தகாலை
கல்லுருத்தச்செடியிடையிற் றுயிலையீர்க்க
களபமணிபுயங்களெல்லாமுதிரமோட
வல்லியொத்தமடந்தை துரோபதையாள்மேனி
வருத்தமுறமனதினிலே வருந்துவாளே.

## வசனம்

இந்தப்பிரகாரம் பெண்ணினுடைய சாபத்தை நீக்கிவிட்டு பஞ்சவர்கள் நடக்கும்போது கல்லுமுள்ளுருத்த துரோபதை சொல்லுகிறதென்னவென்றல்

## தரு-எதுகுலகாம்போதி-அ-ம்

இந்தவனந்தனில்வந்திடும்வேளையில்ஐவர்கோவே ஏதோ
என்தலைநோகுதுசந்துவலிக்குதுஐவர்கோவே

முந்தவழிகண்டுசெந்தழலாகுதுஐவர்கோவே எந்தன்
மூக்குங்கிழியுதுநாக்கும்வரளுதேஐவர்கோவே

கையுங்கடுக்குதுமெய்யுந்துடிக்குதுஐவர்கோவே மேனி
காந்தியேமெத்தவும்சோர்ந்துவலிக்குதுஐவர்கோவே

சாயுங்கொடியிடைசாய்ந்துவலிக்குதுஐவர்கோவே இரு
காலும்பெருந்துடைகட்டுவிட்டாட்டுதேஐவர்கோவே

மண்ணுங்கொதிக்குதுதண்ணீர்தவிக்குதுஐவர்கோவே நான்
பண்ணுந்தவஞ்செய்தபுண்ணியங்கார்க்குதேஐவர்கோவே

சிந்துதுவேர்வையும்வெந்துயராகுதுஐவர்கோவே மண்ணில்
திகிரியாய்நாதமும்கீதமும்பாடுதேஐவர்கோவே

கன்றுவதால்மனஞ்சந்துவலிக்குதுஐவர்கோவே இந்த
காட்டினிலேமெள்ளநின்றுநடவுங்கள்ஐவர்கோவே

வாடிமனதுதள்ளாடிவருகுதேஐவர்கோவே அரி
வஞ்சகமோஎந்தன்நெஞ்சுதுடிக்குதுஐவர்கோவே

தேடியரியதங்கூடியிருக்கவேஐவர்கோவே எந்தன்
சிந்தைமலையாமற்றந்தொன்றுசொல்லுவீர்ஐவர்கோவே

## விருத்தம்

பூம்பொழில்சூழ்பட்டணமாநகரைநீங்கி
பொய்யாசைதனைவெறுத்துப்புகழைத்தேடி
தேம்பியந்தவனந்தனிலேஐவர்கூடி
திரும்பியொருவனத்தினில்செல்லுங்காலை
தேம்பியேசெங்கமலமுகமும்வாடி
துரோபதைகண்கலங்கிவருந்துயரம்பார்த்து
சாம்பசிவனடிமலரைநினைத்துவாழ்த்தி
தையல்கேளென்றுதர்மர்சாற்றுவாரே.

## வசனம்

இந்தப்பிரகாரமாக நடக்கும்போது துரோபதையானவள் மிகவும் மயக்கங்கண்டு தருமராசன் சொல்லியவிவரம் என்னவென்றால்.

## தரு-நீலாம்புரி-இ-ம்-ஆ-ம்

பிடிக்குமழுக்கரமே கொண்ட பித்தனேபிஞ்ஞகனே
சடைக்குள்புனல்தரித்த சிவ சம்புசதாசிவனே
பொன்னணிமார்சண் டனையும் பூட்டிப்பிடித்தவேமன்
தன்னைவிழவுதைத்த சிவ சாம்பசதாசிவமுதலே
பாங்குசராசரத்தில் வரும் பலமணுகாமல்காணும்
தாங்கியணுவுக்கணுவாய் நின்ற சாம்பசதாசிவனே
ஆண்டிச்சிதன்னுடனே எதி ராகத்திருச்சபையில்
பொங்குமரிதிருமால் இந்த பூமியைமுன்துலைத்து
தங்கரிதாய்நின்றிருந்த சிவ சாம்பசதாசிவனே
நானுமினிக்காண்பனென்று அந்த நான்முகனுங்காணுதே
தானகந்தைவிடநின்ற சிவ சாம்பசதாசிவனே
சுத்தக்கொடும்பகையாய் வந்து தோன்றிய தோர்முப்புரத்தை
தத்தளிக்கச்சுட்டெரித்த சிவ சாம்பசதாசிவனே
தாய்தகப்பனையும் சூழ்ச்சி யுடன்பெற்றெடுத்த
தாயையுங்கண்டறியா சிவ சாம்பசதாசிவனே
வஞ்சகப்பெரும்புவிக்கு கெதி வாழ்வைமிகக்கொடுத்து
தஞ்சமென்றோர்கட்குதவி செயும் சாம்பசதாசிவனே
போதகப்புவிதனக்கு கதி பூண்டதொருபஞ்சவர்க்கும்
சாதகமாய்த்துணையிருப்பாய்நீ சாம்பசதாசிவனே

### விருத்தம்

தூயதவந்துலங்குகுரைதருமராசன்
சொற்படியேசிவபதத்தைத்தொழுதுபோற்றி
காயமுமேபதைபதைக்கஇடைதள்ளாட
கரமிரண்டுந்தலேச்சுமையாய்க்கலங்கிவிம்மி
ஆயனேயச்சுதனேயமரர்கோவே
அண்ணலேயுமதுதுணேயண்ணவென்றே
மாயவன்றன்னிருகமலத்தாளேத்தேடி
வணங்குவாள்துரோபதையாளிணங்குவாளே.

### தரு-இராகம்-காப்பி-ஆ-ம்

| | |
|---|---|
| அய்யனேபுவிமெய்யனே | எந்தன் |
| அங்கண்ணமலர்ச் | செங்கண்ண |
| தீயல்லோஎந்தன் மெய்யெல்லாம் | விணே |
| தீரண்ணமுகம் | பாரண்ண |
| கோபத்தைக்கொண்டபாவத்தை | வெல்லும் |
| கோலமேஆதி | மூலமே |
| பூவையேதாவிச்சேவித்தேன் | பரி |
| பூரணபுண்ய | காரண |
| படித்தேகனிதொடுத்தே | சொன்ன |
| பயன்ருனிரணியக் | தான் |
| அடித்தூணதுவெடித்தே | யவன் |
| அங்கத்தைக்கொய்த | சிங்கமே |
| சிந்தைநான்மெத்தநொந்துதான் | எந்தன் |
| தேகமேபுண் | ணகுதே |
| எந்தன்மேற்றயவில்லேயோ | வந்து |
| யேந்தியேகதி | தாந்தரும் |
| நம்பினேனுனேநம்பினேன் | உனே |
| நம்பினேன் | உனேநம்பினேன் |

### விருத்தம்

ஏமாரியரிதிருமால்பதத்தைக்காண்ப
தெப்பவென்றுமதிமயங்கிஅலரிவந்த
வாய்மாறியிரண்டுவிழிசொருகிச்சோப
மாகிமணிவைகுண்டவாசல்நோக்கி

தேன்மாரிபொழிமொழியாள்தனையேசூழ்ந்து
 தெய்வகன்னிமாதர்களும்ஜேஜேவென்ன
பூமாரிபொழிந்துபணிதேரின்மீது
 பூங்குழலாள்துரோபதையும்போயினளே.

வசனம்

இந்தப்பிரகாரம் துரோபதையானவள் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைத் தியானஞ்செய்துக்கொண்டு வைகுண்டத்திற்குப் போகிறவைபவம் எப்படியென்றால்.

தரு-புன்னாகவராளி-அடதாளம்

பல்லவி

அடக்கஞ்செய்தாரே ஐங்கணைதனை
அடக்கஞ்செய்தாரே

அநுபல்லவி

அடக்கஞ்செய்தாரந்த மடக்கொடிபாவையின்
கடைக்கணினுள்வெள்ளை யனநடையாள்தன்னை அட

சரணம்

தருமருந்தியங்க மருங்கில்நாலு
தம்பிமார்மயங்க
மருமலர்க்குழலிதனை சந்தனமர
மமர்ந்த நிழலில்-அட

வறுமைக்கலிவந்த பிரமையகற்றியே
மனதைரியபக்கம் வளமுடனிருத்தியே
திறமைமனதிற் பொறுமைப்பாண்டவர்
தேவிதுரோபதை யாவியகன்றபின்-அட

மாயனைத்தொழுவார் உயிர்போம்
வகையைப்பார்த்தழுவார்
காயமேதுடிக்க ஐவர்நின்று
கண்புனல் லடிக்க-அட

நாயும்புலிபன்றி மேயும்வனத்திற்பின்
ஞாலெதெரிந்திடும் கோலமயிலவள்
தூயதிருமகள் மாயன்துணைவியைக்
கொடுத்துவனத்தினிலெடுத்துச் சுருக்கென-அட

சீர்மொழிப்பணியாள் பாஞ்சாலராஜன்
செல்வத்தவத்தினியாள்
வார்கொளுமுலையாள் பஞ்சவர்க்குள்ளே
வருஞ்சித்ரச்சிலையாள் தனை-அட

தாரணியின்பரி பூரணியுமவள்
தருவைப்பழித்தசெங் கரமுடையவளரி
நாரணனின்ஒருரு வாரணவன்துணை
நாட்டுந்துரோபதை கூட்டையெடுத்தங்கே-அட

### விருத்தம்

பூவையவள்வைகுண்டபதியைநோக்கிப்
போயினளெடுத்தடக்கிப்புனலும்வார்த்தோம்
ஆவதெனச்சடங்கினுடபலன்கொண்டாடி
அந்தவனங்கடந்துமறுவனத்திற்சென்று
போவதுவேவெகுதூரம்மடந்தக்காலே
பூங்குயிலாள்கூடுவிட்டுவனத்திலங்கே
சாவதென்னவென்றுவலுவீமன்கேட்கத்
தருமரந்தவகைவிபரஞ்சாற்றுவாரே.

### வசனம்

இந்தப்பிரகாரம் பாண்டவர்கள் நடந்து செல்லும்போது துரோபதையானவள்கீழேவிழுந்து உடலைவிட்டு வைகுண்டம்போய் விட்டபிறகு இதென்ன காரணமென்று வீமன்கேட்கத் தருமராஜன் சொல்லுகிறதெப்படியென்றால்.

### தரு-இ-ம்-சங்கராபரணம்-அ-ம்

வல்லவனேயினிச்சொல்லுறேன்கேள்தம்பிவீமா மிக
வஞ்சகர்தானவன்கெஞ்சிற்பதித்ததுவீமா

தொல்லுலகந்தன்னில்நல்லகெதிதம்பிவீமா இங்கே
மாதுதுரோபதைபத்தினிக்கேதம்பிவீமா

கட்டியினுள்கச்சுட்டியினுள்தம்பிவீமா வல்லி
கண்டொருபூவென்றுகொண்டுவந்தான்தம்பிவீமா

கெட்டியினுள்பசும்பொட்டணிவாள்தம்பிவீமா வீசும்
சுெந்தத்தினுளரிசொர்ந்தச்சகோதரிவீமா

பைந்தொடியாளுடன்முந்தியகாலத்தில்வீமா நாமும
பாரவனத்தில்ஆறுபேருய்நாமேவீமா

பின்துடர்ந்தாள்வேரேபின்துடர்ந்தாளில்லைவீமா ராசப்
பெண்சுகத்தாள்வேறேவஞ்சமறியாளேவீமா

பத்தியுளாளெந்தன்சித்தமறியுமேவீமா புலி
பாயும்வனத்தினிற்றுயவள்போலுண்டோவீமா

எத்தனைமாதரிருந்தென்னபோயென்னவீமா இந்த
ஏந்திழையாள்நமைச்சார்ந்தவரைக்குளேவீமா

கருத்தினில்வேறுபொறுத்திருக்காதடாவீமா கலி
காலம்வருதென்றகோலமிதோதம்பிவீமா

அருள்கன்னன்மீதிலேதுரைதிருமாலவன்வீமா கொஞ்சம்
ஆசைவைத்தாளந்தந்தோஷம்பலித்ததுவீமா

பலித்தென்னபாவம்திறுத்திடுமோதம்பிவீமா முகம்
பங்கயத்தாள்நகர்தங்கியிருந்தங்கேவீமா

செலித்தநாராயணன்வலுத்தவைகுண்டமேவீமா மாது
கிட்டினதற்கொருஅட்டியுண்டோதம்பிவீமா

மாலைக்குழலிமெய்க்கோலத்துரோபதைவீமா திரு
வல்லியரிபதத்தெல்லைகண்டாள்தம்பிவீமா

சாலமுகில்தருநீலமுகந்தனைவீமா தேடி
கண்டுபிடித்திடச்சென்றுநடதம்பிவீமா

விருத்தம்

அனத்தொடுநடையாள்சென்றஅரிதிருப்பதத்தைநித்தம்
மனத்திடையிறுத்தியைவர்மட்டுமேநடந்துபோர
வனத்திடையதட்டிச்சீறிவாய்திறந்தலறிப்பொல்லா
சினத்தொடுபடபடத்துச்சிங்கமுந்தோன்றிற்றன்றே.

வசனம்

இந்தப்பிரகாரம் பாண்டவர்கள் நடக்கும்போது ஒருசிங்கம் வந்து விரட்டுகிறதெப்படியென்றால்.

தரு-காம்போதி-ஆதிதாளம்

சிந்தைகலங்கிட இந்தவனத்தினில் சிங்கமதட்டுதடா
நம்மை வந்துஇனிவேறே தந்துடனேகொல்ல
வாய்விட்டதட்டுதடா
சிக்கெனவே நம்பக்கந்தனில்வந்து சிங்கமடிக்குதடா
வெல்லக்கணை யில்லாமலே நிற்கிறதாலே
வளைத்துப்பிடிக்குமடா
புத்திகலங்குது இந்தவனுச்சிங்கம் பொல்லாதுகாணுமடா
வம்பன்துரியோ தனன்சண்டை வென்ற
வஞ்சிலேவேணுமடா

விருத்தம்

மதந்தருஞ்சிங்கமது பகட்டிவந்து
வளைத்துமூச்செரிந்து வாயும்பல்லும்
கதிர்ந்தகணைசிலையுடையானவர்தம்மை
கலங்காமலவ்வனத்திற் கலங்குங்காலே
விதந்தருதெண்டாயுதத்தை வீமசேனன்
விழுங்கிடுவாய்தனைக்கிழித்து விட்டபோது
அதிர்ந்துமனம்பதறியதி னுருவேமாறி
ஐயரெனும்வேதியனங் காகிறனே.

வசனம்

இந்தவிதமாகவந்த சிங்கத்தை வீமசேனன் பிளந்தெரிக்க அது ஓர் பிராமணரூபமாகிப் பாண்டவர்களெதிரே நிற்கிறவிதம் எப்படியென்றால்.

சம்வாதம்-தரு-தோடி-அ-ம்

ஐயனேநீசிங்கவடிவானதென்ன பின்னை
அந்தவடிவெமிப்போபோவதென்ன

போனவகையெனக்கொருகுருவிருந்தான் அவன்
பூசனைக்குப்பூவெடுக்குஞ்சீஷனென்றான்

சீஷனென்னவுனக்கொருபங்கமென்ன காட்டில்
செடிவனந்தன்னிலொருசிங்கமென்ன

சிங்கமுள்ளகாட்டிலொருபூவெடுத்தேன் ஒரு
சிங்காரம்வரக்கண்டுகொஞ்சந்தாமதித்தேன்

தாமதித்தால்வெகுபாவமுண்டோ காலம்
தப்பிவிடகுருவுக்குகோபமுண்டோ

சிங்கமென்றவுருவிங்கேவிட்டதென்ன இந்தச்
செய்யுமறையோனுருவந்தொட்டதென்ன

தொட்டுநீங்கள்வரச்சாபந்தீருமொழி அந்தச்
சொந்தகுருவெனக்கூறுமொழி

வசனம்

சேனுமையா தருமராசனே நான் ஒரு முனிவருடைய சீஷன் புட்பமெடுக்கபோய் சிங்கத்தின் வேடிக்கை பார்த்துக் காலந்தாழ்ந்துவந்தபடியால் எனது குரு கோபங்கொண்டு சிங்கமாகும்படி சாபங் கொடுத்து உங்களைக் காணும்போது தீருமென்று சொன்னார் அய்யா மகாராசர்களே.

விருத்தம்

வரஞ்செறியுமுனிசபித்தசாபநீங்கி
வகைபார்த்துவேதியன்சொல்வண்மைகேட்டு
திரஞ்செறியும்பஞ்சவர்கள்வனத்தில்வந்த
சிங்கமறைவேதியனையனுப்பிவைத்தே
அரன்செயலைமனதிலுன்னித்திருமால்பாதம்
அடியிணையேகெதியெனவின்றறிந்துசிந்தை
உரஞ்செறிந்தவ்வனங்கடந்துசென்றபோதில்
உயரேனமாமுனியைக்கண்ணுற்றாரே.

வசனம்

பாண்டவர்கள் வனத்திலே போகிறபோது ஏனமாமுனியைக் கண்டு பேசினுர்கள் சரணஞ்சரணம் ஐயா சுவாமி.

விருத்தம்

தாழ்வைமிகப்படைத்தமுனிதப்பேயற்ற
வாசமுனியாசைமனமகிழ்ந்துசொல்வார்
சாவைமிகமதியாமல்உயிர்பேணுமல்
தந்தையாய்பெண்டுபிள்ளைதமருஞ்சேர்ந்து
தாவமிகவடைந்திருக்குநகரைநீங்கி
தனித்திந்தவனத்திலேதவரித்தானே
சோகமிகவடைந்துமதிமுகமேவாடும்
துயரமதைநம்மிடத்திற்சொல்லுவீரே.

வசனம்

அகோவாருங்கள் பாண்டவர்களே நீங்கள் மகாவிசனத்தோடு உங்களிட பட்டணத்தைவிட்டு இகலோகவாழ்வை வெறுத்து இந்த வனத்திலே வந்த காரணத்தைச் சொல்லுங்கள் பாண்டவர்களே.

விருத்தம்

கைக்கொண்டகமண்டலனேதேவதேவா
கானவனேயேன முனிக்கடவுளானே
சேய்கொண்டநகர்நீங்கிப்பவமுந்தீர்த்து
செங்கோலுமணிமுடியும்போர்க்கீந்து
மெய்கொண்டஅரிதிருமால்ராமராமன்
விளங்குபச்சைமேனியனைவிரும்பித்தேடி
வைகுண்டம்விளங்குமணிவாசல்காண
வருந்தியிந்தவனந்தனிலேவருகின்ருேமே.

வசனம்

அகோவாரீர் ஏனமாமுனிவரே நாங்கள் கலியுகம் பிறந்தபிறகு இந்த வுலகத்திலே இருக்கக்கூடாதென்று எங்கள் பேரனுகிய பரிசித்தனுக்குப் பட்டங் கட்டிவைத்து நாங்கள் வைகுண்டம்போகவினைத்துவருகிருேம் சுவாமி முனிவரே.

முனிவர்சொல்-தரு-பந்துவராளி-ரூபகதாளம்

கனம்பிடித்தநகரைவிட்டுக்காசுபணத்தாசைநீக்கி
மனம்பிடித்தவோர் துணிவாய்வைகுண்டத்தேபோரபேரே
அக்கரையைநீங்களாண்ட அரசுசெங்கோல்வைத்து
தொக்குடனேபோரவரும்தூரமெத்தஇருக்குதடா
தூரமென்னகாதமென்ன துடர்ந்தபோதேநடந்துவிட்டால்
பாரமென்னகெதிகொடுக்கும்பயங்களெண்ணிதியங்கவேண்டாம்
தீர்க்கமுள்ளதலைவர்களேதிசைக்குமெந்தன்முகத்தைநன்றாய்
பார்க்குமுங்கள்வயற்றிலுள்ளபசியமர்ந்துநோகுமப்பா
திசைபுகழும்வைகுண்டத்தைத்தேடிவழியறியமாட்டீர்
பசியமர்ந்துபோகுமுங்கள்பட்டணத்தேபோங்களென்றார்
அரும்பொருளேசிவமுனியேஆசைகொண்டுதூரவந்து
திரும்பிநாங்கள்போவதுண்டோசிந்தைவேறுநினைப்பதுண்டோ
புந்தியிந்தமொழியுரைக்கப்போவதுண்டோசாமியென்று
முந்துபொற்றாளிணைபணிந்துமுனிமுகத்தைப்பார்க்கலுற்றார்
தாக்கல்தந்தமுனிமுகத்தைத்தவறிடாமலொருமனதாய்
பார்க்கவிந்தபாண்டவர்கள்பசியமர்ந்துபோனதுவே
செய்யபசிதீர்ந்திருக்கதிடமிகுத்தகுடதிசையில்
வெய்யவன்போயமர்ந்துவிட்டான்வெண்ணிலவுதோற்றியதே
வெண்ணிலாவும்வீசிவரவேந்தர்வந்து அருகிருக்க
அன்றிரவுமுனியவரையமர்த்தியொருகதைமுடித்தார்
விதமுடையபஞ்சவர்க்குவிரும்பியந்தமுதலுரைத்த
கதைமுடியவிடியக்கதிரவனுந்தோன்றிட்டானே.

விருத்தம்

விடியவுமுனியைப்பார்த்துவிடையொருவழியுங்கேட்ட
படிமொழிவழிகேதாரம்பாதையிற்போங்களென்றார்
வடிவுடநடந்துபோரவழியினிற்றடுத்துகாளி
அடிபெறுமலைபோலுற்றஅரக்கியைவந்துகண்டார்.

வசனம்

இந்தப்பிரகாரம் பாண்டவர்கள் ஏனமாமுனிவரிடம் விடைபெற்றுக்கொண்டு போகிறபோதுவழியிலே மலையைப்போல ஒருராக்ஷசியைக்கண்டு நின்றார்கள்.

தரு-நாதநாமக்கிரியை-திரிபுடை-தாளம்

பார்த்தார்முகம்வேர்த்தார்-பட
படத்தார்கிடுகிடுத்தார்.

தூத்தாவழிமாற்றுயெங்கேசொல்லடாயினியில்லடா
சேயடாவவள்வாயடாபோனல்திட்டமோவழிகிட்டுமோ
பாயடாயினிமேலடாவெளிப்படுகிருய்சிவன்பிடரியின்
தன்னிலேயொருமின்னலேவெளிதாண்டினர்கெதிவேண்டினர்
பின்னிலேயவர்முன்னிலேபூதப்பெருக்கிகொலையரக்கி
அக்ஷணம்ஒருலக்ஷுமிவடிவாகினள்கனிவாயினள்
பக்ஷமேவைத்துவந்தவள்துரோபதையோஎன்னகதையோ
திருமாதுநீவேடமாய்வந்ததுதானென்னவோதுநீ
என்றுதூண்டினர்பஞ்சபாண்டவர்வாகுசேர்தவயோகமா
நன்றுமாமுனிகள்யானொருமோகமேமிகவாகினேன்
வாழப்புகழ்சேர்ந்தநாளொருபக்கத்தேயெய்யும்பாகத்தே
சார்ந்தநாள்யாகஞ்சேர்ந்தநாள்கொஞ்சம்சாக்கியேயிதுசாக்கியே
வைத்தான்கோபஞ்செய்துதான்நெடுவாக்கிபெருவாக்கி
செய்தபாவமும்எய்தினேன்தங்கள்சித்தத்தால்வரம்பெத்தத்தால்

விருத்தம்

அரக்கிதனையனுப்பிவைத்துவிரைந்தேயின்னம்
ஆறுயோசனைதூரமதுக்கப்பாலே
நெருக்குமலைசெடிவனத்தில்வழிகாணமல்
நெஞ்சுருகிப்பஞ்சவர்கள்நிற்குங்காலை
பொரிக்கிசைந்தமனத்தவனுஞ்சரிந்ததொந்திப்
பிள்ளையார்தனதுபதம்போற்றிசெய்து
அரிக்கிசைந்ததருவாசமுனிவன்செய்த
அழகுபெறுநகர்மேற்குவழிகண்டாரே.

தரு-நீலாம்புரி-அ-ம்

காவும்வனங்களுமே யிரு கண்களுங்கண்டுகளித்திடவே
கோவிலுங்கோபுரமும் சுற்று கோட்டையைப்பாரும்தம்பி

| | | |
|---|---|---|
| மாதுவிதித்திடவே | தம்பி | வாழைப்பலாக்கனிகள் |
| வித்தைதரச்சிதறி | ரசம் | வெள்ளம்பெருகுதடா |
| தென்னைகள்மாவதனில் | மோதி | சேரவிழுந்தகனி |
| முன்னெதிரண்டரசம் | ஒடி | முத்தப்பெருகுதடா |
| அன்றும்புனைவேடம் | நம்மை | ஆண்டிகளென்றுவெண்ணி |
| பெண்ணென்றசித்திரங்கள் | பாரு | பேசாதிருக்குதடா |
| பாரும்நமக்குமுன்னே | தம்பி | பார்க்கபசியாகுதடா |
| யாருசமைத்ததுவோ | வெள்ளை | அன்னங்கள்நிற்குதடா |
| ஆடுமயில்களைப்போல | மல்லி | காரங்களைப்புனைந்து |
| பேடுதனைப்பழித்து | நடை | பெண்கள்நடப்பதுபார் |
| பார்த்தவிடங்களெல்லாம் | தம்பி | பள்ளியறைகளுடன் |
| சேர்த்தஅரண்மனைகள் | பாரு | செம்பொற்றகடுமடா |
| நேமநெறிமுறைமை | தம்பி | நிற்கின்றபட்டணத்தில் |
| ஆயுமறைகளெல்லாம் | சொல்லு | மந்தணர்வீதியடா |
| நட்டணைக்காவனந்தம் | பெற்ற | நாடுதுருவாசன் |
| பட்டணத்துக்கழகு | செய் | பலதெருவீதியடா |
| தோற்றியபட்டணத்திற் | மொழி | சொல்லியதம்பியற்கு |
| வாழ்கதியதர்மதுரை | துரு | வாசரைந்துகண்டார் |

வசனம்

இந்தவிதமாகப் பாண்டவர்கள் துர்வாசரிட பட்டணத்தைக் கண்டு அந்தமுனிவனைத் தரிசித்தார்கள்.

விருத்தம்

செழுமைதரும்பஞ்சவர்கள் அஞ்சுபேரும்
　செங்கண்மால்பதந்தனையே தேடிச்சிந்தை
தளரமதிமுகம்வாடி மனமேநொந்து
　சாடைதனைவினவிடையாய்த் தான்பார்த்தங்கே
எழுதரியஅத்திபுர நகரைநீங்கி
　இத்தூரம்வந்ததுதா னேதோவென்று
தொழுதெழுந்தருமரிட முகத்தைநோக்கி
　துர்வாசமாமுனிவர் சொல்லுவாரே.

## தரு-நொண்டித்தரு

தருவீசுமாநகரில்-கெதி
  தஞ்சமெனவந்திருந்த பஞ்சவர்க்கு

துருவாசமாமுனிவன்-மொழி
  சொல்லித்தெரிந்த வல்லமைதான்

தம்பிமாரேயுங்கள் தனைப்-பெற்றதொரு
  தாயுஞ்சிறுவய தேயொருநாள்

அன்புபூண்டமாமுனிக்கு-விருந்
  தாக்கியளித்திட்டதொரு யோக்கியத்தை

கண்டஞ்சுசோற்றுண்டை-அவளிட
  கையினிற்கொடுத்திடச் செய்யவவள்தான்

தண்டாமறைமுகத்தாள்-நாலுருண்டை
  தன்னையேவைத்துவிட்டுப் பின்னையொன்றை

விழுங்கினகதையறிவேன்-போக
  மேலானசோற்றுருண்டை நாலுமவள்

ஒழுங்காகவைத்திருந்தாள்-பின்னை
  யுன்தகப்பனுமவனை வந்தணைந்து

வாழ்ந்தார்பெண்ணிருவர்-கொண்ட
  வாசவன்பாண்டு மகாராசனவன்

சேர்ந்தாளும்நாளையிலே-மனத்
  தேட்டத்துடன்காட்டு வேட்டைக்குப்போய்

கலைமான்புணர்ச்சியிலே-ஓடிக்
  கண்டேமறைவாக நின்றுகையில்

சிலைவாங்கியெய்துவிட்டான்-கணை
  திட்டமாய்மானுக்குப் பட்டுருவி

விழுமானுரைத்தமொழி-நீயும்
  இப்படிச்சாவென்று செப்பியதால்

தழுவாதிருந்துவிட்டான்-அது
  தன்னையறிந்துங்க ளன்னையவள்

வாரொன்றுபூண்முலையாள்-முன்னே
  வாய்த்தமுனிதந்த சோற்றுருண்டை

ஈரிரண்டிருக்குதென்றுள்-சொன்ன
இன்பத்தைதழகண்டபின் தென்பாக

ஒன்றென்றுய்த்தின்னுமென்றுன்-அந்த
உண்டைதனில்மூன்று தின்றளவில்

முன்னுனர்மூவரடா-முன்னே
முந்தினதுபோகப் பிந்தியொன்றை

தருசேர்தங்கைக்களித்தான்-அவள்
தாங்கியதூண்கட்டி வாங்கியதால்

இருபாதியாச்சுதங்கே-தின்றவுட
னெண்டிசைதுதிசெய்யும் ரெண்டுபிள்ளை

அஞ்சுபேர்நீங்களடா-உங்கள்
அங்கப்பெரியப்பன் கண்குருடன்

கொஞ்சவாழ்வுபெற்றவண்டா-அவன்
கொண்டதவம்போலே கண்டதுண்டா

திருதராட்டிரன்மனைவி-செய்தவகை
செப்புவன்கேளவன் கர்ப்பிணியாய்

வருஷம்பனிரெண்டு-ஆகி
மத்திவயிற்றினைக்குத்திவிடுத்தாள்

உதிரமாம்வெள்ளமதை-கண்டு
ஓடிப்பரந்தவர் தேடியங்கே

சிதறுமற்கலசநூறு-வெகு
திட்டமதாகவே கட்டிவைத்தார்

பிறந்தாரேநூற்றுவர்கள்-ஒரு
பெண்ணுடனே நூறுமன்னவர்கள்

சிறந்தார்புகழ்பெருகி-தருவார்
செங்கரத்தாருக்கு மூங்களுக்கும்

பகையாயிருந்ததுவும்-நாடு
பற்றியவர்தனை யெத்தியதும்

புகழ்ந்தோன்றுந்தன்புவியை-ஆசை
பூண்டதுவும்நீங்க ளாண்டதுவும்

அரியோன்றுணை யிருந்தபடியால்
அத்தனையுமெந்தன் சித்தமதில்

தெரியுந்தெரியுமடா-உங்கள்
சீமையையாளாமல் பூமிவிட்டு
அனியாயக்காடுதனில்-நீங்கள்
ஆண்டிகள்வேடம் பூண்டுக்கொண்டு
தனியேவருவதென்ன-வந்த
சல்லியமானதைச் சொல்லுமென்றார்

தருமர்சொல்-விருத்தம்

அடைகலியும்வருதினிமேல் வாங்கயென்று
அரிதிருமால்கட்டளை யிட்டருளினரே
குடையிலுயரத்திபுர நகரைநீங்கி
கொடியசெடிவனங்களெல்லாங் கடந்துதாண்டி
வடிவுபெருவைகுண்ட பதியைநோக்கி
வந்திட்டோமுங்களிட வரமேபெற்றோம்
விடைகொடுப்பீர்தூருவாச ரிஷியேயென்று
வேண்டினர்ஐவர்பதம் வேண்டினரே.

வசனம்

அகோ சரணஞ்சரணம் தூர்வாசமுனிவரே ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் கலிபிறந்தபிறகு நீங்களிங்கேஇருக்கவேண்டாம் வைகுண்டத்திற்கு வாருங்களென்று அருளிச்செய்தபடியே புறப்பட்டுவந்தோம் சுவாமி முனீஸ்வரரே.

விருத்தம்

தருவ துருவாசரிஷி சேதாரத்துத்
தடங்காட்டவரிசைவிடை தானேபெற்று
தெருவெளியில்ஒருபதவி தருவைகுண்ட
திசைநோக்கிநீதியொடு திடந்தப்பாமல்
ஒருமுகமாய்ப்பஞ்சவர்க ளைந்துபேரும்
உருத்துதவுமரிபதத்தைக் கருத்திலெண்ணி
வருவழியிற்பட்டணமாம் வடக்குவாசல்
மாகாளிதிருவடியை வணங்கினரே.

### பாண்டவர்கள் மாகாளியைத் தோத்திரஞ்செய்கிற

### அகவல்

ஓங்காரரூபி உத்தமகாளி
யாங்காரரூபி மாயிரங்கரத்தி
சத்துருசங்காரி சடாட்சரிநீலி
மித்ரசிங்காரி மெய்மையானவளே
சிங்கவாகினியே செங்கண்ணிநீலி
துங்கமாயவன்றன் சோதரிகாளி
அங்காளவல்லி அன்புறுத்தாயே
மங்காதகீர்த்தி மருவியதேவி
மாயவன்வாழும் வைகுண்டபதவி
நேயமாய்த்தேடி நீண்டகானகத்தில்
மெலிவுடன்வந்தோம் விண்ணவர்வெருளும்
கலியவனெம்மைக் கலந்திடாதகற்றி
ஆதரியம்மா ஐவரும்நாங்கள்
ஏதொருவிதனம் எய்திடாதிப்போ
நீயேதுணையாய் நின்றுநடந்து
மாயவன்வாழும் வைகுண்டநகரி
சேர்த்தெமக்கருள்வாய்த் தேவியெண்டோளி
காத்திரமிகுந்த கார்வண்ணரூபி
தாயேசரணம தற்காத்தருள்வாய்
நீயேசரணம் நித்தமுஞ்சரணம்
சரணஞ்சரணம் தாமரைத்தாளே
சரணஞ்சரணம் தற்காத்தருளே.

### விருத்தம்

உஞ்சாடுகுழலணங்கு வட்டித்தசெம்பொன்
ஓலையாளிசைந்தழுத்த மாலையானை
நெஞ்சாரப்பஞ்சவர்கள் பணிந்துபோற்றி
நிதிகவலைபடுவிதன நீக்கிச்சிந்தை
அஞ்சாமல்நடந்துவழி தானேயெண்பத்
தாறுயோசனைதூர மதற்கப்பாலே
வஞ்சாலைபூண்டவுச்சி மலைமேலங்கே
வல்லரக்கன்கண்டுவழி மறிக்கின்றானே.

வசனம்

இந்தப்பிரகாரம் பாண்டவர்கள் காளியை வணங்கிக்கொண்டு ஒருமலைமேலேறிப் போகும்போது ஒரு அரக்கன்வந்து தடுக்கிறவி தமெப்படியென்றால்.

தரு-பைரவி-ரூபகம்

மிஞ்சுபுகழ்மால்பதத்தைத் தஞ்சமெனவேநடைகள்
மிச்சவழியுச்சிமலைச் சாரலிலே

பஞ்சவர்தமக்குமுன்னே வெஞ்சினத்துடனரக்கன்
பார்த்துச்சினந்துமொழி சாற்றுவானே

விந்தைவனமென்னுடைய சொந்தவனமிவ்வனத்தில்
வீருடன்துணிந்துவந்த தாரடாநீங்கள்

முந்துகண்கள்தீப்பரக்கச் சிந்தியுதிரந்தெரிக்க
மூட்டுவேன்திரும்பவழி காட்டுவேனே

என்றரக்கன்பற்கடித்துக் கொண்டுபின்னேபோகவழி
இல்லாமலேமறித்த தொல்லையைக்கண்டு

கண்டகவல்வீமனவன் மண்டலங்கிடுகிடென
காதலித்துஆர்ப்பரித்த போததனில்

நில்லாமற்போகவவ னில்லாமற்பின்னேவந்து
நேந்தரக்கன்சோபமாகி வீழ்ந்தனனே

அல்லாமலவ்வனத்தில் வல்லாண்மைபடைத்திருந்த
அரக்கனெழும்புமுன்னே சுருக்கெனவே

நம்புபுகழ்பஞ்சவர்கள் அன்பதுயோசனைதூரம்
நாட்ட.வழிதான்கடந்து தேட்டமுடனே

இன்பமொடுவீமன் தென்புபெருதருமரைப்பார்த்
தெல்லைவழிகாண்டகத்தை சொல்லுமெனவே

சொன்னபலவீமனுக்கு நன்னயதுரைத்தருமன்
தோற்றமுடனேமகிழ்ந்து சாற்றுவாரே

இன்னிலம்படைத்தவயன் மாயனும்பகைகள்கொண்டு
இறைவனடிமுடிகள் தேடுகதையும்

மந்தரம்கிறவியந்தத் தண்கடல்கடைந்தகதை
மற்றுமொருவாவிடத்தைத் துய்த்தகதையும்

இந்திரன்விருத்திரனைத் தந்திரம்கொடுவதைத்த
 இயல்புமகன கன்வலி யுயர்கதையும்
இங்கிதம்பெருகுமந்த யிலங்கையினரசன்றன்னை
 யெற்றியொருஜானகியைப் பற்றுகதையும்
பொங்கியபுறங்கள்மூன்று சங்கரன்பொடிபடுத்த
 புண்ணியக்கதைபலவு மெண்ணியுரைத்தே
ஆறுமலைகாடுபல வேறுவழிதான்கடந்து
 ஐவருநடந்துமலை மய்யமேறவே.

விருத்தம்

அட்சணம்மலையுந்தாண்டி யங்கொருவடத்தின்கீழே
பச்சைமால்பதத்தையெண்ணிப் பஞ்சவரிருந்தகாலை
செச்சைபூணவர்நெஞ்சம் சோதிக்கத்திருமால்எண்ணி
வைச்சிடசிறகுவீசிக் கருடனும்வருகின்றானே.

வசனம்

இந்தப்பிரகாரம் பாண்டவர்கள் அனேக வனங்களுங் கடந்து ஓர் வடவாலமரத்தின்கீழே குந்தியிருக்கும்போது ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் கட்டளையாலே கருடபகவான் வருகிறவிதம் எப்படி யென்றால்.

கருடன்வருகிற-சாப்பு-அ-ம்

மனதினில்அன்பர்கண்டு தரிசிக்குங்கருடன்பச்சை
மாலைமுதுகின்மேலே சுடுமந்திக்கருடன்
என்றுமனக்கண்ணிற்கண்டு சுகந்தருங்கருடன்
நஞ்சைத்துறத்தவும் சஞ்சீவியாகியகருடன்
நண்டுக்குமங்கயல் கொண்டைக்கிரங்கியகருடன்
கழுத்திலும்நெஞ்சிலும் வெள்ளையாங்கருடன்.

வேறு அகவல்

கருடக்காதல் இதை நித்தியம் ஓதிக்கொண்டுவந்தால் விஷம் தீண்டாது தீண்டின பேருக்குப் பாடம் போட்டாற்றீர்ந்துவிடும் அறியவும்.

மந்திரக்கருடன் மார்த்தாண்டகருடன்
செந்தலேநாகம் செகுத்திடுகருடன்
செங்கண்மாலேச் சேர்ந்திடுகருடன்
பொங்கியவிடத்தைப் போக்கிடுகருடன்
அஷ்டமாநாகம் அலேந்துயிர்நடுங்க
எட்டுத்திசையும் ஏகியகருடன்
அமிர்தக்கலச மங்கையிற்றுங்கி
நிமிர்ந்துவளர்ந்து நின்றிடுகருடன்
தேவேந்திரனை செயங்கொண்டந்நாள்
மாவேகத்தொடு வந்திடுகருடன்
கொடியபாம்பைக் கோதியெடுத்து
நொடியில்வழங்கும் நுவல்பலருடனே
நினைப்போர்நெஞ்சில் நிலேகொண்டிருந்து
அனல்பெருவிடத்தை யகற்றியகருடன்
சிவந்தகருடன் செல்வக்கருடன்
உவந்தமாமுனி யுதவியகருடன்
ஆலமரத்தி னடியிலிருந்தே
நீலமுகி நினைந்திடும்பஞ்ச
பாண்டவர்முன்பு பறந்துபரிந்து
தாண்டியேவந்த தகைமைக்கேநீர்
ஐவரும்நீங்கள் அடர்ந்தவிவ்வனத்தே
மெய்வருந்திடவே வந்துவிளம்பீர்
என்றுமேகேட்க
கன்றிடாதவரும் கழருவர்மாதோ.

விருத்தம்

துய்யவெள்ளேக்கழுத்துடையான் மகிழ்ந்துகேட்க
துலங்குதுரைதருமனுமே மிகக்கொண்டாடி
வெய்யகலமடைந்ததினல் நகரும்நாடும்
விட்டிந்தவனங்களெலா மிகவுந்தாண்டி
வையமதையளந்தபதந் தனேயேதேடி
வைகுண்டபதவியுற வந்தோமென்று

செய்யபஞ்சபாண்டவர்கள் மனஞ்சோதிக்க
திரும்பவச்ரமணிகருடன் செப்புவானே.

வசனம்

கருடபகவான் பாண்டவர்களைப்பார்த்துச் சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.

தரு-புன்னாகவராளி-ஆ-ம்

தேசம்விட்டவாசனையா யைந்துபேரும் என்ன
சிந்தைவைத்துவந்துதான் நீங்களைந்துபேரும்
காசுபணத்தாசைவிட்டு நீங்களைந்துபேரும் வந்து
கண்டிடுங்கள்வைகுண்டத்திலைந்துபேரும்
சொந்தமென்றுவந்தீர்களே நீங்களைந்துபேரும் வழி
தூரவனம்பாரவனம் நீங்களைந்துபேரும்
எந்தவிதந்தன்னுடனே நீங்களைந்துபேரும் போவ
தெப்படித்தான்செப்புங்களேன் நீங்களைந்துபேரும்
தொட்டரசுபட்டமுமாம் அஞ்சுபேரும் கெதி
சூழுமந்தநாள்வாராமல் நீங்களைந்துபேரும்
இல்லரமேநல்லறந்தான் நீங்களைந்துபேரும் விட்டு
எந்தறமேசொந்தரமே நீங்களைந்துபேரும்
செங்கோலைத்தேடுவீர் ஐந்துபேரும் நகர்
சேர்ந்துமங்கேவாழ்ந்திடுவீர் ஐந்துபேரும்.

விருத்தம்

என்றுரைத்தகருடனுட முகத்தைநோக்கி
யிவ்வார்த்தையெங்களிட மியம்பலாமோ
மண்டலத்திறைசையினி நினைக்கொண்ணாது
வைகுண்டதிருப்பதியின் வாசல்காண
கொண்டிருப்போமுறியென்று தருமர்சொன்ன
குற்றமருவார்த்தைதனைக் கூர்ந்துகேட்டு
கண்டுமிகக்கருடனும்போய்த் திருமால்பாதம்
கண்டிட்டார் அருநடைகொண்டிட்டாரே.

இந்தப்பிரகாரம் கருடபகவான் கூறியவார்த்தையைக் கேட்ட பஞ்சவர் சுவாமி நாங்களிறந்தாலுஞ் சரியே தத்தாபகாரமாத்திரஞ் செய்யமாட்டோம் உலகத்தையெல்லாம் பலருக்குடையதாகவிட்டு நாங்கள் வைகுண்டம் போறேம் சுவாமி கருடபகவானே.

விருத்தம்

நாட்டமரிபதத்தினிலேதேட்டமாகி
நடந்துடனேபஞ்சவர்களஞ்சுபேரும்
தேட்டமுருமனமதனில்நெரிதப்பாமல்
சீமைபெறும்பூமிதனைநினைந்திடாமல்
ஊட்டமுடன்வந்தவழிதானேநூறு
யோசனைகண்டோராலமரத்தினுள்ளே
வாட்டமுடன்றுடர்ந்துவரச்சத்தியில்லா
வலியசகாதேவனுரைவழுத்தினனே.

வசனம்

இந்தப்பிரகாரம் பாண்டவர்நடந்து ஒரு ஆலமரத்தின் கீழே வருகிறபோது சகாதேவன் நடக்கமாட்டாமல் மயங்கி முன்னே செல்கிற தருமராசனையழைத்துச் சொல்லுகிறவிதம் எப்படியெனில்.

தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆ-ம்

தாக்குபயில்வீமாமனந்தேரலையே சற்றே
தள்ளிநடக்கமுனங்கூடலையே

தீர்க்கவில்விஜயாவருவேனே நகுலா
சிந்தையுங்களைவிட்டுப்பிரிவேனே

தள்ளிநடக்கத்துடைபடபடப்பே சிந்தை
தளர்ந்துமனதுபொல்லாவெடுவெடுப்பே

துள்ளித்துடிக்குதெந்தன்தேகமெல்லாம் வழி
தூரங்கண்டுருகுதேயாகமெல்லாம்

கரியோனைகாண்பதற்குவசந்தானே எனக்கு
காலங்குறுகினதுவிசந்தானே

12

அரியோன்பாதம்நமக்குக்குடியிடங்கள் முதல்
அண்ணனுரைத்தசொல்லின்படிநடங்கள்
மேனியெல்லாங்கனலாய்வெதுவெதுப்பு தளந்து
விழுகவருதுநெஞ்சுபதைபதைப்பு
தூணிலிருந்தெழுந்த அரிதேட்டேன் நான்
தொட்டுநடந்துகூடவரமாட்டேன்
மயங்கிவருகுதிந்தநாளையிது பார்த்தால்
வைகுண்டங்காணநல்லவேளையிது
தியங்கிவருகுதிந்தகானகத்தே உயிர்
செல்லவருகுதரிகானகத்தே
போரேன்பயணமண்ணு அழவேண்டாம் காட்டுப்
புல்லிற்புரண்டுவிழவேண்டாம்
வேறேயொருநினைப்பும்விட்டிடுங்கள் துணை
விந்தையறிசெயலைத்தொட்டிடுங்கள்
அண்ணனுரைத்தசொல்லின்படிநடங்கள் நானே
அரிபதங்காணப்போகவிடைகொடுங்கள்
என்றுசகாதேவன்மனங்குளிர்ந்தானே அந்த
எல்லைதனிற்சுழன்றுவிழுந்தானே.

## விருத்தம்

தள்ளாடிவிழுந்தவனைநாலுபேரும்
தூக்கிமடிமீதுவைத்துத்துயரமாறி
தெள்ளாடுஞ்சாஸ்த்ரசகாதேவன்றன்னைத்
திடத்துடனேயெடுத்துமேதானடங்கி
உள்ளானநயகுணமார்துரையேயண்ணு
உடந்தையிந்தவனந்தனிலேதிடந்தான்றப்பி
தள்ளாடிமதிமயங்கித்தரையில்வீழ்ந்து
தம்பியிங்கேமடிந்தவிதந்தான்சொல்வீரே.

## வசனம்

அகோவாருமண்ணு தருமராஜனே நமது தம்பி சகாதேவன் நம்மைவிட்டுப்பிரிந்து இந்தவனத்தில் வீழ்ந்து இறந்துபோன காரணமேதோ தெரியச்சொல்லவேணுமண்ணு.

## தருமர்சொல்-தரு-எதுகுலகாம்போதி-அ-ம்-சாப்பு

### பல்லவி

முகூர்த்தமிட்டவனிவனே தம்பிவீமா
முகூர்த்தமிட்டவனிவனே

### அநுபல்லவி

திருக்குலாவியதவம் பெருக்குலாவியநகர்
அருக்குலாவியர்க்கிய குருக்கள்தனையும்கொல்ல முகூர்

### சரணங்கள்

வருணனுதவல்போலே பிரணமுலவுகையன்
அருணன்உதவுமன்னன் காரணன்றனைங்கொள்ள முகூர்

பெரியாதிபதிசெங்கோல் துரையாதிபதியிந்த்ரன்
சரியாதிபதியண்ணன் துரியோதனனைக்கொல்ல முகூர்

மெத்தநொந்துசகாதேவன் செத்திரங்கெததினாலே
சுத்தரணசூரர்படை அத்தனைபேரையுங்கொல்ல முகூர்

### விருத்தம்

உடந்ததுணைத்தம்பியர்க்குவிபரம்கூறி
ஒருமுகமாய்நால்வருந்தான்வனமூன்றாண்டி
அடர்ந்தரத்னகாந்திமலைத்தீர்த்தமாட
அங்குள்ளமடந்தையர்களவரைநோக்கி
திடந்தருநீராருங்களூரும்பேரும்
செப்புமென்றுகேட்பவரைத்திரும்பிநோக்கி
இடந்தயவாலத்திபுரந்தருமனென்பேர்
இவரெனக்குத்தம்பியரென்றியம்பினாரே.

### வசனம்

இந்தப்பிரகாரம் வீமனோடு சொல்லிக்கொண்டு நால்வரும் நடந்துசந்திரகாந்த மலையைக்கண்டு அங்குள்ளதடாகத்திலே ஸ்நானஞ் செய்கிறபோது அங்கேவந்த தேவகன்னிகளிவர்களைப்பார்த்து நீங்

கள் யாரென்று கேட்க நாம் அத்தினபுரத்துப் பாண்டவர்களாகு மென்று தருமராசன் சொல்ல தேவகன்னியர் சொல்லுகிறார்கள்.

தரு-நாதநாமக்கிரியை-அ-ம்

பல்லவி

கேட்டிருக்கிறோம் முன்னமேநின்பெருமை
கேட்டிருக்கிறோம்

அநுபல்லவி

கேட்டிருக்கிறோங்கயி ருட்டடந்தனிலுங்கள்
காட்டைவிட்டகன்றுபோய்க் காட்டிலிருந்ததை கேட்டி

சரணங்கள்

உளக்குப்பாலவனத்தில் அளக்குமிருகத்திற்கு
வளக்குத்தம்பியையாண்டாய் பிளக்கச்சொல்லியகதை கேட்டி

தெள்ளும்பாலமார்வீன னுள்ளஞ்சினமகல
அள்ளிமுகத்திலிட்ட எள்ளுபொரிந்தகதை கேட்டி

அகலஞ்சிறந்தபொய்கை வெகுநஞ்சருந்திச்சொந்த
சுதனைச்சிறியதாயார் மகனைத்தூக்கினகதை கேட்டி

திறமைதனிலுஞ்சக்ர நெரியைதனிலும்மன
பொறுமைதனிலும்வெகு தருமராயனென்று கேட்டி

விருத்தம்

அருந்தவஞ்சேர் திருநெடுமால்பதமேகாண
அறியபெருகவனமகன்றுதாண்டி
திருந்துசந்த்ரகாந்தமலைத்தீர்த்தமாடி
சொல்லவொருமித்துநிற்குந்திறமைபார்த்து
மொருந்துநஞ்சுபாண்டவர்கள்வடிவைநோக்கி
பூவையர்கள்மயல்பெற்றுமயங்குங்காலை
வருந்திவருந்துரைதருமன்தனைக்கொண்டாடி
மடந்தையர்கள்திரும்புமொழிவழுத்துவோமே.

வசனம்

தெய்வகன்னியர்கள் தருமராசனைப் பார்த்துச் சொல்லுகிற விதம் எப்படியென்றால்.

நொண்டிச்சிந்து

வருந்தாமன்னவரே பூமியில்
வாழ்வதைவிட்டிங்கேபோவதென்ன
இறந்தார்சுகம்பெறலாம் அங்கே
இன்னமுஞ்சொல்லுறோம்முன்னமுன்னே
சமுசாரமேபெரிது அதிலே
சாட்சியென்னகண்காட்சியென்ன
அமுதுசேர்தனம்பெறலாம் பெண்கள்
ஆசையுண்டுசிவபூசையுண்டு
பணங்காசுபெற்றிடலாம் பிள்ளை
பாக்கியமுங்கனயோக்கியமும்
மணங்கான்றவாசனையும் அபி
மானங்களும்அன்னதானங்களும்
வந்தபேரிளைப்பகல செய்தும்
வைத்திடலாம்பின்னேமெத்த
விந்தைசேர்குடித்தனமும் இன்னம்
வேணதெல்லாங்கண்ணிற்காணலாமே
அறியீரோமன்னவரே சிவனும்
ஆனவரேயொருமானனையான்
பிரியாதிடப்புறத்தே வைத்திடும்
பேச்சிக்குப்பின்னொருசாட்சியென்ன
அருமாதவம்படைத்த மாயன்
அச்சுதன்றன்மனமெச்சிமெச்சி
திருமாதுலக்குமியை நித்தஞ்
சேர்த்தகதைநீங்கள்பார்த்ததிலையோ
கண்டதேதினமகிழ்ந்து மனக்
காதலினால்மறைவேதனன்பு

வெண்டாமறையவனே நாவின்
மேலேகவிழ்ந்திடுங்கோலமதாய்
தேவர்தேவர்தன்பெருமை தன்னை
செப்பத்துலையாதுஇப்புவியில்
தாழ்விலாப்பாக்கியத்தை விட்டு
தந்துடனித்தூரம்வந்தீர்களே
இதுவேமிகப்பெரிது இதுதா
னென்னமதிசொல்லும்மன்னவரே
பதிவாழ்வேபெரிது நீங்கள்
பாங்குடனேவைகுண்டங்காணவென்றால்
வெகுநாள்வெகுதூரம் இந்த
மேட்டிமைதன்னைபோட்டிடுங்கள்
சுகவாழ்வுநாம்தருவோம் இன்னம்
சூட்சுமத்துக்குள்மோட்சமுண்டு
சிவலோகம்நாம்தருவோம் வெகுவெகு
சீர்தருவோங்கனப்பேர்தருவோம்
தவராமுத்தந்தருவோம் மிகவுந்
தாந்தருவோமிதழ்தாந்தருவோம்
கொங்கைகுடந்தருவோம் அடிக்கடி
கூடும்கீதம்பாடிடுவோம்
பெண்கள்நாங்களெல்லாம் உங்கள்
பேச்சுகுறுக்கொருபேச்சுரையோம்
பேரானமன்னவரே எங்கள்
பெண்களெல்லாமினியுங்களுக்கு
தாராளமாயிருப்போம் மனந்
தாராளமாநீங்கள்வாருமென்று
சொன்னார்கன்னிகைகள் வெகுவெகு
சுந்தரமாதர்களின்விதமே

தானதானனா

### விருத்தம்

தருவிறைமடவீர்நாங்கள் தரிக்கவும்போகாதென்று
கிருபையாயனுப்பிவிட்டுமக்கிரிமலைதீர்த்தமாடி
உருவுடனயர்ந்தயர்ந்துயோசனையைந்துதாண்டி
வருவழிதனிற்சிங்காரவானரந்தோன்றிற்றன்றே.

### வசனம்

இந்தப்பிரகாரம் பாண்டவர் நால்வரும் தேவகன்னிகளை அனுப்பிவிட்டு நடக்கும்போது வழியிலே வானரங்கள் வந்து தடுத்துச் சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.

### தரு-உசேனி-ரூபகதாளம்

வானரங்கள்வந்துதோற்றியே தர்மராசனை
வணங்கித்தன் மனமிணங்கிப்போற்றியே
கந்தமனதுநொந்துநோக்கமாய் வந்ததேயென்று
கானகம்வாழும்வானரம்கேட்டதே
கேட்டவானரங்கேட்டபோதிலே கலியன்வந்து
திறமையுமவன்வறுமைச்சூதிலே
நாட்டைநகரைமீட்டுத்தோணலே கெதியைக்கொடுக்கும்
நல்லவைகுண்டத்தொல்லைகாணவே
போவதுதுசமாவதுநாட்டமே அத்திபுரத்திற்
பொங்கியசெங்கோல்பஞ்சவர்கூட்டமே
தேவர்துணையரிகாவல்வாசனே நாங்கள்தானென்று
திறமைசொல்லினுந்தருமராசனே
சொன்னதருமன்கன்னல்வாக்கிலே வானரங்கள்
தொழுதுமுன்னே அடுத்துநோக்கியே
தென்னைகமுகுபுன்னைகமுகிது கதலியும்பலாத்
தென்றல்மல்லிகைகொன்றைவனமிதே
இளகவுங்கள்தன்னழகைப்பார்ப்போம் ஊழியங்கேட்டு
என்னூழுங்கள்பசியைத்தீர்ப்பமே
கோனையெங்களிடத்தில்மன்னியே இருங்களென்று
கும்பிட்டுவானரஞ்சொன்னதே

விருத்தம்

தாழைதிருவைகுண்டப்பதிக்குப்போறேம்
தடுத்திடலாகாதெனவேதருமர்சொன்னர்
நீதகலுங்கேதாரவழியுங்காட்டி
திரும்பியந்தவானரங்கள்செல்லுங்காலை
மேதினியிலியக்கர்பதிகடந்துமிகவுந்தூரம்
போதவழியெழுபதுயோசனையுந்தாண்டிப்
போகநகுலனுக்ககதிபூண்டுமேலும்
பொல்லாதமயக்கமுமேயுண்டாச்சன்றே.

வசனம்

இந்தப்பிரகாரம் வானரங்களை அனுப்பிவித்துக் கொண்டுபோகும்பொழுது நகுலமகாராசனுக்கு அதிமயக்கம் உண்டாகியது

தரு-நாட்டை-அ-ம்

அந்திபகல்நடந்து அண்ணுவீமா
அண்ணல்தனைத்துடர்ந்தே அண்ணுவீமா
மாயவன்கோலமிதே அண்ணுவீமா
மனந்துடிப்பதுவே அண்ணுவீமா
காதுமடைப்பதுவே அண்ணுவீமா
நடக்கமுடியாது அண்ணுவீமா
நடுக்கமுங்காணுதிப்போ அண்ணுவீமா
பிறப்பையொழித்திடவே அண்ணுவீமா
பேசவுங்கூடவில்லை அண்ணுவீமா
தம்பிசகாதேவன் அண்ணுவீமா
தான்போனவிடத்தே அண்ணுவீமா
நானும்போய்விடுவேன் அண்ணுவீமா
நாரணநான்தன்பதிக்கே அண்ணுவீமா
என்றுசொல்லிநகுலன் அண்ணுவீமா
என்றுமூர்ச்சித்துவிழுந்தான் அண்ணுவீமா

விருத்தம்

தெளிந்ததெய்வகன்னியர்கள்தேவர்சூழ
தெய்வமாவிமானத்தேரிலேறி
அழுந்தியவைகுண்டபதிநகுலன்சேர்ந்தார்
அறிந்துகட்டிமூவருமங்கழுதுவிம்மி
விழுந்தவனையெடுத்தடக்கிச்சடங்கேசெய்து
வீமனுமேதருமர்தனைமிகக்கொண்டாடி
தளந்தவனந்தனிலிந்தவிபரங்கேட்க
தருமனந்தவீமனுக்குத்தான்சொல்வாரே.

வசனம்

இந்தவிதமாக நகுலமகாராசன் விழுந்துவிட்டபிறகு வீமனைப் பார்த்துத் தருமராசன் சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.

தரு-இ-ம்-எ துருலகாம்போதி-அ-ம்

வாழ்வைசவுரியம்பெற்ற வீமாநகுலன்
வாட்டத்துடனே வனகாட்டகத்தே

தேடியுழந்துமிந்தப் பூமிதனில்மயங்கித்
தேட்டமுடன்செத்தகதை காட்டிடுவேன்

எண்சாணுடம்பிலே மிஞ்சாதுதன்கையினால்
எறும்புக்குத்தானும் தம்பிவிரும்பிடவே

நெஞ்சாரவேமகிழ்ந்து அஞ்சாமல்நான்பெரிய
னென்பதுபெருமையன்றே தென்பதுதான்

தூத்திப்பதறுகளைச் சேர்த்துவிரையக்கட்டி
சுயமாய்த்திருப்பதே தருமமாகும்

சேத்திற்பதித்தவிரை நாற்றைப்பதியவிட்டு
தெளிவதுசெந்நெல்பின்னே விளைவதுவே

பந்திபெரும்புவியில் சிந்தைவறுமையது
பாடுபட்டனந்தவிதந் தேடினாலும்

இந்தப்பவிசுநம்மன் சொந்தபவிசெனவே
ஈயாமல்வாழ்வதுண்டோ வையகத்தில்

மெத்தவித்தையான்படைத்து இத்தரையிருந்துமென்ன
வீடுமட்டுமல்லாற் கூடவருமோ

சுத்தகுலன்கற்ற வித்தையொருவருக்கு
சொல்லாததினுற்செத்த தொல்லையிதுவே

அப்படிதருமர்சொல்லு மூப்பத்துயோசனை தூர
ஆலமரத்தில்வந்தார் கோலமுடனே

செப்பரிய ஆலமரத் தப்பெரியகானகத்தில்
தேரியிருந்து விளேப்பாரிஞரே

பொங்குபுகழ்மேகவண்ணன் தங்கியிருவிழிதுயின்ற
புண்ணியமாமீதென் றெண்ணியெண்ணியே

அங்குமொருமாமுனியைச் செங்கரங்கொண்டேபணிந்து
அப்புறம்யோசனைதூரம் மூப்பதாகி

விருத்தம்

நடந்துபின் துடர்மாதுக்கும் நல்லதம்பியர்க்குங்காலம்
முடிந்துதென்றிரங்கிக்கானில் மூவரும்வருகுங்காலே
தடம்பெருமிரண்டுகண்கள் தான்சிவந்துயரவுமாகி
அடைந்திடச்சினந்துசீறி யானையுந்தோன்றிற்றன்றே.

வசனம்

இந்தப்பிரகாரம் பாண்டவர் மூன்றுபேரும் நடந்துபோகும் போது ஒருமதயானையானது கண்சிவந்து சீறிக்கொண்டு எதிரேவருகிறவிதம் எப்படியென்றால்.

தரு-புன்னுகவராளி-ஆ-ம்

பல்லவி

ஆனையுந்தோன்றியதே-வனத்திலோ
ராணையுந்தோன்றியதே

அநுபல்லவி

அம்மைப்போலவிசை மூன்பாச்சலாகவே
தும்பிச்சங்கைவீசிக் கொம்பைச்சுழட்டியே-ஆனை
நேருற்றமன்னவர் போருக்கடர்ந்திட

சமர்த்துள்ளமுனிவனுமகத்தியனின்
மகத்துவமுனிசிடன் நாஜெருரு
வனத்தினிற்சென்றனுதினம்புரியும்
மாதேவபூசனைக்கு பலபல
வீரிட்டதட்டியே சீரிச்சினந்தொரு-ஆனையும்
அரிபதநமக்கொரு பெருந்துணையென்றிடும்
திருத்தஞ்சேர்மூவரை மரித்துக்கொண்டேயொரு-ஆனையு

விருத்தம்

கானினில்மரித்தயானை கண்டுடல்படபடத்தே
மேனியுந்துடிக்கப்பார்த்து வீமனுங்கழூத்திலேற
ஆனையுந்திரும்பிப்பின்னே ரையராய்விளங்கக்கண்டு
கோனெனுந்தருமன்கேட்கக் கூறினன்மறையோன்றானே.

வசனம்

இப்படி கானகத்தில் மரித்தயானையைப் பார்த்து உடல்படபட த்து நிற்கும்போது வீமன் அந்தயானையின் பிடரியில் பாய்ந்துயேர அதுவோர் வேதியராய் எதிரில்தோன்ற தருமர் அம்மறையோனை வினவுகிறதெப்படியென்றால்.

தரு—ஆனந்தக்களிப்பு

ககத்தினில்மிகுத்ததவம் செய்திடும்
வாசமுறுமலர்கொய்யநேசமதாய்
தீதேதும்வாராதே வனத்திற்
சென்றிடவங்கொருகுன்றுகளும்
கரிபிடியுடன்கூடி மோகம்
கதித்திடவிளையாடுமதிசயமே
பிரீதியாய்நான்பார்த்து நின்றொரு
பெருமுனிபூசையின்வருவேளை
முனிவன்சீறி பூசனைக்கு
முன்னாகவருதல்விட்டிந்நேரமீ

வனமதில்யானை தனை பார்த்திடும்
மமதையால்நீயொருமதகரியாய்

திரிந்திடவெனச்சபித்தான் நான்மிகத்
திடுக்கிட்டுமனத்தினில்நடுநடுங்கி

பிரிந்திடுமிச்சாபம் தீர்ந்திடவே
பிழைபொறுத்தருளெனவழுத்திடவே

பாண்டவர்மூவருக்கும் வருகிற
பாதையிலேவரும்போததனில்

மீண்டிடுமெனவுரைத்தார் அப்படியே
வேந்தராமுங்கள்கிருபைசார்ந்திடவே

பிழைத்தேனென்னவுரைத்து மறைபவன்
பெருவனந்தனிலேவிலகிடவே

தனனாதன தனனா.

விருத்தம்

இப்படியையர்வார்த்தை யியம்பிவிட்டகன்றகாலை
ஒப்புடநடந்துநூறு யோசனைதூரம்தாண்டி
சங்கொருபெரியமூங்கில் வனத்தினிற்றீர்த்தமாடி
வற்புறுசுகேசனென்னு மாதவமுனியைக்கண்டார்.

வசனம்

இந்தப்பிரகாரம் பாண்டவர் மூவரும் ஐயரைவிட்டு நூறுயோசனைதூரம் நடந்து ஓர்வனத்திலே சுகேசமுனிவரைத் தரிசித்தார்கள்

விருத்தம்

அடையமுனியிடத்திற் பெண்ணேரைந்து
ஆயிரமுயிருக்குமன மறிவீரென்ன
வடிவுபெறுமிந்தமொழி பொருக்கோமென்ன
மாதவஞ்சேரந்தமுனி வழியுங்காட்டி
இடைதுவளவயமது யோசனையுந்தாண்டி
இருபதமுங்கொப்புளமாய் வருங்காலத்தில்
தடைமுகிலசைந்திடப் பொன்மணிகளாட
தையலர்களுசிதமுனித் தவங்கண்டாரே.

வசனம்

இந்தப்பிரகாரம் பின்னும் சுகேசமுனிவரிடம் விடைபெற்றுக் கொண்டு நடக்கும்போது ஆரணியத்திலே தேவகன்னியர்கள் ஊசி முனைமேலிருந்து கடினமாகிய தவஞ்செய்கிறதைக் கண்டார்கள்.

தேவகன்னியர்சொல்தரு-புன்னாகவராளி-அ-ம்

பல்லவி

நினைந்தவரம்தருவோம் நீங்கள்
நினைந்தவரந்தருவோம்

அநுபல்லவி

நினைந்தவரமுங்க ளினைந்தவராமலே
கனந்தனிற்கேளுங்கள் மனந்தனிலுள்ளபடி -நினை

சரணங்கள்

அகத்தினிற்பாக்கியம் தொகுத்தென்றுமிருக்கவும்
சுகத்தினில்மடமாதர் சுகத்தொடுபெருக்கவும் - நினை

மானஞ்சொற்பலிக்கவும் கானஞ்சொல்நினைக்கவும்
தேனுஞ்சொல்லுதவிபோல் ஞானம்பதவிபெற-நினை

பொய்கொண்டவாழ்வுக்கும் மெய்கொண்டசாவுக்கும்
செய்கொண்டமாயவன் வைகுண்டவாழ்க்கும்-நினை

திரண்டகவலைபிணி யகன்றுபொடிப்பொடியாய்
மிரண்ட.வினையாங்காடு வரஞ்சுகம்பெறவும்-நினை

விருத்தம்

இட்டமுடன் ஊசிமுனைத் தவசுபெண்கள்
இடத்தில்வரந்தனைவாங்கி வனமுந்தாண்டிப்
பதட்டமுடன்சுகேசருறைமலையின்மேலேறி
பவனவரைமுனியவரைப்பணிந்துபோற்றி

85896

அதிட்டவிடைதனைவாங்கியப்பாற்சென்று
அகத்தியரும்புலத்தியரும்அருமையான
வதிட்டமுனிகோசிகனார்முதலாயுள்ள
மாதர்கள்புடைசூழவரக்கண்டாரே.

வசனம்

இந்தப்பிரகாரம் நடக்கும்போது வதிஷ்டர்வான்மீகர் அகத்தியர்முதலான மாதவமுனிவர் புடைசூழ்ந்துவருவதைக் கண்டார்கள்.

தரு-மோகனம்-ஆ-ம்

சரணஞ்சரணமையா — நினதுபதம்
சரணஞ்சரணமையா

அநுபல்லவி

சரணஞ்சரணமிது — தருணங்கதிகொடுக்க
சமயஞ்சமயம்எங்கள் — சுமையாய்வினையொழிக்க-சரணம்

அருணன்றயவுபெற்ற — கருணைகுருகுலத்தில்
அருமையும்வாழ்வுபெற்ற — அழகுசேர்முனியே-சரணஞ்

துவண்டகுடுமிபெற்ற — கமண்டலகர்த்தனே
சொந்தகணமதிநீறு — சந்ததமணிந்தவா-சரணஞ்

தவழ்ந்தமுப்புரிநூலும் — சுழன்றவிசிறியோடும்
தாரணிதனிற்போக — காணவசிட்டரே-சரணஞ்

குருகுலந்தனிலன்பு — பெருகவைத்திட்டோனே
சருவக்கோசிகன்கண்ட — செருக்கருத்திட்டோனே-சரணம்

தருமர்சொல்-வசனம்

அகோவாரும் சுவாமி வதிஷ்டமுனிவரே நாங்கள்வைகுண்டத்திற்குப்போகிறோமாகையால் எங்களை ஆசீர்வாதம்செய்து அனுப்பவேணுமையா சுவாமி.

வதிஷ்டர் வசனம்

அப்படியே போய்வாருங்களப்பா தருமபுத்திர மகாராசனே.

விருத்தம்

நெஞ்சினிற்றயவுபூண்டு நேருளவதிஷ்டர்சொன்ன
செஞ்சொலின்வலுமைகொண்டு திரும்பிமூவருமாய்ப்போக
அஞ்சியேமனமஞ்சாம லருகிருந்துதவிசெய்யும்
மிஞ்சியதவத்தின்விஸ்வா மித்திரர்தனைக்கண்டாரே.

வசனம்

வதிஷ்டரிடத்திலே ஆசிபெற்றுக்கொண்டு போகிறபோது விசுவாமித்திரமுனிவரைக் கண்டார்கள்.

விருத்தம்

நல்லதோர்முனியைப்போற்றி நடைகொள்பூதங்களாட
உல்லாசவழியுநூறு யோசனை தூரந்தாண்டி
வல்லவன்கருடனென்னும் மலைதனிற்றீர்த்தமாடி
மல்லிகைதோப்பும்சோலை வனமதுவந்துகண்டார்.

வசனம்

இந்தப்பிரகாரம் விசுவாமித்திரரிடம் விடைபெற்றுக்கொண்டு நூறுயோசனை நடந்து கருடமலையிலே தீர்த்தமாடி அங்கேயொரு புஷ்பவனத்திலே வந்து சேர்ந்தார்கள்.

தரு-பூபாளம்-ரூ-ம்

விந்தைத்திருச்சபையில் முன்னே
வின்னுறுஞ்செந்தமிழ்போல்

இந்தவனந்தனிலே மணச்
சந்தணச்சோலையைப்பார்

மெட்டுக்கிசைந்தமங்கை கணவற்கு
வெள்ளிலைச்சுற்றதுவே

எட்டிக்கொடுப்பதுபோல் கதலிகள்
ஈன்றங்கேநிற்பது

செங்கவளே குலுங்க மின்னுஞ்
செப்புக்கருடங்களைத்தான் கையிலே

பெண்களை அணைப்பதுபோற் கதலிப்
பெலாமரநிற்பதுபார்

வாரிட்டகச்செழும்பி மறு
மங்கையர்கொங்கைகள்போல்

சீரிட்டசெவ்விளநீர் கொண்ட
தென்னமரங்களைப்பார்

குன்றுகுவிமுலையா ளணி
கொத்துச்சரங்களைப்போல்

மன்றிக்கனிகனியாய்க் கொண்ட
மாமரநிற்பதுபார்

வண்டுக்குழல்மடவார்
மைந்தனைத்தோளில் வைக்க

கன்றுக்குஅப்படியேகாய்த்த
கமுகமரங்களைப்பார்

கொங்கைக்கருப்பதனிற் கொண்ட
குவிந்தமுலையதுபோல்

அங்கும்பழம்பழுத்துக் கொண்ட
அரசன்மரத்தினைப்பார்

எற்கும்பெரும்புவியில் இங்கு
இல்லாதஏழைகளை

கார்க்குந்தியாகியைப்போல் பட்சிக்
கானமரங்களைப்பார்

தேட்டும்பெருமபுவியில் பெருஞ்
செம்பொன்திரவியத்தை

கூட்டிக்குலாவித்ததுபோல் நிற்கும்
கொன்றைமரங்களைப்பார்

கொள்ளும்பனிமொழியாள் அணி

கொண்டபவளங்களை
அள்ளியிறைப்பதுபோற் சொரி
யத்திமரங்களைப்பார்
குந்திதிருச்சபையில் லோபர்
கூடவிருப்பதுபோல்
இந்தவனத்தினிலே கூட
எட்டிமரங்களைப்பார்
சிந்தைவெடுவெடுத்து வைது
திட்டியேமாதர்மனம்
வெந்திட்டசோறதுபோல் நிற்கும்
வேப்பமரங்களைப்பார்
கோவைக்கிளிமொழியாள் பெண்கள்
கூந்தல்தனக்கிசைந்த
பூவைக்கொடுப்பதற்கு நிற்கும்
புன்னைமரங்களைப்பார்
தெருமடவியர்கள் இந்தச்
சீமையில்தான்பிறக்க
வாரதுமெப்பவென்று கொடி
மல்லிகைநிற்பதுபார்
மாவிலுயர்ந்தவனம் பூத்த
யோவுநடந்துபின்னும்
கூடத்தைவந்துகண்டார் பெரும்

விருத்தம்

பங்கயக்கமலவாவி பன்னககூடந்தன்னில்
தங்கியேயிருந்துசற்றே தவிப்பதையாறிப்பின்னே
யெங்கினுநடந்துதாண்டி யிந்திரன்மலையிலங்கே
வெங்கணுஞ்சிவக்கப்பார்த்து வேங்கையுந்தோன்றிற்றன்றே.

வசனம்

இந்தப்பிரகாரம் ஒரு தடாகமும் கூடமுங்கண்டு அங்கு இளைப் பாய் போகும்போது தேவேந்திரனுடைய மலையிலேறி நடந்துபோ

கும்போது ஒரு வேங்கைப்புலியானது உறுமிக்கொண்டு வருவதைக் கண்டார்கள்.

தரு-நாதநாமக்கிரியை-அடதாளம்

பல்லவி

வேங்கைவந்ததுவே பொரிதிகழ்
வேங்கைவந்ததுவே

அநுபல்லவி

வேங்கைவந்தது தாங்குஞ்சீர்பாதம்
மெள்ளமெள்ளமுனைப் பல்லுத்திறவாமல்
வாங்குங்கையதை யோங்கியப்புரம்
வட்டமிட்டுச்சுற்றி யட்டலறிற்செவ்வரி-வேங்கை

சரணங்கள்

செழியதவம்பெற்ற வழிகொள் தருமராசன்
யென்றுநடக்கையிற் கண்டுபதறியே
விழியையுருட்டிக்கொண்டு ஒழியுந்தலம்பார்த்து
விரண்டுசெடிமறவில் திரண்டுமறுகிவரி-வேங்கை

சென்றுவில்விசயனைக் கண்டுபின்விரண்டோடி
செடியைத்தலைமறுத்துக் கடுகிப்பார்த்துக்கொண்டு
தண்டைவால்முறுக்கியே அண்டத்திறமில்லாமல்
சாய்த்துச்சாய்த்தும்பெரு மூர்ச்சுவிடுத்துவரி-வேங்கை

விருத்தம்

சொற்பெரியவீமன்புலி வாய்கிழிக்கத்
தொடர்ந்துறுசாபம்விலகி மறையோன்போகத்
தெற்பவழியெண்பது யோசனையுந்தாண்டிக்
கிஞ்சுகமாய்க்கிளிவனத்தைக் கடந்துதேடி
யொப்பரியசிகரமலை கடந்துநாலு
யோசனைதூரமுந்தாண்டி யதுக்கப்பாலே
அப்பெரியவடவால மரத்துக்குள்ளே
அருச்சுனனுக்கும் அசதியனுகிற்றன்றே.

## வசனம்

இந்தபிரகாரம் மூவரும் வேங்கையைக் கிழித்தெரிந்து போகும்போது ஒருஆலமர நிழலிலே இளைப்பாறியிருக்க அருச்சுனனுக்கு ஆற்றக்கூடாத மயக்கம் உண்டாகியது.

அருச்சுனன்சொல்-தரு-இந்துஸ்தானி-ஆ-ம்-சாப்பு.

வந்தவழியிந்தவழியென்கண்ணேவீமா மெத்த
வயிற்றுவலியுயர்த்துதுபார் என்கண்ணேவீமா

சந்துவழியிந்தவழியென்கண்ணேவீமா நடை
தள்ளாடிக்கொள்ளுதுபார் யென்கண்ணேவீமா

கொம்பனைக்குந்தம்போலேவீமா வந்த
கூறுஇதுவேறுயில்லைஎன்கண்ணேவீமா

திண்புவிக்கும்பின்புவிக்கும்என்கண்ணேவீமா சேதி
தேடவழிகூடுதுபாரென்கண்ணேவீமா

எண்ணுதவியண்ணன்பதம்நமக்கண்ணேவீமா பிறந்
தேற்கவினிப்போக்குதுயிர்என்கண்ணேவீமா

உன்னுதவிமுன்னுதவிதுணையண்ணேவீமா நினைந்
துருகிமனங்கருகுதுபார்என்கண்ணேவீமா

தருவழியேவருகையிலேதுணையண்ணுவீமா நீங்கள்
தாண்டிஎப்படிநடப்பீர்கள்அண்ணுவீமா

தேரிவந்ததாறுக்குள்ளேயண்ணுவீமா நானு
சிலவழிந்தாற்பலனென்னவோஅண்ணுவீமா

யேறிவந்தபாறைகள்போல்துணையண்ணுவீமா துணை
யெத்துணையோபற்றுவதுதுணையண்ணுவீமா

## விருத்தம்

என்றுருகியருச்சுனனுஞ்சுழன்றுவீழ்ந்த
　இடம்பார்த்துத்திடம்பார்த்துஇரதத்தேரில்
சென்றுவிண்ணில்வானவர்தான்வருஞ்சூழத்
　திரவிஜயன்வைகுண்டஞ்சேர்ந்தகாலே
மறுவிவிம்மியழுதுருகிச்சடங்குந்தீர்ந்து
　வராகமலைதாண்டியப்பால்வனத்திலங்கே

கண்டுருகியிந்தவகைவீமசேனன்
கனகதுரைதருமனுமேசதறுவாரே.

வசனம்

இந்தவிதமாக அருச்சுனன் வைகுண்டம் போகிறபோது தரும ராசன் புலம்புகிற தெப்படியென்றால்.

தரு-நீலாம்புரி-அ-ம்

கட்டழகாமெட்டழகா தம்பி
காவலனேவாள்வீமா

வெட்டழகுதொட்டழகு செய்யும்
வீரமுள்ளபாதத்தில்

வாய்த்தசமர்நூற்றுவரை வெல்ல
மாயவன்றன்னுபகமாய்

தேத்துவினுக்கேற்றபடி மாயன்
தேரூரநேர்மைகொண்டான்

ஓசைமல்லிகைவாசனைபோல் தவம்
ஒங்குமுலகேங்கிடவே

ஆசைமனநேசமதாய்ப் பற்றி
யதட்டிப்பதட்டமுடன்

வாகுறுதேர்ப்பாகனென்ன மாயன்
வட்டமிட்டுதொட்டழிய

வேகமுடன்போகையிலே யவர்
விந்தைபதம்நொந்தழுதார்

எப்படியோவிற்பிடித்துக் கனை
பெய்யவெகுவெய்யவனுய்

தப்பிதமாயப்பொழுது சரந்
தட்டவர்க்குப்பட்டிடவே

வேலையரியருகிருக்க இவன்
மேலிருக்கக்காலமுண்டோ

கோளையிவனல்வரவே யந்தக்
குற்றமிங்குசெத்ததென்றார்

விருத்தம்

புடவிசேர்குமுதவாவிப் பொய்கையிற்றீர்த்தமாடி
தொடுவழிநடைதொண்ணூறு தொட்டயோசனேயுந்தாண்டி
உடைமலேநாலுபத்து யோசனேநடந்தப்பாலே
படுமொடுமலேயில்ஏறப் பன்றியுந்தோன்றிற்றன்றே

வசனம்

இந்தப்பிரகாரம் நடந்துபோய் ஒரு மலேமீதேறும்போது ஒரு பன்றியானதெதிரேவந்தது.

தரு-புன்னுகவராளி-அ-ம்

பல்லவி

பன்றியுந்தோன்றியதே வராகமலேப்
பன்றியுந்தோன்றியதே

அநுபல்லவி

அண்டியமெய்ப்பறுத்து ஒண்டியேயார்ப்பரித்து
முண்டியதட்டிக்கொம்பு ரண்டையுமேயசைத்து பன்

சரணங்கள்

நிலேப்பெரிதேகபரிய மலேப்பெரிதாங்கார
வலப்பெரிதாமயிர் சிலுப்பியுடலசைத்துப் பன்

சூதுக்குடன்றரை மோதிப்பகட்டிவிடை
காதிட்டவர்க்குமுன்னே வாதிட்டதட்டிப்பெரும் பன்

மண்ணதுவேதியர் திண்ணதிலார்ப்பரித்
துண்ணெனவேகண்டு கண்ணுஞ்சிவந்தொரு பன்

விருத்தம்

திறமிஞ்சுபன்றிதனே வீமன்வாட்டிச்
சிதைத்திடவோர்மறையவனுய்ச் சென்றான்மேலே

அறமிஞ்சவைம்பதுயோ சனையுந்தாண்டி
அப்புறமேசென்றிடுங்கா லாலின்கீழே
பொறைமிஞ்சுதருமனுடன் வீமசேனன்
புகுந்திருக்கப்பூர்வவினைப் புணர்ப்பினாலே
மறமிஞ்சுதோளிணையான் வீமனுக்கு
மாமயக்கமதுவந்து வளைந்ததன்றே.

வசனம்

இந்தப்பிரகாரம் போகும்போது வீமசேனமகாராசனுக்கு மயக்கமேலிட்டது.

வீமன் சொல்-தரு-இ-ம்-உசேனி-ஆ-ம்

தன்னையேபோகுமுன்னமே யேதோ
தலையேபற்றிவலியே

என்னமோவண்ணவிண்ணமோ யந்த
ணிடுப்பேமிகுகடுப்பே

அண்ணலேயிந்தமண்ணிலே யொற்றை
யாவையோநொந்துபோவையோ

திண்ணனேகடல்வண்ணனே தேடு
வித்தகேயொருமித்தகே

சொல்லண்ணசற்றுநில்லண்ண வலி
தோளண்ணகதைகேளண்ண

வல்லராம்தம்பியெல்லராம் வகை
வந்துதேஉயிர்முந்தியே

உனையேவிட்டுத்தனியே மன
தொருப்பாயெங்கேயிருப்பேன்

அனியாய்வருசனியன் என்னை
அப்புறம்விட்டுத்தப்புமோ

எத்தனைமலைசுற்றுமோ இனி
யென்னமோவழிமுன்னமோ

ஒத்தையாய்த்தூரமெத்தவே வழி
யொவ்வுமாவினம்நவ்வுமா

எனக்கேனிந்தமயக்கும் வந்த
தெப்படியண்ணுசெப்புவீர்
முன்பேசெலுந்தம்பிமார் கதை
முன்னங்கேட்கவுஞ்சொன்னேயே
அன்பினல்செத்தபின்பு கேட்பது
ஆரையாகொஞ்சங்கூறுவீர்
வாகவன்றிருராகவன் செய்த
வகைதானிரதத்தொகைதான்
சாகமுயிர்மோகஞ் செய்த
சல்லியங்களைச்சொல்லண்ணு

விருத்தம்

செழுந்தவவ்வனந்தனிலே வாட்டமுற்றுத்
தியங்கிமனமயங்கியறி திருவைத்தேடி
வளர்ந்ததிருவைகுண்ட பதியைநோக்கி
வந்தஇடமிந்தவித மடிந்தகாலை
அழுந்தியேதான்சாகும்வித மதனைத்தானு
மண்ணையேயன்பாகக்கேட்குங்காலை
தழைந்தபுகழ்துரைதரும ராசனந்தத்
தார்வீமன்றனக்குமுறை சாற்றுவாரே.

வசனம்

இந்தவிதங்கேட்ட வீமனுக்குத் தருமராசன் சொல்லுகிறவிதம் எப்படியென்றால்.

தரு-நொண்டிச்சிந்து.

திருமேனிதன்னைவிட்டு உயிர்
செல்லுதுபாரெனச்சொல்லுகிறர்
அருமைதரும்வீமா தம்பி
அண்டந்தழைத்திட்டமண்டலமும்
பின்னையும்ராவணனுன்னியுன்னி
திடங்கொண்டிருக்கலுற்றான் அ
தேட்டம்பிறப்பதுநாட்டியங்கே

சுகவாழ்வுபெற்றிருக்க திங்கள்
தோறுமோர்மும்மழைமாரிபெய்ய
மிகவேபிழைபொறுத்த ராசர்
வேந்தர்கள்செங்கோல்சாந்தமுடன்
தழைத்தேதனித்திருக்க இந்தத்
தண்புவிதன்னிலேஅன்பர்களை
வளர்த்தேவளர்ந்திருக்க திரு
வாங்கவிவாலகேசனது
கதிதமிழ்வழிதுலையச் செய்யும்
நாட்டிகத்தாவிதைகேட்டவற்கு
எமவாதைவிட்டகல இந்த
எல்லதனிற்கதைசொல்லுகிறேன்
மனதாரநீகேளாய் தம்பி
வாளரக்கன்முதனுளையிலே
தனதொருபத்துமுடி பெத்தமுடி
தன்னிலோர்முடிதனைத்தான்பிடிங்கி
நரம்பினையெடுத்துகட்டி பெரிய
நாயகமாயொருவீணைசெய்து
துடங்கித்திரும்பவுமே மனத்
தோற்றமுடன்வீணைவாத்தியங்கள்
கடினத்துடனடித்து சிவனிட
காட்சிபெறவென்றுசூட்சமதாய்
நெடுநாள்தவமிருந்தான் அவன்
நின்றஅருந்தவங்கண்டுபின்னே
பரஞ்சோதிபார்வதியாள் சிவனிட
பாதம்வணங்கியகாதலினல்
இரங்கியவன்தவசு செய்து
ஏனென்றுகேட்டிடபரசிமவன்
வழியாயிவன்தவசு செய்திடும்
வல்லமையானதுசொல்லுகிறேன்
அழியாவரங்கேட்க வென்று
அர்ப்புதமாய்ச்சிவன்செப்பியபின்

தடுக்காதேபாவமிது இவன்
தாஷ்டிகத்தாலுமைக்கேட்டவரம்
கொடுக்காதிருந்துவிட்டால் வெகு
குற்றம்வருமென்றுபத்தினியாள்
நடந்தாரீஸ்வரன்றான் இந்த
ராவணனன்டையில்தாபமுடன்
அடர்ந்தேகின்றிடுங்கால் உமை
யாளுந்துடர்ந்தநாளேயிலே
புரங்களேஎரித்தவன்றாள் அன்பு
பூண்டரக்காவுனக்கேற்றபடி
வரங்கேளென்றுரைத்தார் அன்று
வாதிலங்கைமன்னனே துரைப்பான்
மந்திரவாள்பலமும் உந்தன்
மங்கையவளெந்தன் பங்குதவும்
சொந்தமூன்றறைக்கோடி வயதும்
தொட்டதொகையுடன்கட்டளேயாய்
இப்பவேணுமென்றுரைத்தான் சிவன்
இந்தப்படிவரந்தந்துவிட்டார்
கற்புமாதுபின்துடர சிவ
காட்சியாய்ராவணன்மூர்ச்சிதமாய்
இறைஞ்சியேதென்னிலங்கை நோக்கி
இந்தவரம்பெற்றுத்தந்திரமாய்
வருஞ்சூதுகண்டறிந்து திரு
மாலுந்தடத்தினிற்கோலமதாய்ப்
பாதலந்தட்டுருவ யுதை
பட்டபிரம்பதைநட்டுவைத்து
ஆதாரமாகவன்று வெகு
ஆழங்களாய்ப்படிநீளங்களாய்
நிலேதோட்டமுண்டுபண்ணி அங்கே
நித்தமுங்காய்க்கின்றகத்திரியை
தலேகீழ்நட்டுவைத்து பின்னே
தண்ணீர்க்குடத்தைத்தலேயில்வைத்து

பொத்தலாயிரமிருக்க திரு
புண்ணியவானந்தத்தண்ணீரை

மெத்தவேமுகந்துகொண்டு கத்திரி
வேரைநனைத்திடுங்காரணத்தை

வந்துகண்டுராவணன்றான் திரு
மாயவன்செய்கிறஞாயமதை

தந்துடனேநகைத்து இது
தப்புடன்கத்திரிகாய்ப்பதுண்டா

ஏனேபைத்தியனே என்று
ராவணன்கேட்டிடராமர்சொல்லுவார்

நானேபைத்தியவான் முன்னே
நற்சிவன்றன்னைநீதவசுசெய்து

மறவாளுங்கைபிடித்து செழும்
மண்டோதரிபின்னைக்கொண்டுபின்னே

குறைவாயரைப்பலமும் அரைக்
கோடிவயதுமேகோடனையாய்

வரவாங்கிவந்தவனே நீயோ
சரியற்றவல்லமைக்குரியவனே

நிறைபலமறிவோம் இப்புறம்
நெடுப்பிலம்பினைப்பிடுங்கென்றார்

ஆங்காரங்கொண்டெழுந்து நின்று
அதட்டிமனமிருபதட்டமதாய்

பாங்குடநெடும்பிறப்பை எட்டிப்
பற்றியவன்கையிற்சுற்றியங்கே

இழுத்தானேராவணன்தான் இந்த
எட்டுதிசைபூமிவட்டமெல்லாம்

தழைந்தமலைச்செடியும் பெருந்
தாரைபொருந்தியபாறைகளும்

பிடுங்கும்வேர்ப்பிடுங்காய்ப் பார்த்து
பின்னையும்ராவணனுன்னியுன்னி

திடங்கொண்டிருக்கலுற்றான் அரி
தேட்டம்பிறப்பதுநாட்டியங்கே

அசையாதுகண்டவுடன் இந்த
ஆண்டிப்பயலைநான்வேண்டியதுக்

கிசைகேடுசெய்தனனே பாரென்
றிக்கணங்கோபங்கொண்டெழுந்து

சிவனுரைவந்துகண்டு உன்னைத்
தேடியுநான்முன்னேபாடுபட்ட

தவத்தினுக்கிதுதானே செழுந்
தண்டாமரைமுகவண்டோதரி

மறவாள்அரைப்பலமும் வாங்கி
வந்தனேநீயென்றுதந்துடனே

திறமைமிகுத்தவொரு மனங்
தேட்டங்கொள்கத்திரித்தோட்டமுளோன்

இருந்தானிவையுரைத்தான் என்று
எண்ணியேராவணன்சொன்னவகை

அறிந்தான்பசுபதியே வந்து
ஆயனுதவியமாயமிது

சரிதானெனவறிந்து பலத்
தாட்டிகராவணன்கேட்டபடி

குறையாதரைப்பலமும் குழல்
கொண்டமுகிலென்னும்வண்டோதரி

வயதுமறைக்கோடி வர
மாறுக்கொடுத்தந்நாழிகைக்கே

செயமென்றங்கனுப்ப மனங்
தேடிடும்பிரப்பதைநாடியங்கே

அரக்கன்வருகையிலே கண்டு
ஆயன்றிடும்பசுவரவமதாய்

திரக்கச்சலம்பெருகத் தெளி
சேற்றினிற்கத்தரிகாய்த்துநிற்க

பிறம்பைவெளிபதித்து சொல்லும்
பிதுருக்குமில்லாமல்புதுக்குடமாய்

திறம்பச்சலமெடுத்துக் கொண்டு
நிற்கையில்ராவணமுக்கியமாய்

வந்துபார்த்திப்பல்லவோ சரி
வல்லவனேயென்றசொல்லுரையின்

தந்துபார்த்திப்பல்லவோ பலத்
தாஷ்டிகனேநீயுங்கேட்டவரம்

பிடுங்கும்பிரம்பையென்றார் சொன்ன
பேச்சினிலேயொருமூச்சினிலே

தொடுங்காலமேபிறப்பு சுழுக்கினிற்
சுழன்றுவெளியில்அகன்றதுவே

சரியென்றனுப்பிவித்தார் அந்தத்
தந்துள்ளகாரணவிந்தையரி

திருமால்செயலருமை இந்த
சீரம்புவிதனிலாரறிவார்

தாங்காதபாரதத்தை நாமள்
சண்டையுமேசெய்துவென்றகதை

நாங்காணேனறியேன் புவியில்
நன்றாகப்பாரதம்வென்றகதை

அறுத்ததுசக்கரமே புகழ்
ஆய்ந்தகபாலங்களேந்தியது

ஒருத்தருமறியாரோ வென்று
ஓங்குளப்பலிவாங்கிவைத்த

அரவானுரைத்தவகை மொழி
நாட்டமுந்தானுமள்கேட்டிலையோ

கோபாலரிமுகுந்தன் நந்தன்
கோவிந்தனச்சுதன்சீர்விந்தையை

நமைத்தாங்குஞ்செந்திருவை அரி
நாரணன்முன்னுக்குநேர்நின்று

சமர்த்தொன்றுகாட்டினையே நீயுஞ்
சாவதுதானந்தப்பானமென்று

தருமர்உரைத்தமொழி பிலத்
தாஷ்டிகவீமனுங்கேட்டபின்பு

திறமேதடுமாறி நடை
தெள்ளும்மலங்களுந்தடுமாறி

நெடுமாருதிதுணையாம் விண்ணில்
நின்றதுவேகண்ணிற்கண்டுகண்டு
தடுமாறித்தட்டழிந்து கொண்ட
தாபத்தினுற்பெருஞ்சோபத்தினர்
தளர்ந்தேவிழிசொருகி விண்ணில்
தானரசாளவேவீமன்ரதம்
சுழன்றேயுயிர்பிரிந்து வீமன்
தூயவைகுண்டம்போயடைந்தான்

தனனுதன தனனு

விருத்தம்

நடைவழிதுணையில்லாமல் நம்மையுந்தனியேவிட்டு
புடவியின்மயக்குந்தீர்ந்து போனையோதம்பியென்று
செடியினில்மடிந்துவிட்ட செயலுளவீமன்றன்னை
மடியினிலிருத்தித்தர்மர் வாய்திறந்தாற்றலுற்ருர்.

தருமர்புலம்பல்-தரு-காம்போதி-ஆ-ம்

பாரவனந்தனில்யாருதுணைதம்பிவீமா நான்
பட்டுத்தவித்திடவிட்டுபாரிப்படிப்போமோ
ஊருதவியுமற்றபேருதவிதுணையில்லை நான்
உன்னைப்பிரிந்தினியென்னபலன்பெறச்சொல்லி
அங்கமெல்லாம்வெந்துபொங்குங்கனலைதுகொட்டி நான்
ஆவதுண்டாயினிச்சாவதுவேவருங்கெட்டி
பந்தமெல்லாம்நமக்கிங்குதுலேயுதுகண்டேன் வயிர்
பற்றிவெரியவேயொத்தைமரமதாய்நின்றேன்
தன்னெதிராகியமன்னர்படையொருபஞ்சு பசுந்
தங்கத்தினிற்சிவலிங்கத்தைகாட்டியநெஞ்சு
என்னைமறந்துயிர்தன்னைமறந்தென்விதியே தம்பி
இப்படியேவிட்டுத்தப்பினையேயிதுசதியே
அஞ்சுபேரும்ஒருவஞ்சியுமாய்வந்தகூட்டம் பிரிந்
தானடாஒற்றையானனடாகலிநாட்டம்

என்னசெய்வேனுனைத்தஞ்சமென்றேவந்தேன்பாவி கண்
யேகவேபார்த்துக்கொதித்துப்பறக்குதென்னாவி

வாட்டவனவாசக்காட்டுக்குநீயொருதந்தை கட்டு
மல்லுக்குஅம்பிட்டவில்லுக்குமஞ்சுமாசிந்தை

நாட்டமிருகத்தின்கூட்டங்களைத்தனைவருமோ இனி
நல்லவனீநானுஞ்செல்லவழியுமேதருமோ

இஞ்சுகமாகியபஞ்சணைமேற்றுயில்வாயே கண்
டெழுந்துபுயங்கள்புழுதிபுறளவேநீயே

வஞ்சனையோதம்பி துஞ்சினையோஒருக்காலே போக
மற்றவழியதுளைத்தனையோகுறுக்காலே

கிட்டக்கொண்டுவந்துவிட்டுநீபோனாயோதம்பி கெதி
கெட்டினியேவிட்டிட்டெரியுதேகும்பி

தட்டுத்தளமெல்லாம்வெட்டிப்பலியிடத்தினையே அது
தன்னைநினைத்திடயென்னென்றுதேருவேன்துணையே

சிங்கம்புலியானைபங்கப்படுத்தியகாலை பற்றி
செல்லத்துறத்தியேவெல்லுவதாருன்னைப்போலே

எங்ஙனம்நான்தம்பியுங்களையும்வந்துகாண்பேன் இந்த
எண்டிசைதாண்டிவைகுண்டபதவிபூண்பேன்

ஊன்றுசுழுமுனைதாண்டிவிழுந்தந்தவேளை தொண்ணூ
றென்பதெனப்பெற்றசெம்புத்தண்ணீர்கொண்டாய்க்கீழே

என்றகலகமேபூண்டபலங்கொண்டவகையே ஒ
ரேழைக்கீழேயானைபெருக்கினதுகொண்டதுரையே

அந்தவலிப்பிலம்எந்தவழிதப்பிச்செல்லும் பின்னே
யானாலெமனென்னைத்தானேவிட்டெப்படிக்கொல்லும்

எந்தவிதந்தம்பியுந்தனைவிட்டுநான்பிரிவேன் எதிர்த்
தெல்லைமிருகத்தைகல்லைகொண்டோதம்பிஎறிவேன்

நேருளவென்றம்பியாரிறந்தாலென்னசேதம் இரு
நேத்திரம்போல்நீர்மாத்திரமிருந்தாக்காற்போதும்

ஆரோதுணைதம்பிபோரயிடத்தினிற்றருமோ எனக்
கச்சமில்லாமலேபட்சிகள்தான்றுணைவருமோ

வாய்த்தமதிமுகம்பூத்திருமேனிகொண்டவனே இந்த
மண்ணிற்கிடக்கவுங்கண்ணிற்கண்டேன்சிவசிவனே

நேர்ந்தசமருக்குப்போந்தபுலியுந்தன்கோபம் உன்னை
திருத்திவிட்டுப்போகவுறுத்திலையேமனஸ்தாபம்

காக்கையுமேரிட்டுபார்க்குதுணைத்தம்பிகூடி செங்
கருப்புச்சுகியுமேநெருக்கிவருதிசைதேடி

தாக்கழகாவுனைத்தூக்கிநடப்பனேதொட்டு நான்
தனியானவனத்தினிலுன்னையுமறப்பேனோவிட்டு

தொட்டதுணையென்னைவிட்டுமறந்துயிர்போச்சே அரி
சொந்தப்பதத்துறுவிந்தைக்கூத்தானெருமூச்சே

கட்டழகாகட்டும்கட்டும்மட்டழகாதெளியாயோ பல
கற்றதம்பியுந்தன்நித்திரையும்விழிப்பாயோ

சொந்தநமக்கென்றுவந்ததுரோபதைபெண்ணே கலை
சுற்றியவிழக்கையில்மெத்தசிவந்திட்டகண்ணே

எந்தவிதத்துடல்சிமிட்டிநீகொண்டாய் கதி
யீயத்திறம்பெற்றவைகுண்டவான்பதிசென்றாய்

ஆசைப்புனத்தினிற்பேசுங்கிளிகளைத்தானே சென்று
ஆவென்றதட்டியேபார்த்துமிரட்டிடுவோனே

பேசுமனதிற்கூசுவதாய்ச்சும்மாயிருந்தாய் என்னை
பிரித்துதனிக்கநிறுத்திடவோவுயிர்துறந்தாய்

ஆற்றினிரெங்களைச்சேர்த்துச்சுமந்துநீவந்து மெல்ல
அக்கரைதாண்டியவக்கணைதானெங்கேநொந்து

பார்த்துபறந்திடநூற்றுவர்தங்களைநீயே இங்கே
தண்டாயுதமென்னும்தெண்டாயுதம்பிடிக்கையே

கூற்றுவன்வந்தாலும்பார்த்துநடுங்குமோவுள்ளம் வென்ற
குந்தவுங்காற்கீழேவந்ததுவாதம்பிவெள்ளம்

சேர்த்தசமருக்குவாய்த்தபெருங்கச்சைமருங்கே தம்பி
சென்றிங்கேவீழ்ந்ததுபார்த்துமனஞ்சற்றேயிரங்கே

வனதுரியோதனன்மூன்றுடைதட்டியும்மருங்கே சூரர்
மாளச்சமரினில்வேதத்தைப்போல்வருங்கரங்கே

இந்திரன்காரணமருந்திருமாலுடகோலம் பல
ஏந்திழையார்மெச்சும்காந்தியுளானென்னசாலம்

வண்மைத்தடத்திலேமேன்மைவடதிசைநடந்தான் புகழ்
வாசன்துரைதர்மராசனுமொண்டியாய்நடந்தான்

தேடிவனத்தினிற்பாடிக்குலாவியகிளியே செழுஞ்
சீதளக்காவுற்றகேதாரத்துக்கெங்கேவழி
சாடைகுயிலன்னப்பேடுகளேயுங்கள்போலே நான்
தாங்குந்துணைவிட்டேனுங்கள் துணையினிமேலே
விண்ணவரேங்கிடவெண்ணிமனத்திடைத்தானே அங்கே
வீரியமேகொண்டசூரியன்போயடைந்தானே.

விருத்தம்

துங்கபச்சைப்பரித்தேரிற்பகலோன்வெய்யோன்
சூரியன்போயடைந்தவுடன்தருமராசன்
அருவனத்திலொருவனுமாய்த்தேம்பித்தேம்பி
கங்குல்தனிலிடைதுவளநடைதள்ளாடி
அங்கமரத்திருநகரிதனைக்கொண்டாடி
கால்கள் துடையசந்ததினலாடிக்குள்ளே
செங்கணெடுமால்பதத்தைதுணைகொண்டங்கே
திருத்தருமன்படுத்துநித்திரைசெய்தானே.

வசனம்

இந்தப்பிரகாரம் தருமராசன் தனியே புலம்பிக்கொண்டு போகும்போது சூரியன் மறைந்துபோனன் அன்றிரவில் ஒரு ஆலமரத்தின்கீழே தூங்கிக்கொண்டிருந்தார் அப்போது ஒருநாகம் வருகிற விதம் எப்படியென்றல்.

தரு-பியாகு-அ-ம

பல்லவி

நாகமுந்தோன்றியதே ஐந்துதலைபெற்ற
நாகமுந்தோன்றியதே

அநுபல்லவி

நாகமுறைந்துபசி யாகவிரைந்துஎட்டி
நடந்துமலைச்சரிவில் அடர்ந்துவரச்சுருதி
வேகமறுதடத்திற் போகத்திசையில்லாமல்
விஷத்தையடக்கித்தலை யசைத்துப்படம்விரித்து-நாக

சரணங்கள்

பாரிற்பெருத்தகல்லு காரில்வளைத்தயெலி
பார்த்துபெருமூச்சாலே பூத்துப்பூத்தெனவே
சீரிச்சினந்துகோபம் மீரிவிழிகள்ரண்டு
சிவக்கக்கதித்தபசி தவிர்க்கப்படம்விரித்து-நாகமுந்

எழுத்துங்கருப்புப்பொறிக் கழுத்துநாசியும்பல்லும்
ஏற்கச்செவ்வறிபெற்ற நாக்கைவருவிற்கொண்டு
அழுத்தமுடனுடம்பு நெளித்துப்பின்வால்சுற்றி
அகன்று அவ்விடம்விட்டுப் புறண்டுபடம்விரித்து-நாகமுந்

பாலிலதிகமொழி நாலுதம்பிகள்துரோ
பதையும்பிரித்துஅயன் விரவின்பயனையெண்ணி
ஏலுந்துலங்கவட வாலின்மரத்துக்குள்ளே
இசையத்தருமர்துஞ்சுந் திசையிற்படம்விரித்து-நாகமுந்

விருத்தம்

நல்லவைந்தலைநாகம்பெரும்பெறும்
தொல்லைநீக்கித்துயில்தருமராசனை
பல்லுமேனிதனிற்பட்டிடாமலே
மெல்லமெல்லவிழுங்கியகாலமே.

வசனம்

இந்தவிதம் வந்த நாகமானது தருமராசனையெடுத்து விழுங்கிப்போட்டது அப்போது நாகத்தின் வயிற்றுக்குள்ளே தூக்கந்தெளிந்து புறண்டுபார்க்கிறபோது விஷ்ணுசக்கரம் வறுகிறவிதம் எப்படியென்றால்.

தரு-பந்துவராளி-அ-ம்

பல்லவி

சக்கரந்தோன்றியதே திருமால்வகைச்
சக்கரந்தோன்றியதே

சக்கரம்நெடியாமல் அக்கணம்விரைந்தந்த
மிக்காற்றுரைதர்மன் பக்கலிலனுப்பிய-சக்கரந்

### சரணங்கள்

சிறக்கவுமுகம்பிளந்த திறக்கவும்வெண்கொடி
பறக்கவுந்தென்னிலங்கை அரக்கர்குலமறுத்த-சக்கரந்

கோனே அரவக்கொடி யானேமும்மதங்கொண்ட
யானேபதினெண்ணக்குரோணி சேனேதனேயறுத்த-சக்கரந்

### விருத்தம்

தருமர்தனே விழுங்கவவைவிலக்கிமீண்டு
சக்கரமுமறையநிலமீதில்நின்றே
உரிமைதருதுரைதருமன்திசைத்துப்பார்த்து
ஒன்பதுயோசனேதூரவழியுந்தாண்டி
வருணமலேதனேக்கடந்துவடக்குநோக்கி
வரும்வழியில்மும்மலேயின்வகைசண்டஞ்சக்
சிறுகடலில்சக்கரமுமலேயைத்தூளாய்
சிதறிவிடத்தர்மர்வழிதிடங்கண்டாரே.

### வசனம்

இப்படிவந்த சக்கரமானது அந்தப்பாம்பைப் பிளந்தெரிந்த போது தருமர்பின்னும் எண்பதுயோசனே தாண்டிப்போக அங்கே வழிகாணுமல் மலேயொன்று மறைத்துக்கொள்ள சக்கரம்வந்து அந்தமலேயைத் தூளாய்நெருக்க பின்பு தருமர் நடந்துபோனுர்.

### விருத்தம்

மருண்டிடும்விழியாள்நாக வல்லிமாநதியின்மன்னன்
திரண்டநீராடிநிற்கச் சிறங்கொடுசீழும்புண்ணும்
இரண்டுவாய்திறந்துநாக்கா லெட்டியேமூக்கைநக்கி
சுருண்டவால்சிறியகுட்டிச் சுணங்கனுந்தோன்றிற்றன்றே.

### வசனம்

இந்தப்பிரகாரம் தருமராசன் நடந்து நாகவல்லிமா நதியைக்கண்டு ஸ்நானஞ்செய்து கரையிலேநிற்கிறபோது ஒருநாயானது உடலெல்லாம் சீழும்செந்நீரும் ஒழுகப்பிடித்து நாவைநீட்டி வாலாட்டிக்கொண்டு தருமராசனுக்கு முன்னுகவருகிறவிதம் எப்படியென்றுல்.

தரு-பைரவி-ஆ-ம்

பல்லவி

சுணங்கன்வந்ததுவே-சிங்கப்பல்
சுணங்கன்வந்ததுவே

அநுபல்லவி

சுணங்குவந்தது இணங்குதிண்புய
சொந்தத்திருப்பதி விந்தையரிபதம்
இணங்கக்காவன மணங்கொள்பாதையி
லேகையிலேநாக வல்லிதன்னுற்றிலே-சுணங்

சரணங்கள்

வீரச்சுணங்கிது பேரைச்சொல்லாமலே
விட்டவன்றான்றப்பிப் பட்டுக்கொண்டான்பின்னே
சூரச்சுணங்கிது வீறும்புயமெல்லாம்
சோரியாய்மெத்த நாறியநீருடன்-சுணங்க

தொடுவழக்கானதும் இடும்பொய்மைச்சாட்சியும்
சொல்லப்பட்டோரிவன் பல்லுக்கிரைதப்பி
கடைவாயிடத்திலே களவாய்சிந்தவும்
கானிலேதருமர்முன் கூனிநடந்தொரு-சுணங்க

விருத்தம்

நல்லழகுவடிவுபெற்றசுணங்கன்மேனி
நாறுபுழுபூச்சியொடுசொரியும்சிந்த
சல்லியம்விட்டகல்பவனேநாகவல்லி
தயவுகங்கைதாண்டவேணும்சுவாமி
வல்லவனேஎனைக்கொண்டுகரையிற்சேர்த்து
மகாபெரிதுபிழைப்பனெனவாஞ்சையோடு
சொல்லழகைச்செவிபுகுதக்கேட்டபின்னே
சுணங்கதனைத்துரைதருமன்தூக்கினனே.

வசனம்

இந்தப்பிரகாரம் வந்தநாயானது தருமராசனைப்பார்த்து தருமராசனே நான் இந்தநதியைக் கடந்து அப்பாலே போகவேண்டும் தயவுசெய்து என்னை யெடுத்துக்கொண்டுபோய் இந்தநதிக்கப்பாலே

விட்டால் புண்ணியமென்றுசொல்ல தருமராஜர் அந்த காயைத் தூக்கிக்கொண்டார்.

தரு-கப்பற்சிந்து

ஏலேலோ-ஏலேலோ—தத்தையா
ஏலேலோ-ஏலேலோ

சீர்பரவும் அத்திபுரம்—தன்னில்
சிறந்திலகும் தருமதுரை
பேர்பெறவும்-ஐவர்துணை—நீங்கி
பெரியநதிக்கரையோரம்
கார்பரவுஞ் சோலைதன்னில்—வந்த
காலமதில் காரிநமன்
ஊர்பறவும் சுணங்குருவாய்—அங்கே
உற்றடைந்துமிகவணங்கி

முடுகு

ஐயனேகுருகுலத்தரசர்கோவே
அழிவிலாக்கீர்த்திசாலத்திமாநகரோய்
மெய்யனேயிவ்வேளைமெலிவுறுமென்னை
விட்டுவிடுமிந்நதித்திட்டுமிசைமுன்னே
பையவேதூக்கிநீகொண்டுபோவென்று
பணிவுடன்நாய்சொன்னவார்த்தையைக்கொண்டு
கையிஞலேந்தியேநதிதனிற்சென்று
கழுத்துமேலெழுகின்றதன்புதனில்நின்று
நீந்திடும்போதிலேதேவருங்கண்டு
நீதியேயுருவானவேந்தனிவனென்று
மாந்தராய்வந்தவர்தன்னிலிவன்போலே
மனிதனில்யாங்கண்டதில்லையினிமேலே
சாந்தமாய்நிகழ்கின்றசெய்தியும்பார்ப்போம்
தருமதுரைதன்னைநாம்சந்ததம்காப்போம்
யோசந்துநீரிருமென்று அந்தரமேவி
பூமாரிதான்பூமிநிறைந்திடத்தூவி

இருந்திடும்போதிலே எங்கள் துரைதர்மன்
இருக்கையிலந்நாயை யேந்தியேதர்மம்
பொருந்தாதநெஞ்சனுய்ப் போயிடும்வேளை
புகுந்தநீர்வெள்ளமே தலைகொண்டதாலே
வருந்தாமல்நாய்தனை தலைமீதிலேற்றி
மன்னவன்வைகுண்ட நாதனைப்போற்றி
பொருந்தியேசென்றிடப்புழுவுடன்சோரி
போக்கியேயுடலெல்லாம்பெருகிடத்தேரி
அருவருக்காமலேதுரைதன்மராசன்
அரிபதப்போற்றியேதுகளிலாநேசன்
வரும்வித்தைகண்டுமாநதியுமேஅஞ்சி
மாலேகமில்லாமல்குறுகினுள்கெஞ்சி
இரும்வினைக்கஞ்சாதஇறைவனுந்தர்மன்
எடுத்தநாய்வருந்தாமலேமன்மதன்
திருவினைப்பிரியாதசிதரன்போலே
சென்றனன்வேகநீர்மாநதிப்போலே.

ஏலேலோ யேலேலோ

விருத்தம்

துங்கவெண்சுணங்கின்வேடந் தொட்டபுல்லுருவநீங்கி
இங்கிதமானமேனியமதன்மனுருவமாகி
சங்கைசேர்தருமன்தன்னைத்தழுவியேயனுப்பவேகி
அங்கொருவனத்திற்றங்கியகன்றுகேதாரங்கண்டார்.

வசனம்

இந்தப்பிரகாரம் தருமராஜாவானவர் சென்று நதிக்கரையேறும்போது எமதருமராசாவானவர் அந்தநாயினுயிரும் நீங்கித் தனது சுயரூபத்தை யெடுத்துக்கொண்டு தருமராசனை மார்புடனணைத்து ஆசிகூறி யனுப்பிவிட்டு எமலோகம் போனார் பிறகு தருமராசன் ஸ்ரீ கேதாரத்தை வந்து தரிசித்தார்.

விருத்தம்

தனிதனிகர் அத்திபுரத்தரசுபூணும்
தருமர்வந்தமொழிப்பெருமைதிருமால்கேட்டு
மனந்தனதுக்கதிபதியுமுனிவர்தேவர்
மகிழட்டவசுக்கள்கந்திருவர்சித்தர்
சன்றவெண்சாமரைசுருட்டிக்குடைகளாட
கன்னியர்கள்புடைசூழவிரைந்தேவந்து
தனதினியபுகழ்பெரியகேதாரத்தில்
தருமனையும்வந்துகட்டித்தழுவினாரே.

விருத்தம்

மேவுவெண்குடைகளாட விண்ணவர்மகிழ்ந்துசூழ
தாவியேதருமனோடு தனதுகேதாரந்தாண்டி
தேவையர்நடனம்போல சென்றவர்விரைந்தகாலே
பூவையர்நடனமாடப் பொன்திருநதிகண்டாரே.

வசனம்

ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் தருமராசனை அழைத்துக்கொண்டு கேதாரத்தை விட்டுப் புறப்பட்டு தேவதுந்துமி முழங்க சகலதேவ கூட்டங்களோடுஞ் சென்று பொன்விளைவைச் செய்யாநின்ற தேவ கங்கையைக் கண்டார்கள்.

தரு-சங்கராபரணம்-ரூ-ம்

தென்னவனிந்திரன் தேவர்தமக்கோனே நல்ல
தென்னதிகண்டுதருமர்தனக்குரைப்பானே

முந்தியபாரதவிந்தைப்பதத்திடையாசை நீ
இந்தநதியிலிறங்குந்துரைதர்மராசே

குத்தமோபாவங்குருக்கள்தனைக்கொன்றஆசை நீ
கொண்டதீரமுழுதுந்துரைதர்மராசே

தன்பெரும்பாவங்கள்தரணிதனிலுள்ளவாசை நீ
அன்புந்திதன்னிலாடிந்துரைதர்மராசே

வாழ்த்தியசெந்திருவைகுண்டவாழ்பதிஆசை நீ
கீர்த்தியருந்தவம்கிட்டுந்துரைதர்மராசே

மங்களஞ்சேர்திருவைகுண்டவாழ்பதியாசை நீ
அங்குநதிதன்னிலாடுந்துரைதர்மராசே

சுக்கெனவைகுண்டஞ்சென்றுபிடிக்கவுன்னாசை நீ
அக்கணமானதியாடுந்துரைதர்மராசே

முத்திபெறவென்றுமுன்னமுருந்ததுன்னாசை நீ
முக்கியமாநதிமூழ்குந்துரைதர்மராசே

என்றைக்கும்வைகுண்டமென்பதுவேயுனக்காசை நீ
அண்டித்திருந்தியாடுந்துரைதர்மராசே.

விருத்தம்

மிக்கதிருமகபதிதன்மொழிதப்பாமல்
மெய்யதுவேகுளிர்ச்சிபெறமயக்கந்தீர
தக்கநதிதனிலாடிக்கரையிற்சேர்த்து
தங்கநிறவுடலதுவாய்தருமர்நிற்க
சக்கரமால்துணையுதவிசரிதானென்று
சாலதிருவானவருந்தயவுபூண்டு
பொற்கருணைநதியாடியெமலோகத்தில்
போயினன்துரைதருமன்போயினனே.

வசனம்

இந்தப்பிரகாரம் சொன்ன நதியில் மூழ்கிய தருமராசன் வினைகளை யுதறிப்போட்டுத் தேவகணங்கள் சூழ்ந்துவர எமலோகத்தைப் போய்க்கண்டார்.

தரு-நீலாம்புரி-அ-ம்

இனியபுகழ்தான்தழைக்க துணை
யெமராசன்புகழ்பாட
கனிவுபெறுதனியவனே தொந்திக்
கணபதிநீமுன்னடவாய்
காவனந்தம்பூவனந்தம் இனிய
கனியனந்தம்கிரியனந்தம்

மாவனந்தம்தேவனந்தம் செந்நெல்
வயலனந்தம்கயலனந்தம்
நதியனந்தம்கெதியனந்தம் வன
நாடனந்தம்காடனந்தம்
நிதியனந்தம்கதியனந்தம் அந்த
நேர்கிழக்குவாசலிலே
ஆணிமுத்தால்தூணிருத்தி எங்கும்
அணிப்பவளவரைநிறுத்தி
மாணிக்கமாப்பலகையிட்டு மற்ற
மணிகளெல்லாம்வெளிபதித்து
முற்றமெல்லாஞ்சுற்றவெள்ளி கோட்டை
முன்கதவோபொன்கதவு
சித்திரங்களுத்திரங்கள் ஒன்றும்
செப்பாமல்நிற்பதுவே
மட்டடங்காபந்தலிட்டு அணி
மாமகுடத்தோரணங்கள்
கட்டுங்கொடிமேற்பரக்க வெள்ளைக்
கவரியிருபுடைதிகழ
தேவரெல்லாஞ்சுற்றிவரத் திருத்
தேவேந்திரன்முன்னடக்க
பாவையர்நாட்டியமாட ஏமன்
பருவதத்தினுள்புகுந்து
வீதியெங்கும்போதிகளும் எங்கும்
மின்னும்வச்சிரத்தூபிகளும்
கோதைசிறுமாதர்கையால் அள்ளிக்
கோலமிட்டதிண்ணைகளும்
தாபமுடன் இந்திரனர் வந்து
தங்குந்திருமண்டபமும்
தேவர்வந்துபூசைசெய்யும் கட்சி
சித்திரமணிமண்டபமும்
மேன்மாடகூடங்களும் செம்பொன்
மேலிடுநற்கோபுரமும்

பூமாடகூடங்களும் எங்கும்
பொன்கலசமுகடுகளும்

நமராசன்மாமறலி செங்கோல்
நன்னயஞ்சேர்பொன்னகரி

எமராசன்பட்டணந்தான் பார்த்தா
லெங்கும்வெறுந்தங்கமதே

தேவேந்திரன்முன்னடக்க மனந்
தேம்பிதர்மர்பின்னடக்க

மாவேந்தன்மாமறலி கொலு
மண்டபத்தைவந்துகண்டார்

விருத்தம்.

கருணைதன்கடாவிலேறுங் காரணுதுணையென்ருகும்
திரணமேபவமண்டாமற் றேடிநாம்பெருமைபூண்டு
இரண்டுமுந்தருவாரான ஏமராசனைக்கொண்டாடி
சரணமென்றருமைப்பாதம் தருமனும்போற்றினனே.

விருத்தம்

புகழ்ந்துபதத்தடியினிலேமலரைத்தூவிப்
போந்தமனதொருமனதாய்வீழ்ந்தகாலை
சிரமெனுங்குந்தமாதேவியுருண்டைவாங்கி
திண்மையிலேநமதுபங்குபிறந்தவேந்தன்
மகன்றயவாய்வந்துதித்தலைச்சன்பேறு
மங்காமல்நிலைநிறுத்திமன்னநீயும்
சுகம்பெறுவாயென்றுசொல்லியேமராசன்
தூக்கினன்தருமர்தனை தூக்கினனே.

விருத்தம்.

இருகரங்குவித்துத்தர்மனேமராசனைக்கொண்டாடி
தருகதிகாணுங்காட்சிதயவுபாக்கியமேபெற்று

கரியமாலயனைப்பெற்றகாரணம்தருகோவிந்தன்
அரிபதத்தருவைகாணயடியேனை அனுப்புவாயே.

ஏமன்சொல்-விருத்தம்

செய்யநல்மறலிகேட்டுச்சிந்தையுமிகக்கொண்டாடி
அய்யனேகுருவைக்கொல்லஆணையுமிறந்ததென்றே
பொய்யதையுரைத்தபாவம்பொடிபடத்தருமநீயே
பையவேநரகைச்சென்றுபார்த்துநீவருகுவாயே.

தரு-கரகப்பிரியை-அ-ம்.

போமென்றுரைத்ததூதன் ஆமென்றெழுந்துபாவம்
பூட்டுமார்கைக்கொண்டேகாட்டுதற்கு
ஏமனுரைத்தமொழிவாய்மைதப்பாமலே
இடைகுவளத்தர்மன்நடைநடந்தே
தற்கம்பண்ணுமற்றாதர்மெய்க்கடந்துபல
தாஷ்டிகத்தர்மனையுங்கூட்டியங்கே
மிக்கவஞ்சனைபில்லிவைக்கின்றபேர்களை
வெட்டியடக்கப்பெருங்குட்டையைப்பார்
கோளைப்புறட்டைச்சொல்லியேழைதனைக்கெடுத்த
குலங்கள்தனக்குப்பூட்டுவிலங்கதுபார்
வேளைக்குச்சொல்லிப்பின்னேநாளைக்குளஎன்றவர்க்கு
வேறுசொல்லவக்கினித்தூணதுபார்
வரம்பையழித்துவிளைவிரும்பிக்குறைத்தபேற்கு
வைக்கச்செயுமிருப்புமுக்காலிபார்
திரும்பஅழிவழக்கைவிரும்பிக்கொடுத்தபேர்க்கு
திருடர்தனக்கிருப்பக்குறடதுபார்
விடையிற்புகழ்பெரியகொடையைத்தடுத்தபேர்க்கு
வீசிப்பிடித்தெறியும்பாசமும்பார்
அதிரக்கைக்கூலிபற்றியிருசாட்சிசொன்னபேர்க்கு
அவரைப்பிடித்துக்கட்டுங்கயிறதுபார்
மெத்தக்கடுப்பரிசைக்குற்றசிட்டுள்ளவன்றான்
மேலிட்டெறியக்கையிற்சூலத்தைப்பார்

குற்றமில்லாரிடத்திற்குற்றமென்றவன்றன்னை
கூட்டியடிக்கமணிச்சாட்டையைப்பார்
தந்தைதாயின்சொல்லைமுந்திச்சினந்துசீறி
தாண்டியவர்க்கிசைந்ததூண்டியைப்பார்
வந்துயர்வேலைகொண்டுவந்துங்கூலிகுறைத்த
மக்கள்தனையரைக்குஞ்செக்குநீபார்
காமத்துரோகனுக்குச்சாமத்துரோகனுக்கு
கழுமுழுபாதகர்க்கும்மழுவினைப்பார்
மேன்மைக்குருவுரைத்தநேமத்தைவிட்டவர்க்கு
விரும்பியடிக்குநல்லபிரம்பையும்பார்
கெஞ்சக்கெஞ்ச அடித்துப்பஞ்சைப்பொருள்பரித்தோர்
கிட்டுங்குழியிற்றேளும்அட்டையைப்பார்
கொஞ்சக்கைகூலிபற்றிவஞ்சவழக்குரைத்தோர்
குழியிற்கிடந்தரவுநெளியுதுபார்
மெத்தப்பெரும்பாவத்தைநத்தினபேர்புயத்தை
மேச்சல்தனக்கெழும்பும்பூச்சிகள்பார்
எத்தனைபாவமென்றுஉத்தமனேதர்மர்
எண்ணுவதாரிந்தமண்ணுலகில்
ஓங்கும்பெருநரகில்பாங்குவழிவிஸ்தாரம்
ஒன்றுக்கேழ்யோசனையெண்ணியது
ஆங்குநரகமென்றபாங்குஎண்ணிக்கையேழு
அத்தினைக்கும்பாவத்தார்ளெத்தினைபேர்
வையம்புவியைவிட்டுச்செய்புந்திருப்பதிக்கு
வாமிகப்பெற்றுவந்ததுரைதருமர்
செய்யுஞ்சமரிலொழிபொய்யைநீசொன்னதினால்
தேட்டநகரமிதோகாட்டிவிட்டோம்
மற்றபாவங்களுக்குஎத்தனையோதண்டனை
மன்றுபுகழ்தருமர்கண்டுகொள்வாய்
சற்றும்பெரும்புவியில்நத்தும்பவமில்லாமல்
தப்பிப்பிழைப்பவன்தானெப்படியோ
மெல்லத்திருச்சபையில்சொல்லப்படாதபாவம்
எத்தனையிருக்குமோஅத்தினைக்கும்

அல்லல்பெரும்புவியில்தொல்லைப்பெரும்பாவத்தால்
அண்டுபெருநரகங்கண்டனரே

விருத்தம்

ஏவலாற்றூதர்சொன்ன வெழுநரகதனைப்பார்த்து
நாவினல்மொழியொணுத நரகினிற்கிடந்துலாவும்
கோவலன்பதமேகிட்டாக் கொடியநூற்றுவர்கள்தன்னை
காவலன்றருமராசன் கண்டுநின்றகலலுற்றான்.

அகவல்.

தருமனுமந்தத்தனிநரகதனை
யொருமுறைபார்த்துஒதுங்கிநின்றிடவே
வருகிறதூதர்வணங்கியேயையா
மாயவன்பதத்தில்வாருமென்றழைக்க
என்னிடத்தம்பிகளினியதுரோபதையும்
எவ்விடமுற்றாரியம்புவீரென்றார்
மன்னவாவானோர்மாயவன்பதத்தில்
மன்னினார்கண்டுமகிழுவீரென்ன
மாயவன்வாழும்வைகுண்டபதவி
போயிடத்தூரம்புகலுவீரென்றார்
எந்தலேகேளீரேற்றவைகுண்டம்
பாந்தமாயுமக்குப்பக்கமாய்க்காணும்
பாவிகள்தமக்குப்பகரொண்ணுதூரம்
மேவிடவொண்ணுவேந்தனேவாரும்
என்றவரழைத்துஏகிடுங்காலை
மன்றலார்சோலைவளம்பலபார்த்து
நின்றுநின்றங்கேநேர்மைகள்பலவும்
ஒன்றுமேதவிராதுற்றவர்பார்த்து
இந்திரன்முதலாயாவருங்கூடி
துந்துமிமுதலாந்தொனிமிசுவெழும்ப

சந்திரன்பதமும்சதாகதிபதமும்
முந்தியவசுக்கள்மொழிந்திடுபதமும்
ஒவ்வொருபதமாயுற்றவர்பணிந்து
கவ்வியவினைகள்கழல்தரச்சென்று
கமலப்புத்தேளமர்ந்திடுபதத்தை
காவலர்காட்டப்பூவலன்கண்டு
அமலனேபோற்றிஅந்தணாபோற்றி
அருமறைநாலுமருளினைபோற்றி
நான்முகத்தவனேநற்குணமூர்த்தி
நாரணனளித்தஞானசித்துருவே
நாமகள்தன்னைநாவினில்வைத்த
நம்பனேபோற்றிநம்பினேன்போற்றி
என்றுமேதருமன்யேத்தியேபணிந்து
எழுந்துமேபின்னுமேகியபோதில்
நித்தியசூரிகள்நெருங்கியேநிற்க
பத்திசேர்முனிவர்பரவியேநிற்க
எத்திசைதனிலும்இயம்புதற்கொண்ணாப்
பத்தரைமாற்றுப்பைம்பொனைக்காண
வச்சிரமுத்துவளரொளிநீலம்
உச்சிதப்பவளரொளிமுளவகைமணிகள்
எண்ணிலாக்கோடிசூரியரெனவே
கண்ணிணைகூசக்கதிர்படப்பிடவே
தேவகந்தருவர்சித்தர்கள்சாத்யர்
இயக்கர்எட்சர்வித்தியாதரரும்
ஆவலாய்ச்சூழ்ந்துஅடிமலரிறைஞ்ச
கருடனும்சேஷன்கணம்பெறுசேனைக்
கத்தனேமுதலாம்முத்தருஞ்சூழ
அனந்தன்மீதேஅருதுயிலமர்ந்து
மனவாக்கெட்டாவைகுந்தநாதன்
இருதொளிர்பதியைஇருங்கணாற்கண்டு
பரிந்துடல்சிலிர்த்துப்பலமுறைதுதித்து

நெருங்கியேதிருமால்நெடியவனருகில்
நேருடன்கின்றுநிகழ்த்துவார்தருமர்

தருமர்துதிசெய்கிற-தரு

இ-ம்-இந்துஸ்தானிக்-காப்பி-ஆ-ம்

பல்லவி

வரமதுதரவேணும் ரங்கநாதனே
வரமதுதரவேணும்

அநுபல்லவி

வேணும்ரங்கநாதனே விண்ணவர்தொழும்பாதனே-வரமது

சரணங்கள்

திருமலேவாசசுகா திருமகள்நேசசுகா
திருமகள்நேசமகா வருணமிகுமீசனே-வரமது

வேதன்முதல்மாதவர்கள் ஓதுஞ்சகதீசனே
ஓதுஞ்சகதீசனேஎனைப் பாதுகாரங்கேசனே-வரமது

கார்வண்ணகாளிந்திதாசன் காதலுக்கருபோதனே
காதலுக்குஅருள்போதனேயெனை யாதரிக்குநீதனே-வரமது

கீ-ம்-இந்துஸ்தான்-ஆதிதாளம்

பல்லவி

வேண்டிக்கொண்டேன் சாமியுனை
வேண்டிக்கொண்டேன்

அநுபல்லவி

துண்டலற்றசோதியேயென்சூழ்வினைதீராதியே

சரணங்கள்

வேண்டியுன்புகழை விள்ளும்அடியர்தம்
வேதனைதீர்க்குமென் நாதாகிதம்

பாண்டவரச்சித்தபாதனென்பாருந்தன்
பாலரைக்கார்க்கலாகாதா
விண்டலந்துதிகொண்டவனே
வீரனேயுலகுண்டவனே
தொண்டனுங்காளிந்ததாசனின்
தோஷம்தீர்த்தருள்மாசுவிண்டவனே வேண்டிக்

இந்தவிதந்தருமதுரைமாயன்றன்னை
யேத்திமிகத்தோத்தரித்துநின்றகாலை
அந்தநெடுமாயவனுமன்பாய்பார்த்து
அன்புநிறைபுனிதவனேவாராயென்று
செந்தகையமலர்க்கரத்தால்வாரித்தூக்கிச்
சிந்தைதளர்ந்திடவேண்டாம்உன்னுேடுற்ற
விந்தைசெறிதம்பியரும்தேவியாளும்
விளங்குகிறவகைவிபரம்விளம்புவோமே வேண்டிக்

என்றுசொல்லிகாட்டிடவேகண்டுமன்னன்
இளகிமனவாஞ்சையதாய்நிற்குங்காலை
அன்றுமவரோடிவந்துதருமன்காலில்
அன்புடனேபணிந்துமவராசிகூறச்
சென்றுமொருசார்புரைந்தார்தருமராசன்
செகமகிழவழிவில்லாத்திருமால்பாதம்
நின்றுசலந்தொன்றுகிமுத்திவீட்டில்
நிறைந்திட்டார்பூர்வவினைமறந்திட்டாரே வேண்டிக்

---

## மங்களம்

பல்லவி

மங்களம் மங்களம் ஜயசுப
மங்களம் மங்களம்

அநுபல்லவி

சங்காழிகையற்கும் சாமளமெய்யற்கும்
மங்களகாரற்கும் மாதுலட்சுமிக்கும்-மங்களம்

சரணங்கள்

கருடக்கொடியர்க்கும் கானவிநோதர்க்கும்
அருடருமாங்கர்க்கும் அம்மைபூமகட்கும்-மங்களம்

நவமணிமுடியர்க்கும் நன்மறைமுடியர்க்கும்
பவமகற்றும்நீதர்க்கும் பங்கஜவல்லிக்கும்-மங்களம்

திருமலைவாசகர்க்கும் திவ்யப்ரகாசர்க்கும்
அருந்தவத்தோர்தொழும் அம்மைகாளிந்திக்கும்-மங்களம்

தருமர்திருவடிவாழ்க

மகாவிந்தநாடகமென்று வழங்குகிற

தருமநாடகம்

முற்றிற்று.

5A
6-53


விளம்பரம்.

மயர்வற மதிநல மருளப்பெற்ற

# ஆழ்வாராசாரியர்கள்

அருளிச்செய்த

# நித்யாநுஸந்தாநம்

ஸ்ரீயஃபதியாய், ஸ்ரீவைகுண்ட நிகேதனனாய், சர்வ வியாபகனாய், சர்வ தாரகனாய், சர்வ ரக்ஷகனாய், சர்வ போக்தாவாய், சர்வக்ஞனாய், அவாப்த சமஸ்த காமனாய், அகில புவன ஜன்ம ஸ்திதி லய காரணனாய் விளங்கும் ஸ்ரீமந்-நாராயணப்பெருமான் பெறற்கருள் தவப்பேறுடைய பகவத்கோஷ்டிகட் கநுக்ரகம் புரிவான்விரும்பி இப்பிரபஞ்சத்தின்கண் ஆங்காங்கு அர்ச்சாவதாரங்கொண்டு எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசங்கடோறுஞ்சென்று, எம்பெருமானது திருக்கல்யாணகுணத்தை முன்னிட்டு பன்னிரு ஆழ்வாராசாரியர்களாலும் திருவாய்மலர்ந்தருளப்பட்ட திராவிடவேதமென்னும் திவ்ய ப்ரபந்தங்களுள் இன்றியமையாச் சிறப்பினவாய் பாகவத சிரேஷ்டர்களால் பிரதிதினமும் முக்கிய பாராயணத்துக்குரிய திவ்ய திருப்பல்லாண்டு திருப்பாவை, கோயில் திருவாய்மொழி, இராமாநுசநூற்றந்தாதி முதலிய திருப்பாசுரங்களைத் திரட்டி 'நித்யாநுஸந்தாநம்' என்னுந் திருப்பெயரால் நல்ல கிளேஸ் கடிதத்திலும், விலை சுலபமாக வேண்டியவர்கட்கு ரப் கடிதத்திலும், பிழையில்லாமல் திருத்தி அச்சிட்டுள்ளோம். இதுகாறும் எவரும் இப்படி பதிப்பித்தது கிடையாது.

| தென்கலை சுத்தப்பிரதி | | வடகலை சுத்தப்பிரதி | |
|---|---|---|---|
| கிளேஸ்கடிதம் | விலை ரூபா 1 | கிளேஸ்கடிதம் | விலை ரூபா 1 |
| ரப்புகடிதம் | விலை அணா 12 | ரப்புகடிதம் | விலை அணா 8 |

பிரபன்னர்கள் அநுஷ்டிக்கவேண்டிய

## நித்தியாநுஷ்டானவிதி

சுத்தப்பிரதி ரப்புதிக்கடிதம் விலை அணா 4.

## ஆண்டாள் திருப்பாவை ௩௦-பாசுரமும்சரித்திரமும்

சுத்தப்பிரதி ரப்புதிக்கடிதம் விலை அணா 2.

அ. இரங்கசாமிமுதலியார் சன்ஸ்,

24, தாண்டவராயப்பிள்ளைவீதி சென்னை